தமிழா, ஆங்கிலமா?

ம.பொ.சிவஞானம்

இன்ப நிலையம்

தமிழா, ஆங்கிலமா?

2வது உலகத்தமிழ்க் கருத்தரங்கு மாநாடு
கலைக்காட்சிக் குழு
சென்னை

ம.பொ. சிவஞானம்

இன்ப நிலையம்
மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற்பதிப்பு; 26, ஜூன் 1961.
உரிமை பதிவு செய்யப்பட்டது.

விலை: ரூ. 1-50

ம. பொ. சி. எழுதிய
புதிய நூல்கள்

தமிழும் கலப்படமும்	1—00
சுயாட்சியா, பிரிவினையா?	1—00
சுதந்திர வீரன் கட்டபொம்மன்	1—50

பாரதம் அச்சகம், 14, உஸ்மான் ரோடு, தி' நகர், சென்னை-17.

முன்னுரை

இந்நூல், 'தமிழா ஆங்கிலமா?' என்ற தலைப்பில் 'செங்கோல்' வார இதழில் யான் எழுதிய தொடர் கட்டுரையாகும்.

பாரதம் அந்நியரை வெளியேற்றி அரசுரிமை பெற்ற பிறகு, மொழிவாரி தேசிய இனங்களின் சுய நிர்ணயப் பிரச்சனையைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு அதற்கு ஏற்பட்டது. அவ்வகையில், சிறிது தயக்கத் திற்குப் பிறகேனும் இராச்சியங்களை மொழி அடிப் படையில் திருத்தி அமைத்தது, பாரத அரசு. அதன் எதிரொலியாக, பிரதேச மொழியே ஆட்சி மொழி யாகவும், நீதி மன்ற நிர்வாக மொழியாகவும், பல்கலைக் கழகப் பயிற்சி மொழியாகவும் வரவேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டது.

ஆனால், மக்களுடைய மனப் போக்கை, பாரத சமுதாயம் அடைந்துள்ள மாறுதலை அறிந்துகொள்ளத் தவறிவிட்ட பரங்கிமொழிப் பக்தர்கள், 'என்றென்றும் ஆங்கிலம்'—'எங்கெங்கும் ஆங்கிலம்' என்ற கொள்கைக்கு வெற்றி தேடக் கொடி தூக்கினர். அவர்கள் கட்சியில் சிறிதளவுகூட அறமோ, நீதியோ, நேர்மையோ இல்லை. ஆனால், பாரதத்தின் எல்லாத் துறைகளிலும் அவர்களே ஆதிக்கம் செலுத்துவதால், நீதிக்கும் நேர்மைக்கும் பொருந்தாத அவர்களுடைய கொள்கை பிரதேச மொழியின் முன்னேற்றத்திற்குப் பலமான முட்டுக் கட்டையாகிவிட்டது.

சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரணப் பொது மக்கள் ஆங்கில சாதியாரின் ஆதிக்கத்தால் தங்க ளுக்கு ஏற்பட்ட கேடுகளை அறிந்து கொண்டதுபோல, ஆங்கில மொழியின் ஆதிக்கத்தால் தங்களுக்கு விளையும் கேடுகளைத் தெரிந்து கொள்ளவில்லை. ஆம்; தெரிவிக்க வில்லை படித்த தலைவர்கள். அதனால், பயிற்சி மொழிப் பிரச்சனையானது பரங்கிமொழி பயின்றவர்கள் மட்டுமே கட்சி பிரிந்து பரஸ்பர அனுதாபத்துடன் வழக்காடும்

பிரச்சனையாகிவிட்டது. இந்த நிலை மாறி, பயிற்சி மொழிச் சிக்கல் பற்றிய விவாதத்தில் சாதாரணப் பொது மக்களும் பங்கு கொள்ளும்படி செய்வதற்காகவே இந்த நூலை வெளியிடுகின்றேன்.

பரங்கி மொழி பயின்றோர் அத்தனை பேருமே தமிழுரிமைக் கிளர்ச்சிக்கு எதிராக இருக்கிறார்கள் என்று சொல்வதற்கு இல்லை. இந்தத் தலைமுறையில் பரங்கி மொழி பயின்றவர்களில் மிகப் பெரும்பாலோர் 'எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெற வேண்டும்' என்ற கொள்கையை ஆதரிக்கின்றனர்.

இதற்கு மாறாக, கடந்த தலைமுறையினரில் நம்மிடையே எஞ்சி நிற்கும் சிலர் மட்டுமே பரங்கி மொழியின்பால் பற்றும் பக்தியும் கொண்டு தங்கள் தாய்மொழிக்குத் துரோகம் செய்கின்றனர். இந்தப் பிரிவினரை வாசகர்களுக்குப் பிரித்துக் காட்டும் பொருட்டே அந்தக் கூட்டத்தாரைக் குறிப்பிடும்போதெல்லாம் 'பரங்கி மொழிப் பக்தர்கள்' என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி இருக்கிறேன்.

மற்றபடி அவர்களை இழிவு படுத்தும் எண்ணம் எனக்கில்லை.

இந்தச் சிறு பிரசுரம் தமிழர் ஒவ்வொருவர் கரத்திலும் இருக்க வேண்டும்.

இதனைப் படிப்போர், தங்களுடைய உறவினர்களையும் நண்பர்களையும்கூடப் படிக்கும்படித் தூண்ட வேண்டும். ஒருமுறை படித்ததோடு முடித்து விடாமல், திரும்பத் திரும்பப் படித்து தமிழுரிமைக் கிளர்ச்சியின் பிரசாரகராக ஒவ்வொருவரும் மாற வேண்டும்.

பிரசார சாதனம் என்பது, பொதுக்கூட்ட மேடை மட்டுமல்ல. ஆகவே, இரண்டு தமிழர் சந்திக்க நேர்ந்த விடத்தி லெல்லாம் பயிற்சி மொழி பற்றிப் பேச வேண்டும். படிக்காத பாமரர்களும் இந்தச் சிக்கலில் போதிய தெளிவு பெறும்படி படித்தவர்கள் அவர்களுக்குப் போதிக்க வேண்டும். இதுவே என் விருப்பம்.

ம. பொ. சிவஞானம்.

காந்தியடிகள் திருவுள்ளம்

பல்கலைக் கழகப் பாடங்களைப் பயிற்றுவிப்பதற்கான மொழி "தமிழா, ஆங்கிலமா?" என்று விவாதிக்கப்பட்டு வருகின்றது. ஆங்கில நாட்டிலல்ல; நம் தாயகமான தமிழ் நாட்டில்தான்! இதைவிட மானக்கேடு தமிழருக்கு வேறு என்ன இருக்க முடியும்? இது போன்ற ஒரு விவாதம் உரிமை வாழ்வு நடத்தும் எந்த ஒரு நாட்டிலும் நடந்ததாக வரலாறு சொல்லவில்லை.

இந்தியாவிலும் வேங்கடத்துக்கு வடக்கேயுள்ள எந்த ஒரு மாநிலத்திலும் இத்தகையதொரு விவாதப் போர் நிகழவில்லை. துரதிருஷ்டம் பிடித்த இந்தத் தமிழ் நாட்டில் தான் "பயிற்சி மொழி, தமிழா? ஆங்கிலமா?"—என்று விவாதிக்கப்படுகிறது. இங்கு, பல்கலைக் கழகச் செனட் சபையிலோ, மக்கள் மன்றமான சட்டசபையிலோ மட்டு மல்லாமல், வீதிகளிலே போடும் மேடைகளிலேயும் விவாதம் நடைபெற வேண்டிய அளவுக்கு விஷயம் விஷத் தன்மை பெற்றுவிட்டது!

வித்தூன்றியது காங்கிரசே!

உலகில் சுதந்திரமாக வாழும் ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டு மொழியே ஆரம்பப்பள்ளி முதல் பல்கலைக்

கழகம் வரை பாடமொழியாக மட்டுமல்லாமல், விஞ்ஞானம் உள்ளிட்ட பல கலைகளைப் பயிற்றுவிக்கும் கருவி மொழியாகவும் இருந்து வருகின்றது. இந்தியா ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த காலத்தில், இங்கு நம்மை அடிமை கொண்ட அந்நியரின் மொழியான ஆங்கிலம் பயிற்சி மொழியாகச் செய்யப்பட்டது. இப்போது ஆங்கிலேயர் வெளியேறிவிட்டதால் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தையும் அகற்ற வேண்டியது அவசியமாகின்றது. அகற்றுவது தான் நாம் சுதந்திரம் பெற்றதற்கு அடையாளம்.

நல்ல வேளையாக, இந்தியாவை ஆளும் பேறு பெற்ற காங்கிரஸ் கட்சி, ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை அகற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்திருக்கின்றது. அதற்குக் காரணம், 1918-ஆம் ஆண்டு முதற்கொண்டே காங்கிரஸ் மகாசபை ஆங்கில மொழியின் ஆதிக்கத்தைக் கடுமையாக எதிர்த்து வந்திருப்பதுதான். அத்தகையதொரு எதிர்ப்பு இயக்கத்தில் காங்கிரஸை ஈடுபடுத்திய பெருமை காந்தியடிகளுடையதாகும்.

திலகர் வகுத்த பாதை

1918-ஆம் ஆண்டுக்கு முன்பு, காங்கிரஸ் மகாசபையின் நடவடிக்கைகள் அனைத்தும் அன்னிய மொழியான ஆங்கிலத்திலேயே நடைபெற்றன. அந்த இழிநிலையை லோக மான்ய பால கங்காதர திலகர் போன்றவர்கள் எதிர்த்து வந்தார்கள். காங்கிரஸ் மகாசபையின் நிர்வாகத்திலிருந்து ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை அகற்றவேண்டும் என்பதற்காகவும் காங்கிரஸ் மாநிலங்கள் மொழிவாரி திருத்தி அமைக்கப்பட்டன. அதன் பிறகு மாநில காங்கிரஸ் நடவடிக்கைகள் அந்தந்த மாநிலத்தின் மொழியிலேயே நடைபெறத் தொடங்கின. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் நடவடிக்கைகளும் பெரும்பான்மை இந்தியிலும், தவிர்க்க

முடியாத காரணத்தால் சிறுபான்மை ஆங்கிலத்திலும் நடைபெற்றன. வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் ஆங்கில மொழியில் இந்திய மக்களில் சிலருக்குள்ள மோகத்தை வன்மையாகக் கண்டித்து வந்துள்ளார் காந்தியடிகள். ஏன்? இந்த ஆங்கில எதிர்ப்புத் தொண்டில் தலைவர் ராஜாஜியும் அந்நாளில் பெரும் பங்கு கொண்டிருந்தார்.

இந்த ஆங்கில ஆதிக்க எதிர்ப்புச் சூழ்நிலை, 1918-ஆம் ஆண்டு தொடங்கி நாம் சுதந்திரம் பெற்ற 1947-ம் ஆண்டு வரை தொடர்ந்து நீடித்து வந்திலையானால், இன்று அதிகார பீடத்தில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் அத்துணைப் பேருமே ஆங்கில மொழிக்கு அடிமையாகி இருக்கக்கூடும். அத்தகைய மாபெரும் விபத்திலிருந்து இந்த நாட்டைக் காப்பாற்றிய காந்தி அடிகளின் ஆவிக்கு நாம் அஞ்சலி செலுத்துவோமாக!

காந்தியடிகள் வருந்தினார்!

காந்தி அடிகள் வாழ்ந்த காலத்திலேயே, இந்தியாவில் "பயிற்சி மொழி, தாய் மொழியா? ஆங்கிலமா?"— என்ற விவாதம் எழுந்துவிட்டது. இந்த விவாதப் போரில் ஈடுபட்டு ஆங்கில மொழிக்கு எதிராகத் தாய்மொழிக் கட்சியை ஆதரித்து, "தாய்மொழி மூலம் கல்வி" என்ற தலைப்பில் ஒரு நூல் வெளியிட்டார், ஸ்ரீமந் நாராயண் அகர்வால். அந்த நூலுக்குத் தந்துள்ள முன்னுரையில்,

> "ஆசிரியர் ஸ்ரீமந் நாராயண் அகர்வால் சரியான காலத்தில் இந்த ஆராய்ச்சியை எழுதியுள்ளார். 'மிக உயர்ந்த கல்வியையும் தாய்மொழி மூலம் பயிற்றுவிப்பது சாத்தியமா? சாத்தியமாயினும் விரும்பத் தக்கதா?' என்பன பற்றி இன்று அச்சமும் அவநம்பிக்கையும் பரவியுள்ளன. இவற்றைப் போக்க இந்நூல் பெரிதும் பயன்படும். என்னைப் பொறுத்தவரை

வெளிப்படையான இந்த உண்மையை எடுத்துக் காட்ட இவ்வளவு வாதங்கள் அவசியமாகிவிட்டனவே என்பதை நினைத்தாலே பரிதாபகரமா யிருக்கிறது.''

என்று எழுதியுள்ளார், காந்தி அடிகள்.

இப்படி, பரங்கி மொழிப் பக்தர்கள் தாய்மொழிக்கு எதிராக வழக்காடும் பரிதாப நிலை பற்றி காந்தி அடிகள் எழுதியது 1942-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில். ஆம்; ஆகஸ்டுப் புரட்சிக்கு முன்பு! அப்போது ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தனர். உயர்தர உத்தியோகங்களி லெல்லாம் அவர்களே அமர்ந்து கொண் டிருந்தனர். ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாகப் பல லட்சக்கணக்கான ஆங்கிலேயர்கள் இந்த நாட்டி லேயே பரவலாகத் தங்கி வாழ்ந்துவந்தனர். அந்தக் காலத்தி லேயே ஆங்கிலம்தான் பயிற்சிமொழியாக இருக்க வேண்டு மென்று வழக்காடியவர்கள் நிலைகண்டு காந்தியடிகள் பரிதா பப்பட்டார் என்றால், ஆங்கிலேயர் அவ்வளவு பேரும் வெளியேறி, நம் அன்னை நாடு விடுதலை பெற்ற பின்னரும் பரங்கிமொழிப் பக்தர்களின் போக்கு திருந்தாத நிலையைக் காண இன்று அவர் வாழ்ந்திருந்தால், என்ன சொல்லியிருப் பாரோ! சொல்லுவது என்ன? இந்தக் கொடுமையை எதிர்த்து அறப்போர் நடத்தி யிருப்பார்!

கால் சட்டைக்குள் புகுந்த எலிபோல !

காந்தியடிகள் வாழ்ந்த காலத்தில் தாய்மொழிக்கு எதி ராகப் பரங்கி மொழிக்குப் பல்லாண்டு பாடும் கூட்டம் காங்கிரசுக்கு வெளியேதானிருந்தது. இன்றோ, அந்தக் கூட்டம் காங்கிரஸ் கூடாரத்திற்குள்ளேயும் புகுந்து விட்டது, கால் சட்டைக்குள்ளே புகுந்த எலிபோல! தாய் மொழிக்கு எதிராக ஆங்கில மொழியை ஆதரிப்பது 'பாவச் செயல்' என்கிறார் காந்தியடிகள்.

"நம்முடைய இளைஞர்களுக்குக் கல்வியளிக்கும் பொறுப்புடையவர்கள் சற்று மனம் வைத்துச் சிந்தித்துப் பார்த்தால், குழந்தையின் உடல் வளர்ச்சிக்குத் தாய்ப்பால் எப்படியோ, அப்படி மனிதன் மன வளர்ச்சிக்குத் தாய்மொழியே இயற்கையானது என்பதை உணர்வார்கள். வேறு எப்படி இருக்க முடியும்? குழந்தை, தன் முதல் பாடத்தைக் கற்பது தாயிடமிருந்துதானே! குழந்தைகளின் உள வளர்ச்சிக்குத் தாய்மொழி யல்லாத வேறொரு மொழியை அவர்கள்மீது சுமத்துவது, தாய் நாட்டிற்குச் செய்யும் பெரிய பாவம் என்றே கருதுகின்றேன்"

இதுவும், ஸ்ரீமந் நாராயண் அகர்வால் எழுதிய நூலுக்குக் காந்தி அடிகள் தந்துள்ள முன்னுரையின் பகுதியாகும்.

ஸ்ரீமந் நாராயண் அகர்வால், "தாய் மொழி மூலம் கல்வி" என்ற தமது நூலில்,

"இந்த விசித்திர பூமியில் (இந்தியாவில்) சாதாரண உண்மைகள் கூட அசாதாரணமாகத் தோன்றும். இயற்கை விதிகளும் விபரீதங்களாய்த் தோன்றும்; பாவமாகவும் படும். யாரும் மறுக்க முடியாத அடிப்படையான உண்மைகளுங்கூட மூட சம்பிரதாயத்திற்கும் பிற்போக்குக் கொள்கைக்கும் உள்ளாகி விடுகின்றன. இந்தத் துரதிருஷ்ட நாட்டில், தங்கள் குழந்தைகள் ஆங்கில மொழி மூலமே கல்வி கற்கவேண்டும் என்று விரும்பும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் இந்த 20-ஆம் நூற்றாண்டிலும் எண்ணற்றோர் இருக்கின்றார்கள். இதை எண்ணிச் சிரிப்பதா அழுவதா!" என்று நொந்த மனத்தோடு கூறியுள்ளார், ஸ்ரீமந் அகர்வால். என்னைப்போன்று சிலப்பதிகாரப் பக்தரல்ல. பகவத் கீதையோடு திருப்தி அடைபவரு

மல்ல. அவரைப்பற்றிக் காந்தி அடிகள் கூறு கையில், "ஆசிரியர் அகர்வால் ஆங்கிலத்தில் தமக்கிருந்த ஆர்வம் தீர, அம்மொழியின் வாயிலாகக் கற்க விரும்பிய வற்றை எல்லாம் கற்றவர்" என்று குறிப்பிட்டுள்ளார். அதோடன்றி, "எல்லா மாநிலங்களிலும் தாய்மொழிகள் தமக்குரிய இடத்தை அடையும்வரை அவர் ஓய்வு காணாது உழைப்பார்" என்றும் கூறி, பயிற்சி மொழிப் பீடத்தில் தாய்மொழியை அமர்த்தும் பணியில் தன்னுடைய வாரிசாக அவரை ஏற்றுக் கொண்டுள்ளார்.

அப்படிப்பட்டவர், தமிழரசுக் கழகத்தைச் சாராதவர், தமிழ் மொழியில் வெறி பிடிக்காதவர், "ஆங்கிலமே போதனா மொழியாக இருக்க வேண்டும் என்று சொல் வோரை நினைந்து, அழுவதா சிரிப்பதா?" என்று கேட கிறார். பரங்கி மொழிப் பக்தர்கள் பதிலளிக்கட்டும்.

ஆங்கிலேயர் பேசுகிறார்!

தாய் மொழிக்கு எதிராக வேறொரு அன்னிய மொழி யைப் பயிற்சி மொழியாக ஏற்கவேண்டு மென்ற நாசக் கருத்தை, ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட ஐரோப்பியப் பேரறிஞர்கள்கூடக் கடுமையாகக் கண்டித் திருக்கின்றனர்.

> "நம்முடைய இதய எழுச்சிகளுக்கும் உள்ளக் கிளர்ச்சிகளுக்கும் திறவுகோல் ஒரே மொழிதான்; வார்த்தையின் தொனியிலே பொதிந்துள்ள நுட்ப மான உண்மைகளை வெளிக் கொணர்ந்து நம் மனத் திற்கு உடனே புலப்படுத்தக் கூடிய மொழியும் ஒரே மொழிதான்; **அந்த ஒரே மொழி, நம் தாயின் மடியில் தவழ்ந்து கொண்டிருந்த காலத்தில் நாம் பேசிய மொழியே.** முதன் முதலில் இறைவனை நோக்கிப் பிரார்த்திப்பதும், இன்பத்திலும், துன்பத்திலும் நம்மை அறியாமலே

நம்முடைய வாயிலிருந்து வெளிவருவதும் அம்மொழி தான். அம்மொழியை விட்டு வேறு மொழி மூலம் கல்வி புகட்டப்படுவது என்பது மாணாக்கர்கள் மீது தாங்க முடியாத பாரத்தைச் சுமத்துவதோடு, சுதந்திர மாக இயங்குவதி லிருந்து தடைப்படுத்தி மனத்தை முடமாக்கியும் விடுகிறது''

இப்படிக் கூறியவர், பிரபல ஆங்கிலேயரும் உலகப் புகழ் பெற்ற எழுத்தாளருமான எச். என். பிரெய்ல்ஸ் போர்டு ஆவார். இதே கருத்தை நான் சொன்னால், அது தமிழ் வெறி ஆகிவிடுகிறதாம்!

எதிர்ப்போர் பல ரகம்!

"தமிழகத்தில் தமிழ்மொழி ஒன்று மட்டுமே பயிற்சி மொழியாக இருக்க வேண்டும்" என்ற கொள்கைக்கு எதிர்ப்பிருக்க நியாயமில்லை. எதிர்ப்போரைத் தமிழராக ஏற்க முடியாது. தமிழரல்லாதவர்க்கோ, இந்தக் கொள்கையை எதிர்க்க உரிமையில்லை. இது, தமிழரின் பிறப்புரிமை.

இந்த உண்மையை உணர்ந்துதானோ என்னவோ, பரங்கி மொழிப் பக்தர்கள், தமிழைப் பயிற்சிமொழியாக்கக் கூடாதென்று நேர்முகமாகச் சொல்வதில்லை. அவர்களில் பலருடைய உள் எண்ணம் அதுதான் என்றாலும், அதனை வெளிப்படையாகச் சொல்ல அவர்களுக்குத் துணிவில்லை. தமிழரின் பிறப்புரிமையை மறுக்க எந்தத் தமிழனுக்குத்தான் துணிவு வரும். ஆனால், தமிழரின் பிறப்புரிமையை ஆட்சேபணையின்றி ஏற்றுக் கொள்ளவும் அவர்களுக்கு மனமில்லை. ஆம்; அவர்கள் வாழ்க்கை நிலை அப்படி! பாவம், அனுதாபத்திற்குரியவர்கள்!

"பயிற்சி மொழி விஷயத்தில் இப்போதைய நிலையே நீடிக்க வேண்டும்" என்று கூறுவோரிடையிலும், அதற்கான காரணங்களில் முரண்பாடு இருக்கக் காண்கிறோம்.

தமிழை மறந்த தலைமுறையார்!

கடந்த தலைமுறையில் அல்லது அதற்கு முன் தலைமுறையில், ஆங்கிலமொன்றே பள்ளிகளில் கட்டாய

முதன்மொழி. தாய்மொழியை விரும்பினால் படிக்கலாம்; விரும்பாவிடில், மறக்கலாம். ஆம்; அப்படியும் ஒருகாலம் இருந்தது. அந்தக் காலத்தில் உயர்தரக் கல்வி கற்றுப் பட்டம் பெற விரும்பினோர் தமிழைப் புறக்கணித்தனர். கதிருள்ளளவும் கடல் நீருள்ளளவும் ஆங்கில மொழியின் ஆதிக்கம் நிலைத்திருக்கும் என்று எண்ணி, தமிழை மறந்தனர். தமிழ் இலக்கியங்களைப் பயில்வது இழுக்கு என்று கூட எண்ணினர். அதனால், தமிழ் அல்லாத இந்திய மொழிகளில் ஒன்றை இரண்டாவது மொழியாகக் கற்றனர். அவர்களெல்லாம் இன்று பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர்களாகவும், கல்லூரிகளில் முதல்வர்களாகவும், ஆங்கிலத்தில் விஞ்ஞானக் கலைகளைப் பயிற்றுவிப்பவர்களாகவும் பதவி வகிக்கின்றனர். இந்த நிலையில், பயிற்சி மொழிப் பீடத்தில் ஆங்கிலத்தை அகற்றித் தமிழை அமர்த்தினால், அந்த 'மேதைகள்' எல்லாம் செல்லாக் காசுகள் ஆகிவிடுவர். அதனால் அவர்கள் இப்போதுள்ளதுபோல ஆங்கில மொழியின் ஆதிக்கம் தங்கள் ஆயுள் காலம் வரையிலேனும் நீடிக்க வேண்டுமென்று போராடுகின்றனர். ஆம்; வடிக் கட்டிய சுயநலம்!

இரண்டாந்தரத் தமிழர்கள்

மற்றொரு சாரார், இரண்டாவது மொழியாகத் தமிழ் மொழியையும் பயின்ற பிறந் தலைமுறையினர். இவர்கள் தமிழைப் பயின்றிருப்பினும், ஆங்கில மொழியைப்போல அவ்வளவு எளிதாகத் தமிழைக் கையாளும் திறமை பெற்றவர்களல்லர். தமிழ் பயிற்சி மொழியாக வந்து விட்டால், இவர்களுடைய திறமை இரண்டாந்தரமாகி விடும். அதனால், இந்தக் கூட்டத்தாரும், பயிற்சிமொழி யாகவோ, ஆட்சி மொழியாகவோ, நீதிமன்றநிர்வாக மொழி யாகவோ தமிழ் வருவதை விரும்பவில்லை. ஆம்; தமிழுக்கு

அவர்கள் எதிர்ப்புக் காட்டுவதெல்லாம் தங்களைத் தற்காத்துக்கொள்ளத்தான்!

முன்னேறிகளின் முட்டுக் கட்டை

மற்றொரு கூட்டத்தார், சாதிப் பலத்தில் உத்தியோகங்களைக் கைப்பற்றுவதில் கருத்துடையவர்கள். இந்தத் துறையில் இவர்களோடு போட்டியிடும் சக்தி பொருளாதாரத் துறையில் பின்னடைந்துள்ள சாதியார்களுக்கு இல்லை. ஆனால், தமிழே பயிற்சி மொழியாகவும் அரசாங்க -நீதி மன்ற அலுவல் மொழியாகவும் வந்து விட்டால், உத்தியோகத் துறையில் இந்த 'முன்னேறிகள்' கடுமையான போட்டிகளைச் சமாளிக்க வேண்டிய கஷ்டம் ஏற்படும். அதனால், தமிழகத்துச் சாதிகளிலே, ஆங்கில மொழியின் மூலம் முன்னேறி விட்ட ஒரு சில முன்னணிச் சாதியினர் குறைந்தபட்சம் தமிழ் பயிற்சி மொழியாவதையேனும் எதிர்த்து ஆகவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றனர்.

தனிவுடைமையாளர் தடை

இன்னொரு சாரார், சோஷலிஸத்தின் எதிரிகள். ஆங்கில மொழியின் ஆதிக்கம் அகன்று எங்கும் எதிலும் தமிழ் மொழி ஒன்றே இடம் பெறுமானால், மக்களிடையே இன்று காணப்படுகின்ற ஏற்றம்-இழிவு, உயர்வு-தாழ்வு, வறுமை-வளம் என்ற பேதங்கள் நாளடைவில் அகன்று விடும் அல்லது அகற்றப்பட வேண்டுமென்ற கிளர்ச்சி வலுப் பெற்றுவிடும். 'வெள்ளம்போல் கலைப் பெருக்கும் கவிப் பெருக்கும் மேவுமாயின், பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவி கொள்வர்' என்ற பாரதியின் வாக்குப் பலித்துவிடும்' அதனை விரும்பாத தனிவுடைமைச் சமுதாயத்தின் காவலர்கள், "என்றென்றும் ஆங்கிலம்" - "எங்கெங்கும் ஆங்கிலம்" என்று கோஷிக்கின்றனர்.

வந்தேறிகள் தரும் தொல்லை!

பின்னொரு சாரார், தமிழகத்தில் குடியேறி இங்கேயே நிலைத்துவிட்ட பிறமொழியினர் அல்லது இருமொழியினர். இவர்கள் ஆங்கில மொழியின் துணைகொண்டு உயர் பதவிகளில் அமர்ந்துள்ளனர். இவர்களுடைய எண்ணிக்கை தமிழரில் பரங்கி மொழிப் பக்தர்களும் சேர்ந்தபின்பு பன்மடங்கு மிகுந்து விட்டது. இந்தப் பெருவாழ்வு இவர்கள் பிள்ளைத் தலைமுறையினர்க்கு இல்லாது போய்விடும், தமிழ் பயிற்சி மொழியாகி விட்டால்! அதனால், இந்த 'வந்தேறி'களும் "என்றென்றும் ஆங்கிலம்" என்கின்றனர்.

ஆம்; பயிற்சி மொழி காரணமாக ஏற்பட்டுள்ள வாதப்போர், வெறும் மொழிப் பிரச்சினைமட்டுமன்று; சமூக - பொருளாதார - தேசிய இனவுரிமை அம்சங்களும் இதில் சேர்ந்துகொண்டிருக்கின்றன. மேலே நாம் கொடுத்துள்ள பட்டியலில் சேர்ந்தவர்களுடைய உள் நோக்கங்களைக் கவனத்தில் கொண்டு பார்த்தால், அந்தனையும் 'வடிகட்டிய சுயநலம்' அல்லது 'பிற்போக்குத்தனம்' என்பது புலப்படும். இந்தப் பிற்போக்காளர்கள், சமத்துவம்-சமதர்மம் - சமுதாய ஒற்றுமை ஆகிய நெறிகளின் விரோதிகளாவர். ஆனால், அவர்கள்தான் பரந்த நோக்கம் நமக்கு வேண்டுமென்றும், நாம் குறுகிய புத்தி படைத்த மொழி வெறியர்கள் என்றும் நம்மைப் பற்றி வருணிக்கின்றனர். என்ன செய்வது? பிரச்சார சாதனங்கள் அனைத்தும் அவர்கள் கைவசம் சிக்கியிருக்கின்றன.

நோகாமல் அடிக்கின்றனர்!

பயிற்சிமொழிப் பீடத்தைத் தமிழுக்கு அளிக்க முன்வந்திருக்கும் அரசினர்கூட, இந்தப் பிற்போக்காளர் விஷயத்தில் "நோகாமல் அடிக்கும்" வித்தையையே கையாண்டு வருகிறார்கள். தமிழின்பால் கல்வி அமைச்சருக்குள்ள நல்

லெண்ணத்தில் நமக்கு ஐயமில்லை என்றாலும், நடைமுறை அப்படித்தான்! ஆனால், இதையெல்லாம் கண்டு தமிழ்ப் பற்றுளர்கள் சோர்வடையத் தேவையில்லை. தமிழுக்கு எதிராக வாதாடுவோர் எண்ணிக்கையில் குறைந்தவர்கள். அரசியல் விழிப்புப் பெற்றுவிட்ட பொதுமக்களின் நெற்றிக் கண் திறந்துவிட்டால், இவர்களின் எதிர்ப்பு நீறாகிவிடும். மக்களின் நெற்றிக் கண்ணைத் திறக்க வைப்பதுதான் நம்முடைய ஒரே வேலை!

தமிழுக்கு எதிராகச் செயல்படும் பரங்கி மொழிப் பக்தர்கள், தூங்குகிற புலியின் வாலை மிதித்து அதனை எழுப்புபவன் நிலையில் இருக்கிறார்கள். அதன் பலனை அவர்கள் அனுபவிக்கத்தான் போகிறார்கள்.

இனி, பரங்கிமொழிப் பக்தர்கள் தமிழுக்கு எதிராகக் கூறும் காரணங்களை ஆராய்வோம்.

பாசாங்குப் பேச்சு

பரங்கி மொழிப் பக்தர்கள் கொள்கை அளவில் தமிழைப் பயிற்சி மொழியாக்க ஒப்புக்கொள்கிறார்கள். ஒப்புக்கொண்டு, "விஞ்ஞானப் புத்தகங்கள் தமிழில் போதிய அளவு இல்லையே?" என்கின்றனர். "புத்தகங்களைத் தயாரிக்கத் திட்டமிடுவோம்"-என்று நாம் கூறினால், "தமிழில் கலைச் சொற்கள் இல்லையே?" என்று கண்ணீர் வடிக்கின்றனர். "கலைச்சொற்களுக்காகக் காத்திருக்க வேண்டாம். ஆங்கிலம் அல்லது சர்வதேசச் சொற்களையே பயன்படுத்திக் கொள்ளலாம்" என்றால், "பயிற்சிமொழி இந்தியா முழுவதற்கும் ஒரே மொழியாக இருக்கவேண்டும்" என்று கூறி, தடம்புரளுகின்றனர். இவர்களோடு சிறிது வாதிட்டுப் பார்த்தால், இவர்களுடைய அந்தரங்க சுத்தியிலேயே நமக்குச் சந்தேகம் ஏற்பட்டு விடுகிறது. இவர்களுடைய

ஒரே குறிக்கோள், "ஆங்கிலமே என்றென்றும் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும்" என்பதுதான்!

சந்தித்தால் கேளுங்கள்!

நீங்கள் பரங்கி மொழிப் பக்தர்களைச் சந்தித்தால், "உலகில் சுதந்திரமாக வாழும் எந்த ஒரு நாட்டிலேனும் அந்நிய மொழி பயிற்சி மொழியாக இருக்கிறதா?"—என்று கேட்டுப் பாருங்கள். "சோவியத் ருஷியாவில்கூட ஆங்கில மொழி கற்கிறார்கள்! சுவிட்சர்லாந்தில் ஐந்து மொழிகள் கற்கப்படுகின்றன. இன்னும் அந்த நாட்டில்... இந்த நாட்டில்..." என்றெல்லாம் நாடுகளின் பெயர்ப் பட்டியல் கொடுத்து அங்கெல்லாம் ஆங்கில மொழியை மக்கள் கட்டாயமாகப் பயில்வதாகச் சான்று காட்டுவார்கள். இது நாம் கேட்ட கேள்விக்கு நேரான பதிலன்று. நாம் கேட்டது, பயிற்சி மொழிபற்றி. பரங்கி மொழிப் பக்தர்கள் பதில் கொடுப்பது, பாடமொழிபற்றி! இது, ஏமாற்று வித்தை! சோவியத் ருஷ்யா போன்ற நாடுகளின் கல்வித் திட்டத்தில் 'ஏதேனுமொரு அன்னிய மொழியைக் கற்கவேண்டும்' என்பதே கட்டாயம். இந்தியாவைப்போல அங்கெல்லாம் ஆங்கிலம் ஒன்றைமட்டுமே கட்டாயப் பாடமாக்கவில்லை என்பது கவனத்தில் கொள்ளத் தக்கதாகும்.

தமிழகத்தில் தமிழே பயிற்சி மொழியாக-நீதிமன்ற நிர்வாக மொழியாக வந்து பிறகும், இந்த நாட்டுப் பள்ளிகளில் சுவிட்சர்லாந்தைப் போலவோ, ருஷ்யாவைப் போலவோ அன்னியமொழி ஒன்று கட்டாயப் பாட மொழியாக இருப்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை. இன்னும் சொன்னால், ஒரு இடைக்காலத்திற்கு அந்த அந்நிய மொழி ஆங்கிலமாகவே இருப்பதையும் நாம் வரவேற்கிறோம். அது போதாதென்றால், பரங்கிமொழிப் பக்தர்கள் தங்கள் சொந்

த்ச் செலவில் ஆங்கில பாணியில் கல்விபயில்வதற்குக் 'கான்வெண்டு' பள்ளிகள்-கல்லூரிகள் அமைத்துக் கொள்வதையும் நாம் எதிர்க்கவில்லை.

ஆகவே, "ருஷ்யாவைப் பார்! சுவிட்சர்லாந்தைப் பார்!" என்ற பேச்சுப் பொருளற்றது. நாம் சொல்வதெல்லாம் அன்னிய மொழியைப் படிக்கக்கூடாது என்பதல்ல; பல்கலைக்கழகப் பாடங்களைப் போதிக்கும் மொழியாக ஒரு அந்நியமொழி இருக்கக்கூடாது என்பதுதான்.

தமிழில் விஞ்ஞானப் பாடப் புத்தகங்கள் இல்லாததைக் காரணம் காட்டி ஆங்கில மொழியின் ஆதிக்கத்திற்கு ஆசிகூற முயல்கின்றனர்.

பல்கலைக் கழகத்தின் கபட நாடகம்!

தமிழில் விஞ்ஞான பாட புத்தகங்களைத் தயாரிக்கவேண்டிய கடமை யாருடையது? சட்டப்படி இதில் முதல் முயற்சி எடுக்கவேண்டிய கடமை சென்னைப் பல்கலைக் கழகத்தினுடையதல்லவா? இந்தக் கழகம் இதுவரை இந்த முயற்சியில் ஈடுபடாத காரணம் என்ன?

1926-ஆம் ஆண்டிலேயே, "விரும்புகின்ற கல்லூரிகள் தமிழைப் பயிற்சி மொழியாகச் செய்து கொள்ளலாம்" என்ற ஒரு தீர்மானம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் எதிர்ப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்திற்குப் பிறகேனும் விஞ்ஞானப் பாடங்களைத் தமிழில் தயாரிக்கும் கடமையை சென்னைப் பல்கலைக்கழகம் நிறைவேற்றியிருக்க வேண்டுமல்லவா? நிறைவேற்றவில்லையே, ஏன்?

1939-ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் தமிழ் மொழி பயிற்சி மொழி ஆக்கப்பட்டது. அதனைச் சென்னைப் பல்கலைக் கழகம் எதிர்க்கவில்லை. அடுத்தாற்

கோலக் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்சிமொழி ஆக்கு வது என்ற உறுதியுடன்தான், உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்சிமொழி பீடத்திலிருந்து ஆங்கிலம் அகற்றப்பட்டது. இந்த நிலைக்குப் பிறகேனும் விஞ்ஞானப் பாட நூல்களைத் தமிழில் தயாரிக்க சென்னைப் பல்கலைக் கழகம் திட்டமிட் டிருக்க வேண்டும். அப்போதும் செய்யவில்லையே, ஏன் ? இற்றை நாள்வரைகூட அத்துறையில் சென்னைப் பல்கலைக் கழகம் தன் கவனத்தைச் செலுத்தியதாகத் தெரிய வில்லையே, காரணம் என்ன?

உண்மை இதுவாக, 'தமிழில் விஞ்ஞானப் பாட நூல்கள் இல்லையே?' என்று கூறுவது, வெறும் பாசாங்கு வாதம்.

தமிழகத்தில் ஆங்கிலத்தின் நிலை

ஆங்கிலம், தமிழருக்கும் தமிழகத்துக்கும் அன்னை மொழியல்ல; அந்நிய மொழி !

'இந்தியர்' என்ற தேசிய சமுதாய ஒருமைப்பாட்டினை ஒப்புக்கொள்ளும் தமிழர்களுக்கு, இந்தி மொழியோடு இயற்கையாகவே உறவு ஏற்பட்டுள்ளது. அந்த உறவு, அரசியல் அமைப்புச் சட்டத்தின்படியும் உறுதிப்பட்டு விட்டது. கடந்த இரண்டு பொதுத் தேர்தல்களில் இந்தி மொழியோடு தமிழகத்திற்குள்ள தார்மீக உறவுக்கு ஜனநாயக முத்திரையும் போடப்பட்டு விட்டது! போதாக்குறைக்கு வரம்பு கட்டப்படாத ஒரு காலத்திற்கு ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்ற நிபந்தனையின் பேரில், 1965க்கு மேல் இந்தியே இந்தியாவின் ஆட்சி மொழியாக வருவதற்கு தென்னிந்திய ராஜ்யங்களும் இந்தி எதிர்ப்பாளர்களும் இசைவு தெரிவித்துவிட்டார்கள்.

இந்தி மொழிக்குள்ள இந்தச் சந்தர்ப்ப, சாதனங்கள் ஆங்கில மொழிக்கு இல்லை. ஆங்கிலம், இந்தியைப் போலத் தமிழகத்துக்கு தேசிய உறவு மொழியல்ல. ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள தூர தேசத்து மொழி. இலக்கண, இலக்கிய ரீதியிலும் ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் அணுவளவும் தொடர்பில்லை. இவை, ஆராய்ச்சி

தேவையில்லாமலே அங்கீகரிக்கப்பட வேண்டிய உண்மைகள். இத்துடன், கடந்த 150 ஆண்டுகளாக, ஆங்கில மொழியின் வாழ்விலே-வளர்ச்சியிலே, நமது தாய்மொழியான தமிழ் அழிந்து வந்ததையே கண்டோம். ஆங்கிலக் கல்வியின் விளைவாக, ஒரு புதிய சாதி-உயர்சாதி சிருஷ்டிக்கப்பட்டுவிட்டதையும் பார்க்கிறோம். இந்த நிலையில், ஆங்கிலத்தோடு தமிழ் மொழி நல்லெண்ணத்துடன் உறவுகொள்ள முடியுமா? அத்தகைதய உறவு இப்போதே இருப்பதாகச் சொல்வது பொய்யல்லவா?

தமிழகப் பள்ளிகளில் ஆங்கிலம் கட்டாயப் பாட மொழியாக இத்துணைக் காலமும் இருந்து வந்ததென்றால், பல்கலைக் கழகங்களிலும் பயிற்சி மொழி என்ற ஆதிக்க வாழ்வினைப் பெற்றிருந்த தென்றால், அதற்குக் காரணம் என்ன? தமிழ் மக்கள், தங்கள் விருப்பத்தின் பேரில் ஆங்கில மொழியைக் கற்க முன்வந்தார்களா?—இல்லை. தமிழைவிட ஆங்கிலம் வளமானமொழி என்பதற்காகத் தான் அந்த மொழியில் தமிழ் மக்களுக்குக் கல்வி கற்பிக்கப் பட்டதா? அதுவுமில்லை. ஆங்கிலத்திற்கு இன்றுள்ள விஞ்ஞான ஆற்றல், வாழ்வு, வளம், கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் நுழைந்த காலத்திலேயே இருந்தனவா? அப்படியுமில்லை. சுருங்கச் சொன்னால், தமிழகம் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த காலத்தில் தமிழ் மக்களின் விருப்பத்திற்கு மாறாக, அம்மொழி தமிழகத்துப் பள்ளிகளிலே கட்டாயப் பாடமாகத் திணிக்கப்பட்டது. பல்கலைக் கழகங்களிலும் போதனை மொழியாக்கப்பட்டது.

பாடமொழியாகப் பயில்வோம்

பரங்கிமொழிப் பக்தர்களைக் கேட்கிறோம், தமிழகம் ஆங்கிலப் பேரரசுக்கு அடிமைப்படாமலிருந்திருந்தால் நமது

தாயகத்தில் ஆங்கில மொழிக்கு இன்றுள்ள ஆதிக்கமும் அதிகாரமும் ஏற்பட்டிருக்குமா ?—ஒருபோதுமில்லை ஆகவே, இன்றளவும் ஆங்கில மொழி, அறிவு மொழி என்பதற்காக அல்லாமல், ஆதிக்க மொழி என்ற அளவிலேயே தமிழர் தலையில் சுமத்தப் பட்டிருக்கின்றது. இந்த ஆதிக்க நிலையன்றி, தமிழர் தங்கள் விருப்பத்தின் பேரில் ஏற்றுக்கொண்ட பாடமொழியாக மட்டும் ஆங்கிலம் நீடிப்பதென்றால், அதிலே நமக்கு ஆட்சேபனை இல்லை.

அந்த நிலையிலும், ஆரம்பப் பள்ளிகளில் ஆங்கில மொழிப் பாடம் தேவையில்லை. உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி பயிற்றுவிக்கப்படலாம். அங்கும், விருப்பப் பாடமாகத்தான்; கட்டாயமாக அல்ல. கல்லூரிகளில் ஆங்கிலம் இலக்கிய மொழியாகப் பயிலப்படலாம். ஆனால், பயிற்சி மொழியாக இருக்க ஆங்கிலத்தை அனுமதிக்கக் கூடாது. சுருங்கச் சொன்னால், ஒரு ஆங்கிலேயனைப் போல அல்லது ஆங்கிலேயனுக்கு அடிமைப்பட்டிருந்த காலத்தைப் போல, தமிழர் ஆங்கில மொழியைப் பயில முடியாது; பயிலவும் கூடாது. 'தமிழர்' என்ற உணர்வோடு, சுதந்திர நாட்டின் மக்களுக்குரிய தாய்மொழிப் பற்றோடு, தமிழின் வளர்ச்சிக்குத் தடையாக இல்லாத வகையில் ஆங்கிலம் பயிலலாம்.

இதுவே, நம் கொள்கை. ஏன் ? உலக நியதியும் இது தான். நீண்ட காலம் இந்த நாட்டில் ஆங்கில மொழி பயிலப்பட்டு வந்துள்ளதாலும், தமிழ் மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் ஆங்கிலம் பிரதான இடத்தைப் பெற்றுவிட்டதாலும் ஒரு இடைக்காலத்திற்கு ஆங்கில மொழியானது தமிழகத்துப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக இருக்கலாம். அதுவும், ஆரம்ப பள்ளியில் அல்ல; உயர்நிலைப் பள்ளி தொடங்கி கல்லூரிப் படிப்புவரை.

ஆங்கிலேயரும் சிரிப்பர்

இதுவரை கூறியவற்றால், தமிழ் மொழிப் பற்றாளரின் பார்வையில், நிகழ்கால-எதிர்காலத் தமிழகத்தில் ஆங்கில மொழிக்குரிய அந்தஸ்து என்னவென்பது தெளிவாக்கப் பட்டு விட்டது! ஆனால், பரங்கிமொழிப் பக்தர்களாக உள்ள தமிழர்கள், தாய்மொழிப் பற்றாளரின் இந்தக் கொள்கையை ஏற்கத் தயாராக இல்லை. அவர்கள் குறிக் கோள், ஆங்கில நாட்டு மக்களைப் போலவே தமிழகத்து மக்கள் ஆங்கில மொழியின் மூலமே எல்லாப் பாடங்களையும் கற்க வேண்டும் என்பதுதான். தெளிவாகச் சொன்னால், நாம் ஆங்கிலே யருக்கு அடிமைப்பட்டிருந்த காலத்தில் அமுலிலிருந்த கல்வி முறையே, சுதந்திரம் பெற்றுவிட்ட தமிழகத்திலும் அமுல் நடத்தப்பட வேண்டும் என்பதுதான்! இதனை ஏற்பதை விட மானக்கேடு தமிழர் வாழ்வில் வேறு இருக்கமுடியாது! இவர்களுடைய புத்தியைப் பார்த்து ஆங்கிலேயனும் சிரிப் பான்; சிரித்துக்கொண்டுதான் இருக்கிறான். பரங்கிமொழிப் பக்தர்கள் தங்கள் கட்சிக்கு ஆதரவாகச் சொல்லும் காரணங்களை மேலும் ஆராய்வோம்.

ஆங்கிலம் உலக மொழியா?

"ஆங்கிலம் உலகமொழி யாதலால், அது தமிழகத்திற்கு அன்னிய மொழி ஆகாது" என்கின்றனர். இது, கலப்பற்ற பொய். இந்தப் பொய்யை மெய்போல முடிவு கட்டிக்கொண்டு, இந்திய அரசியல் சட்டத்தில் காணப்படும் தேசிய மொழிகளின் பட்டியலிலே, ஆங்கிலத்தையும் சேர்த்துவிட வேண்டுமென்று வாதாடுகின்றனர், ஆங்கிலத் தமிழர்கள்!

ஆங்கிலம், இந்திய நாட்டிலுள்ள எந்த ஒரு சாதி சமய, இன மக்களுக்கும் தாய்மொழியாக இல்லை. ஏன்? ஆங்கிலோ- இந்தியருக்கு ஆங்கிலம் வீட்டு மொழியாக இருப்பதும் சந்தர்ப்ப நிர்ப்பந்தத்தால் ஏற்பட்டதே. நாளடைவில், ஆங்கிலோ-இந்தியர்கள் எந்த மாநிலத்தில் வாழ்கிறார்களோ, அந்த மாநிலத்து மொழியையே வீட்டு மொழியாகவும் நாட்டு மொழியாகவும் அவர்களே விரும்பி ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டே தீரும். இதனை நிச்சயமாக எதிர்பார்க்கலாம். அவர்கள் வாழ்வாங்கு வாழ இது ஒன்றே வழி. எனவே, ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு நாட்டாரின் தாய்மொழியை, இந்திய நாட்டில் வாழும் எவருக்குமே தாய்மொழி யல்லாத அந்நிய

மொழியைத் தேசிய மொழிக்குரிய அந்தஸ்தோடு இந்திய மக்கள் எப்படி ஏற்க முடியும்?

299 கோடியில் 26 கோடிப்பேர்

ஒரு மொழி உலக மொழியாக ஏற்கப்பட வேண்டுமானால், அதற்குச் சில தகுதிகள் இருக்க வேண்டும். அந்தத் தகுதிகள் ஆங்கில மொழிக்கு இல்லை. முதலில், உலக மக்களில் சரிபாதிக்கு மேற்பட்டவர்கள் அல்லது கிட்டத் தட்ட சரிபாதியை எட்டக்கூடிய எண்ணிக்கையினர் அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பின், அது உலக மொழியாகலாம். ஆங்கிலத்திற்கு அந்தத் தகுதி இல்லை. சுமார் 290 கோடி மக்களைக் கொண்ட உலகத்தில் ஆங்கில மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோர் 26 கோடிப் பேர்தான். அதாவது, உலகில் 12 பேருக்கு ஒருவர் தான் ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கின்றனர். ஆங்கில மொழிக்குரிய நாடுகளும், 1951-ஆம் ஆண்டு குடி மதிப்புக் கணக்குப்படி அந்த நாடுகளின் மக்கள் தொகையும் வருமாறு:—

இங்கிலாந்து 5,14,55,000; ஆஸ்திரேலியா 1,36,82,028; நியூசிலாந்து 22,32,591; கானடா 1,40,09,429, அமெரிக்கக் குடியரசு 17,40,64,000.

உலக முதன் மொழி சீனம், ஆங்கில மல்ல !

இந்த ஐந்து நாடுகளைத் தவிர வேறு எந்த ஒரு நாடும் ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கவில்லை, கானடாவிலும் மக்கள் தொகையில் மூன்றிலொரு பங்கினர் பிரெஞ்சு மொழி பேசுகின்றனர். தனியொரு நாட்டின் தாய்மொழியாக விளங்கும் சீன மொழி பேசுவோரின் எண்ணிக்கை 55 கோடி. சீன நாட்டில் மட்டுமின்றி, தென்கிழக்கு ஆசியாவில் உள்ள திபேத், மலேயா,

பர்மா, இந்தோ-சீனம் ஆகிய நாடுகளிலும் சீன மொழி பேசுவோர் பரவலாகவும், கணிசமான எண்ணிக்கையிலும் வாழ்கின்றனர்.

இதையெல்லாம் கவனத்தில் கொண்டு பார்த்தால் உலக மொழிகளில் முதன் மொழி என்று சொல்வதற்கான தகுதி ஆங்கிலத்தைவிட சீன மொழிக்கே அதிகமாக இருக்கிறது.

உலக மக்கள் தொகையான 290 கோடியில், சீனம் உள்ளிட்ட ஆங்கில மல்லாத மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டோர் 264 கோடியாவர். இந்தக் கணக்கைப் பார்த்த பிறகும் ஆங்கிலத்தை உலக மொழி என்று சொல்வது அறிவுடைமையாகுமா? ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொள்ளாத மக்களிலும், கோடிக் கணக்கானவர்கள் அம்மொழியில் நன்கு பயிற்சி பெற்றுள்ளனர் அவர்கள்வழி வந்தோறும் நன்கு பயிற்சி பெற்று வருகின்றனர் என்பதை நாம் மறந்துவிடவில்லை. அவர்களையும் கணக்கிலெடுத்துக்கொண்டு பார்த்தால்கூட, சீன மொழிக்குரிய முதலிடத்தைக் கைப்பற்றும் திறன் ஆங்கில மொழிக்கு இல்லை என்பதை உறுதியாகச் சொல்ல முடியும்.

மழைவிட்டும்...

உலக நாடுகள் பலவற்றில்-குறிப்பாக, இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் ஆங்கில மொழி பயிலப்படுகிறதென்றால், அதற்குக் காரணம், அந்த நாடுகளெல்லாம் கடந்த காலத்தில் ஆங்கிலப் பேரரசுக்கு அடிமைப்பட்டிருந்ததுதான். "மழை விட்டும் தூவானம் விடவில்லை" என்ற பழமொழிப்படி, ஆங்கில சாதியாரிடமிருந்து அந்த நாடுகள் விடுதலை பெற்ற பின்னரும், ஆங்கில மொழி ஆதிக்கத்தினின்றும் இன்னமும் விடுதலை பெறவில்லை. விரைவில் விடுதலை பெறப்போவது

திண்ணம். ஆம்; இந்தியா போன்ற நாடுகளில் ஆங்கில மொழிக்கு இன்றுள்ள செல்வாக்கு நிலையானதல்ல; தேய்ந்து வரும் திங்களைப்போன்றது.

ஆங்கில சாம்ராஜ்யம், அதிகாரத்தின் துணை கொண்டு மாட்டின் விருப்பத்தை யறியாமலே அதன் கழுத்தில் நுகத் தடியைச் சுமத்தும் எசமானைப்போல, தான் அடிமை கொண்ட நாடுகளில் வாழும் மக்களின் விருப்பத்தை அறியாமலே அவர்கள்மீது ஆங்கில மொழியைத் திணித் தது. அந்த நாடுகளின் சொந்த மொழிகளை அழிக்க முயன்றது. அதனாற்றான், ஆங்கில சாம்ராஜ்யம் வெளி யேறிய பின்னர் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தையும் வெளியேற்ற வேண்டும் என்ற கிளர்ச்சி விடுதலை பெற்ற நாடுகள் அனைத்திலுமே தோன்றியிருக்கிறது. அதி காரத்தின் துணைகொண்டு பெற்ற ஆதிக்கம், அந்த அதிகாரம் மறைந்ததும் அழிவது இயற்கைதானே!

நிலையற்ற வாழ்வு

பொதுவாக, ஆங்கில மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஐந்து நாடுகளுக்கு வெளியே உள்ள பிறமொழி நாடுகளில் ஆங்கில மொழிக்குத் தற்போதுள்ள அந்தஸ்து நிலையானதல்ல. ஆங்கில சாம்ராஜ்யம் சுருங்கச் சுருங்க உலகில் ஆங்கில மொழிக்குள்ள ஆதிக்க அந்தஸ்தும் சுருங்கிச் சுருங்கி இறுதியில் மறைந்துபோவது இயற்கை. இப்படி, தேய்ந்து கொண்டு வரும் சாம்ராஜ்ய அந்தஸ்தை நினைவில் கொண்டு ஆங்கிலத்தை உலக மொழியென்று சொல்லுவது பிரத்யட்ச ஞானமற்ற பேச்சாகும். பரங்கி மொழிப் பக்தர்கள், 'ஆங்கிலம் அகில உலக மொழி' என்று கூறுவதனை உண்மையிலேயே அகில உலகம் ஏற்றுக் கொண்டிருக்கிறதா? இல்லை, இல்லை, இல்லை என்று மும் முறையும் கூறுவோம்.

ஆங்கிலம் உலக பொதுமொழியானால், உலகில் உள்ள நாடுகள் ஒன்றோடொன்று தொடர்பு கொள்ள அம்மொழி ஒன்றுமட்டுமே பயன்படுவதாக இருக்க வேண்டும். ஆனால், நடைமுறை அனுபவம் இதற்கு மாறாக இருக்கிறது. குறிப்பாகச் சீனா, தன் சொந்த மொழியில்தான் உலக நாடுகளோடு தொடர்பு கொள்கிறது. ஒவ்வொரு நாட்டின் நிலையும் இது போன்றதே! கடந்த காலத்தில் ஆங்கிலர் சாதியாருக்கு அடிமைப்பட்டு, இன்றும் ஆங்கிலமொழிக்கு அடிமைப்பட்டுள்ள இந்தியாவின் போக்கு மட்டும் இந்த உலக நியதிக்கு விலக்காக இருக்கலாம். அதுவும் ஒரு இடைக்காலத்திற்குத்தான்.

அயல்நாடுகளைப் பார்!

இந்தியாவில், மத்தியிலும் மாநிலங்களிலும் இன்று ஆங்கிலம் ஒன்றே ஆட்சி மொழியாக இருந்து வருகின்றது. ஏன்? அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் இந்தியாவில் ஆங்கிலமே ஆதிக்கஞ் செலுத்தி வருகின்றது. அப்படியிருந்தும் இந்த நாட்டிற்கு வரும் சீனப் பிரதமரோ, சோவியத் பிரதமரோ, அல்லது ஆங்கில மொழிக்குரியதல்லாத வேறு எந்த நாட்டின் அதிபரோ நம்மிடையில் ஆங்கிலத்தில் பேசுவதில்லை. நாம் அவர்களுக்குத் தரும் வரவேற்பு உபசாரத்திற்குப் பதிலளிக்கையில் தத்தம் தாய்மொழியில்தான் பேசுகின்றனர். அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்ல ஒரு மொழிபெயர்ப்பாளரையும் தங்களுடன் கூட்டி வருகின்றனர். ஆங்கிலம் தெரியாததாலல்ல; அது தங்களுக்கு அந்நியமொழி என்பதால். சான்றாக, ஒரு சம்பவத்தை இங்கு கூறுகிறோம்.

எகிப்து அதிபர் திரு. நாசர் சென்னைக்கு வந்தபோது, நகரிலுள்ள குழந்தைகள் தியேட்டரில் தமிழகக் கலைஞர்கள் சார்பில் அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. நாசருக்கு

ஆங்கிலம் தெரிந்திருந்தும், அவர் தம் தாய்மொழியிலேயே வரவேற்புக்குப் பதிலளித்தார். அவரோடு வந்திருந்த மொழிபெயர்ப்பாளர், அவருடைய பேச்சை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

ஐ. நா. மன்றத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதியும்-அவர்களுக்கு ஆங்கிலம் தெரிந்திருப் பினும்-தங்கள் தாய்மொழியில்தான் அங்கு பேசுகின்றனர்.

இதெல்லாம், 'ஆங்கிலம் உலகப் பொது மொழி' என்ற கூற்றைச் சுதந்திர உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை என்ப தைக் காட்டவில்லையா?

ஐ. நா. மன்றத்தில்...

ஐ. நா. மன்றத்தின் நிர்வாகத்தையே எடுத்துக்கொள் வோம். ஆங்கிலம் 'உலகப் பொதுமொழி' என்றால், உலக நாடுகளின் பொதுச்சபையான ஐ. நா. மன்றத்தில் ஆங் கிலம் ஒன்றுமட்டுமே அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட மொழியாக இருக்க வேண்டுமல்லவா? இப்போது அப்படி யில்லை! 'ஏன் இல்லை?'-என்ற கேள்விக்கு நம் நாட்டிலுள்ள பரங்கிமொழிப் பக்தர்கள் பதில் சொல்ல வேண்டும். ஐ. நா. மன்றத்தின் அமைப்பு விதிப்படி ஆங்கிலம், பிரெஞ்சு, ருஷிய, சீன, ஸ்பானிஷ் ஆகிய ஐந்தும் அதிகார பூர்வமான மொழிகளாக சம அந்தஸ்தில் அங்கீகரிக்கப்பட்டிருக் கின்றன. ஐ. நா, பொதுச்சபையில், யாரும் எந்த மொழி யிலும் பேசலாம். ஆங்கிலத்தில்தான் பேச வேண்டு மென்ற நியதியோ நிர்ப்பந்தமோ இல்லை. அத்துடன், உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் அங்கீகரிக்கப்படாத மொழிகளில் பேசினால், ஆங்கிலம்-பிரெஞ்சு போன்ற அங்கீ கரிக்கப்பட்ட ஐந்து மொழிகளில் அந்தப் பேச்சுக்கள் மொழி பெயர்த்துக் கொடுக்கப்படுகின்றன. இது "ஆங்கிலம்

ஒன்றே உலகப் பொதுமொழி” என்ற கூற்றில், உள்ள பொய்யைப் புலப்படுத்திவிடவில்லையா ?

உலகமொழியல்ல

சீனாவிலுள்ள விஞ்ஞானியோ, ஜப்பானிலுள்ள தொழில் நுட்ப நிபுணரோ, தமக்குத் தாய்மொழியாக இல்லாத ஆங்கிலத்தைப் பயின்றிருக்கலாம். அந்த நாடுகளில் விஞ்ஞான-தொழில் நுட்பத் துறைகளில் பயிற்சி பெறும் தொழிற்கல்லூரிகளில் ஆங்கிலமும் விருப்பப் பாடமாகவோ, கட்டாயப் பாடமாகவோ வைக்கப்பட்டிருக்கலாம். அதனாலேயே, 'ஆங்கிலம் உலகப் பொதுமொழி' என்று சொல்லிவிட முடியுமா ?

மிகப் புராதனமான இந்து சமயத்தின் சாத்திர நூல்களைத் தன்னகத்தே கொண்ட சமஸ்கிருத மொழிகூட ருஷ்யா—ஜெர்மனி போன்ற நாடுகளில் பயிற்றுவிக்கப் படுகின்றது. அதுபோலவே, பிரெஞ்சு—ஜெர்மன் மொழிகளும் அம்மொழி வழங்காத நாடுகளின் பல்கலைக் கழகங்களில் பயிற்றுவிக்கப்படுகின்றன. அதுபோலத்தான், உலக மேதைகளில் சிலரோ, பலரோ ஆங்கிலம் பயில்கின்றனர். அந்த நிலையில் இந்த நாட்டிலும் ஆங்கில மொழி பயிற்றுவிக்கப் படுவதை யாரும் எதிர்க்கவில்லையே!

ஆகவே, ஆங்கிலம் உலகப் பொது மொழியென்று கூறப்படுவது சுத்தப் பொய்!

அநீதி! அநீதி!! அநீதி!!!

ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்ட 26 கோடி மக்கள் வாழுகின்ற ஐந்து பெரிய நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ. நா. மன்றத்தின் நிர்வாகம் கூட ஆங்கில மொழி ஒன்றினால் மட்டுமே நடத்தப்படவில்லை யென்றால்,

ஆங்கில மொழிக்குரிய ஒரு துண்டு நிலத்தைக்கூட அங்க நாடாகவோ, அடிமைக் காலனியாகவோ கொண்டிராத இந்திய யூனியனின் நிர்வாகம், ஆங்கில மொழி ஒன்றில் மட்டுமே நடைபெற வேண்டும் என்று கூறுவது அநீதியல்லவா? அதைவிட, ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகவும் வைத்திருக்க வேண்டும் என்று கட்சி கட்டிப் பேசுவது, வருங்காலச் சமுதாயத்துக்குச் செய்யும் துரோகமல்லவா?

இன்னும், பரங்கி மொழிப் பக்தர்கள் தங்கள் கட்சிக்கு ஆதரவாகச் சொல்லும் கருத்துக்களை ஆராய்வோம்.

ஒற்றுமைப் படுத்தியது ஆங்கிலமாம்!

ஆங்கிலம் உலகப் பொது மொழி அல்ல என்பதனைத் தக்க சான்றுகள் காட்டி நிரூபித்துவிட்டால், வேறொரு திசைக்கு நமது கவனத்தைத் திருப்பிவிட முயல்கின்றனர், பரங்கி மொழிப் பக்தர்கள். அதாவது,

"பல்வேறு சாதி-சமய-மொழி பேதங்களால் பிளவு பட்டுக் கிடந்த இந்தியர்களை ஒன்று படுத்தி, அவர்களிடையே தேசிய ஒற்றுமையையும் உரிமை உணர்ச்சியையும் ஏற்படுத்திய பெருமை ஆங்கில மொழி ஒன்றுக்கே உண்டு. அந்த ஒற்றுமை சிதறிப் போகாமலிருக்க வேண்டுமானால் தேசத்தின் ஐக்கியம் காக்கப்பட வேண்டுமானால், ஆங்கிலத்திற்கு இன்றிருக்கும் அந்தஸ்து நீடிக்கப்பட வேண்டும். அது உலக மொழியோ அல்லவோ, இந்தியாவின் ஒற்றுமைக்கு அந்த மொழி நமக்குத் தேவை."

என்று வாதாடுகின்றனர். ஆங்கிலம் உலக மொழி என்பது பொய்யாவது போல, "இந்தியர்களை எல்லாம் ஒற்றுமைப் படுத்திய மொழி" என்பதும் படு பொய்யாகும்.

அவர்கள் மட்டும்தான் இந்தியரோ ?

இந்திய மக்கள் தொகையிலே ஆங்கில மொழி பயின் ரேரின் எண்ணிக்கை நூற்றுக்கு ஒரு சதவிகிதமாகும். ஆம்; கடந்த நூற்றைம்பது ஆண்டுகளாக ஆங்கிலம் கட்டாயப் பாடமாக, உத்தியோக மொழியாக, 'உயர்சாதி' அந்தஸ்துக்குரியதாக இருந்து வந்த பின்னரும், ஆங்கிலம் பயின்ரேரின் எண்ணிக்கை நூற்றுக்கு ஒருசத விகிதத்துக்கு மேல் இல்லை என்பது மிகப் பரிதாபகரமான விஷயம். ஆகவே, ஆங்கிலத்தின் மூலம் இந்த நாட்டு மக்களிடையே ஒற்றுமையுணர்வு ஏற்பட்டிருக்குமானல், அது ஆங்கிலம் பயின்ற நூற்றுக்கு ஒரு சத விகிதத்தினரிடைதான் ஏற்பட் டிருக்க வேண்டும். இவர்கள் மட்டுந்தானு இந்தியர்கள்? ஆங்கிலம் பயிலாத தொண்ணூற்று ஒன்பது சதவிகிதம் பேர் இந்தியரல்லவா? இந்தியரிலே நூற்றுக்கு நூறு பேரும் ஆங்கில மொழி பயின்று அதன் மூலம் இந்திய சமுதாயத்தினரிடையே ஒற்றுமை வளருவதற்கான வாய்ப்பு எதிர்காலத்தில் என்றேனும் ஒருநாள் ஏற்படும் என்று பரங்கி மொழிப் பக்தர்கள் நம்புகிருர்களா? "ஆம்'' என்று வாதத்திற்காகச் சொல்லலாம். ஆனல், இந்தியா வின் கல்வித் துறை வரலாறு அவர்கள் கூற்றை மெய்ப் படுத்துவதாக இல்லை.

பல்வேறு மொழியினரிடையே தொடர்பு ஏற்படுத்தும் —உறவை வளர்க்கும் பொது மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டுமென்ருல், அந்த நிலையை ஏற்படுத்தக் கல்லூரிப் படிப்பு ஒன்றினுல்தான் முடியும்.

ஆம்; தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட ஒருவரும், காஷ்மீரியைத் தாய் மொழியாகக் கொண்ட இன்னெருவரும் சந்தித்துப் பேச, அவர்கள் தங்களிடையே கடிதப் போக்கு வரத்து நடத்த, உயர் தரப் பள்ளியளவில்

பெறுகின்ற ஆங்கில மொழியறிவு போதாது. இதனை ஒப்புக்கொள்ள ஆராய்ச்சி தேவையில்லை. அறிவும் நேர்மையும் இருந்தாற் போதும். இன்றைய நிலைமையில், கல்வி கற்றோரில் ஆயிரத்துக்கு மூவர்தான் ஆங்கில மொழியில் ஓரளவு ஞானமுடையவர்களாக இருக்கிறார்கள். ஆம்; ஆயிரம் பேருக்கு மூவர் ஆங்கிலப் பட்டதாரிகள்! அவர்கள் அத்தனை பேருமே ஆங்கிலத்தில் சரளமாகப் பேசிப் பழகவோ, பிழையின்றித் தெளிவாகக் கடிதம் எழுதவோ சக்தியுடையவர்கள் என்றும் சொல்வதற்கில்லை.

இந்த நிலையும், ஆங்கிலம் பயிற்சி மொழியாக மட்டுமல்லாமல், மத்தியிலும் மாநிலங்களிலும் ஆட்சி மொழியாகவும், நீதி மன்றங்களில் நிர்வாக மொழியாகவும் இருந்து வரும் தருணத்தில்!

பட்டதாரிகள் 12 லட்சமே!

இந்தியாவில், எழுதப் படிக்கத் தெரிந்தோர் அனைவருமே ஆங்கில ஞானமுடையோர் என்று சொல்லி விடுவதற்கில்லை. 1951-ஆம் ஆண்டு குடி மதிப்புக் கணக்குப்படி அப்போதிருந்த மக்கள் தொகையான 37 கோடியே 51 லட்சத்தில், 5 கோடியே 90 லட்சம் பேர்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். இந்த 5 கோடியே 90 லட்சம் பேரிலும், 52 லட்சம் பேர்தான் சுமாராகக் கல்வி கற்றவர்கள். இந்த 52 லட்சம் பேரிலும், 38 லட்சம் பேர்தான் உயர்தரப் பள்ளிப் படிப்புவரை படித்தவர்கள். இந்த 38 லட்சம் பேரிலும், 12 லட்சம் பேர்தான் பல்கலைக் கழகக் கல்வி பெற்றவர்கள். **இவர்களைத்தான் ஓரளவுக்கு ஆங்கிலம் கற்றவர்கள் என்று சொல்ல முடியும்.**

ஆங்கில மொழியின் வாயிலாக, மக்களிடையே ஒற்றுமை ஏற்பட்டிருக்குமானால், கல்லூரிப் படிப்புடைய

12 லட்சம் பேரிடம்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். வியப் பென்னவென்றால், ஆங்கில ஞானமுடைய அந்த 12 லட்சம் பேர்கூட ஒற்றுமையாக இல்லை என்பதுதான். இந்த நாட்டில் தோன்றியுள்ள சாதி—சமய—மொழி—இன—கட்சிச் சண்டைகளில் எதிரும் புதிருமான போர் முகாம்களிலே தலைவர்களாக இருப்போர், கல்லூரிப் படிப்புடையவர்கள் தான்.

இதுவா, ஆங்கிலத்தின் மூலம் நமது நாட்டவர் அடைந்த ஒற்றுமை ? இன்னும் விரித்துரைக்க விஷயமிருப்பினும், வெட்கத்தால் நிறுத்துகின்றோம்.

ஆகவே, இந்திய மக்களை ஒற்றுமைப்படுத்திய பெருமை ஆங்கில மொழிக்கே உரிமை என்று கூறுவது அறியாமை அல்லது அறிந்தே சொல்லும் பொய். இப்படிச் சொல்லுகவர்கள் ஆங்கிலப் பட்டதாரிகளை மட்டுமே இந்தியர்களாக எண்ணுகின்றனர் போலும்!

இன்று மட்டுமல்ல; இனி என்றென்றைக்குமே, இந்தியாவில் நூற்றுக்கு நூறு பேரோ, மிகப்பெரும்பாலான மக்களோ பரஸ்பரம் ஆங்கில மொழியிலே பேசியும் எழுதியும் பழகும் நிலை ஏற்படப் போவதே இல்லை. ஏற்படக்கூடும் என்று நம்புவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதைபோலத்தான் !

ஒற்றுமைப்படுத்தியது ஆங்கிலமல்ல

சிதறிக் கிடந்த இந்திய நிலப் பரப்பை ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்த சக்தி ஒன்று உண்டென்றால், அது ஆங்கில மொழியல்ல; ஆங்கில சாம்ராஜ்யமே! அது, மக்கள் மனவழி—அவர்கள் நலனுக்காக ஏற்பட்ட ஒற்றுமையல்ல. ஆளுவோர் மனவழி—அவர்கள் நலனுக்காக, ஆயுத பலங் கொண்டு ஏற்படுத்திய ஒருமையாகும். ஒற்றுமைக்கும்

ஒருமைக்கும் அடிப்படையில் வேற்றுமையுண்டு. இந்த ஒருமைப்பாடு, ஆங்கிலமல்லாத இந்திய மொழி ஒன்றின் மூலமும் ஏற்பட முடியும்.

பிரிட்டிஷார் இந்தியாவில் புகுந்து ஏகாதிபத்தியம் செலுத்தத் தொடங்கிய பின்னர் இலங்கை, பர்மா, ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளையும் இந்தியாவோடு சேர்த்து 'விசால இந்தியா'' ஏற்படுத்தினார்கள். விசால இந்தியாவில், ஆங்கிலமே எங்கெங்கும் ஆதிக்கம் செலுத்தியது. ஆம்; பரங்கி மொழிப் பக்தர்கள் கூறுவதுபோல ஆங்கில மொழியின் மூலம்தான் இலங்கைச் சிங்களவர்களும், பர்மியமொழியினரும், ஆப்கானியரும் இன்று நாம் காணும் இந்திய நாட்டு மக்களோடு பேசிப் பழகினார்கள், உயர் மட்டத்திலேயே! ஆனால், அந்த ஒருமையேனும் நிலைத்ததா?— இல்லையே!

இந்தியாவோடு இலங்கையைச் சேர்த்து வைத்த ஆங்கிலப் பேரரசே, பின்னர் அதைப் பிரித்துவிட்டதைக் கண்டோம். அதுபோல, இந்திய வைசிராயின் மேலாதிக்கத்திலிருந்து ஆப்கனைப் பிரித்ததும், இந்திய அரசின் நேர் நிர்வாகத்திலிருந்து பர்மாவைப் பிரித்ததும், அவற்றோடு அமையாது, இந்தியாவின் ஒரு பகுதியை வெட்டி எடுத்துப் பாகிஸ்தான் அமைத்ததும், ஆங்கிலப் பேரரசுதான்!

விசால பாரதம் எங்கே?

பிரிட்டிஷார் அந்த நாடுகளைப் பிரிவினை செய்தார்கள் என்பதோடு, ஆங்கிலம் படித்தவர்கள் தலைமையில் அந்த நாடுகளில் வாழும் மக்களும் இந்தியாவிலிருந்து பிரிந்து போகக் கிளர்ச்சியும் புரட்சியும் நடத்தினார்கள் என்பதையும் மறந்துவிடக்கூடாது. ஆங்கில மொழிக்கு ஒற்றுமைப் படுத்தும் சக்தியிருக்குமானால், ஆங்கிலேயர் படைத்த 'விசால பாரதம்' மறைந்து போயிருக்க முடியாது. அயர்லாந்தை ஆங்கிலேயர் ஆண்டபோது, அங்கு ஆங்கில மொழியே

ஆதிக்கம் செலுத்தியது. இருந்தும், ஆங்கிலேயர் வெளியேறியபோது, அந்நாடு துண்டாடப்பட்டது. இன்றளவும் வட அயர்லாந்து தென் அயர்லாந்திலிருந்து பிரிந்தே நிற்கிறது. இதுவா, ஆங்கில மொழிமூலம் அயர்லாந்து மக்கள் அடைந்த ஒற்றுமை!

உண்மை என்னவென்றால், ஒரு நாட்டின் அல்லது ஒரு உபகண்டத்தின் மக்கள், அந்நிய மொழி ஒன்றின் மூலம்- மக்களில் எல்லோருமே எளிதில் கற்க இயலாத ஒரு மொழியின் வழியாக ஒற்றுமைப்பட முடியும் என்று சொல்வது கற்பனை வாதம்! உலக சரித்திரத்தில் அதற்குச் சான்றில்லை!

பாரதி தந்த சாபம்

சரித்திரச் சான்றில்லாத—புதிதாகச் சான்று ஏற்படுத்தவும் சந்தர்ப்பமில்லாத ஒரு கொள்கையை, இந்திய நாட்டிலுள்ள படித்த மக்களிலே சிலர் கட்டுப்பாடாக வலியுறுத்தி வரக் காரணம், இந்த நாட்டிலே நூற்றுக்கு 85 பேர் கல்வியறிவு அற்றவர்களாக இருப்பதுதான்! படித்தவர்கள் சொல்லும் பொய்களை யெல்லாம் பாமர மக்கள் உண்மையென்று நம்பி விடுவார்கள் என்ற துணிவுதான். படித்த மக்கள்-பட்டம் பெற்ற மேதைகள், படித்தறியாத மக்களின் நலனுக்குத் துரோகம் செய்யாமல் பேசக் கடமைப் பட்டிருக்கின்றனர். அந்தக் கடமையிலிருந்து தவறினால், தவறியவர்களை நாம் நேரில் கண்டால், "படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால், ஐயோன்னு போவான்"-என்றாரே பாரதியார், அதைத்தான் ஆங்கிலம் பயிலாதவரும் சொல்லி ஆறுதலடைய வேண்டும். வேறு என்ன செய்வது?

பாகிஸ்தான், பர்மா முதலிய நாடுகளை இந்தியாவிலிருந்து பிரிக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்தவர்கள் ஆங்கில ஞானமற்ற தாய் மொழி வெறியர்கள் அல்லர்.

ஆங்கில மொழி பயின்று பட்டம் பெற்றவர்களே! பாகிஸ்தான் கோரி கிளர்ச்சி நடத்திய ஜனாப் ஜின்னாவும் அவரது தோழர்களும் ஆங்கில மொழியிற் பெரும் புலமை பெற்றவர்களே. மக்களை ஒற்றுமைப் படுத்தும் சக்தி ஆங்கில மொழியறிவுக்கு இருந்திருக்குமானால், பாகிஸ்தான் பிரிவினை பற்றிய கிளர்ச்சியில் பட்டம் பெற்ற மேதைகளெல்லாம் பங்கு கொண்டார்களே, ஏன் ? தமிழகத்திலும் தனித் தமிழ் நாடு, திராவிடத் தனிநாடு கோரிக் கிளர்ச்சி நடத்துவோர், "பார்-அட்-லா"க்களாகவும், எம்.ஏக்களாகவும் இருக்கிறார்களே, எதனால் ?

சுருங்கச் சொன்னால், சாதிப் பெயராலோ சமயத்தின் பெயராலோ, மொழியின் பெயராலோ எங்கு எந்த விதமான பிரிவினைக் கிளர்ச்சி நடைபெற்றாலும், அதனைத் துவக்கி வைத்தவர்கள், ஆங்கில மொழி படித்த மேதைகளாகவே இருந்ததை நாம் கண்ணெதிரே கண்டு வரும் காட்சி! இதனைப் பரங்கி மொழிப் பக்தர்கள் மறுக்க முடியுமா ?

மொழிவழி மாநிலம் அமைய வேண்டுமென்று கோரியவர்கள், தாய்மொழியைப் பயிற்சி மொழியாக்க வேண்டுமென்ற கொள்கையுடையவர்கள் அத்தனை பேருமே ஆங்கிலம் பயிலாதவர்களா? அப்படியுமில்லை.

திலகர் முதல்...

"இந்திய மாநிலங்களை மொழிவாரி திருத்தி அமைக்க வேண்டும்" என்று முதன் முதலாகக் கிளர்ச்சி துவக்கியவர் ஆங்கில மொழியில் கல்வி பயின்று பட்டம் பெற்ற லோக மான்ய திலகர். ஆங்கிலம் பயிலாத தாய்மொழி வெறியர் அல்ல; மொழிவாரி மாநிலக் கொள்கைக்காகத்தாம் உயிர்

விடுந்தருணம் வரை உழைத்து வந்தவர், பாரிஸ்டர் பட்டம் பெற்ற காந்தி அடிகளல்லவா?

இன்று தமிழருக்கு எதிராக பரங்கி மொழிக்கு ஆதர வளிப்போரின் 'பூர்வோத்ரம்' என்ன? "என்றென்றும் ஆங்கிலம்" என்று இன்று கோஷித்து வரும் தலைவர் ராஜாஜி, ஆங்கில மொழிக்குரிய இடத்தில் இந்தி மொழியை அமர்த்த முன்னர் பாடுபட்டவரல்லவா? அவர் 1939-ல் முதலமைச்சராக இருந்தபோதுதான் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் பயிற்சி மொழியாக்கப்பட்டது.

"ஆங்கில மொழியால்தான் அறிவு பெற்றேன்"— என்று இன்று பேசும் டாக்டர் சுப்பராயன், 1939-ல் இந்த மாநிலத்தின் கல்வி அமைச்சராக இருந்த போதுதான் உயர் நிலைப்பள்ளிகளில் ஆங்கிலத்திற்குப் பதில் தமிழைப் பயிற்சி மொழியாக்கினர்! "பல்கலைக் கழகத்திலும் தமிழைப் பயிற்சி மொழியாக்க இது முதற்படி" என்று அன்று டாக்டர் சுப்பராயன் அறிவிக்கவில்லையா? இவற்றை யெல்லாம் செய்து தாய்மொழிப் பற்றைத் தூண்டிவிட்டு, ஆங்கில மொழியைப் புறக்கணிக்க வேண்டும் என்ற போக்கை வளர்த்துவிட்டு, இன்று திடீரென்று "என்றென்றும் ஆங்கிலம்"—"எங்கெங்கும் ஆங்கிலம்" என்று பேசுகின்றனர் பரங்கி மொழிப் பட்டதாரிகள்! இதுதானு ஆங்கில மொழியில் கல்வி கற்றோரின் அரசியல் ஒழுக்கம்!

பிரிவதே மேல்

பாரத நாட்டு மக்களாகிய நாம், அன்னியரின்— நம்மை ஒன்றரை நூற்றாண்டுகள் அடிமைப் படுத்தி ஆண்ட வர்களின்—மொழியான ஆங்கிலத்தின் துணையின்றி ஒற்றுமைப்பட முடியாதென்பது உண்மையானல், அப்புறம் ஒற்றுமையைப் பற்றிப் பேசுவானேன்? இந்திய மொழி

களில் ஏதாவது ஒன்றின் மூலமே நாம் ஒற்றுமைப்பட முடியாதென்றால், ஒற்றுமைக்கான அம்சம் ஒன்றுகூட இந்திய மக்களிடையே இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். இதுதான் உண்மை என்றால், அன்னிய மொழி யொன்றின் மூலம் சேர்ந்து வாழ்வதைவிட, பிரிந்து வாழ் வதே நலம். ஆனால், அதிர்ஷ்டம் என்னவென்றால், 'ஆங்கிலத்தின் மூலம்தான் ஒன்று படமுடியும்' என்ற வாதத்தில் உண்மையில்லை என்பதுதான்.

ஒரு அந்நிய மொழியின் மூலம் மக்களிடையே ஒற்றுமை ஏற்படுத்துவது என்பது இயலாத காரியம். அதையும் தாய் மொழிக்கு எதிராகச் செய்ய முயல்வது பாவமான செயல். அந்தப் பாவச் செயலில் ஆங்கில மொழி பயின்ற பட்டதாரிகளில் சிலரோ பலரோ கட்டுப்பாடாக ஈடுபடுவது, தங்களை வழி காட்டிகளாகக் கொண்டுள்ள கோடானு கோடிப் பாமர மக்களுக்குச் செய்யும் துரோகம்!

விஞ்ஞான மொழியாம்!

இனி, "ஆங்கிலம் விஞ்ஞான மொழி; அதனால், அதனைப் பயிற்சி மொழியாக ஏற்க வேண்டும்"—என்ற வாதத் திற்குப் பதிலளிப்போம்!

"ஆங்கிலப் பேரரசை எதிர்த்து விடுதலைப் போர் நடத்த அறிவும் ஆர்வமும் ஆற்றலும் தந்ததே ஆங்கில மொழிதான்" என்று கூறுகின்றனர், பரங்கி மொழிப் பக்தர்கள். அதோடு நில்லாமல், ஆங்கில மொழியை அகற்றிவிட்டால், சுதந்திர உணர்வு செத்து மடிந்துவிடும் என்றும் பயமுறுத்துகின்றனர். இந்த நவீன மூட நம்பிக்கையாளர்களுக்கு, பரங்கி மொழிக் கல்வி நம் நாட்டுப் பள்ளிகளில் புகுவதற்கு முன்பே விடுதலைப்

போராட்டங்கள் நடந்திருக்கின்றன என்ற சரித்திரச் செய்திகூடத் தெரியாது போலும்!

கட்டபொம்மன் பரங்கிமொழி பயின்றவனு ?

பாரதத்தின் வரலாற்றைப் படித்தால், சுமார் 500 ஆண்டு காலம் மொகலாய வல்லரசை எதிர்த்து மக்கள் நடத்திய விடுதலைப் போர் நம் கவனத்தைக் கவரும். அந்தப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய மன்னர்கள், மதாச்சாரியர்கள், படைத் தலைவர்கள் ஆகியோரில் ஒருவர் கூட ஆங்கில மொழியில் பயிற்சி பெற்றவரல்லர் என்பது அகிலம் அறிந்த விஷயம். ஏன்? 'ஆங்கிலம்' என்ற ஒரு மொழி அந்தக் கால இந்தியாவில் நுழையவே இல்லை. இந்த நாட்டில் ஆங்கிலப் பேரரசை எதிர்த்து நடந்த விடுதலைப் போரையே எடுத்துக் கொள்வோம். பரங்கியர் கூட்டம் பாரதத்தின் தென்கோடியில் காலூன்ற முயன்ற பொழுதே அதனை எதிர்த்து விடுதலைப் போர் துவக்கி முதல் முழக்கம் செய்த வீரபாண்டியக் கட்டபொம்மன், ஆங்கிலம் படித்தவனு?

சற்றேறக் குறைய அதே காலத்தில் இந்தியாவின் வடகிழக்கே—வங்காளத்தில், கிழக்கிந்தியக் கம்பெனித் தலைவன் இராபர்ட் கிளைவை எதிர்த்து வீரப்போர் நடத்தினனே சுராஜ்-உத்-தவுலா, அவ்வீரன் ஆங்கிலம் அறிந்தவனு?

1857-ல் வட இந்தியா முழுவதிலும் "சிப்பாய்ப் புரட்சி" என்ற பெயரால் நாம் அழைக்கும் விடுதலைப் புரட்சி வெடித்தெழுந்ததே, அதில் ஈடுபட்டவர்கள் எல்லாம் ஆங்கில மொழியில் புலமை பெற்றவர்களா?

தெற்கே பரங்கியர் தலைகளைப் பனங்காய்களைப்போல வெட்டி வீழ்த்தி மண்ணில் உருட்டினனே திப்பு சுல்தான்,

அம்மாவீரன் பரங்கி மொழியில் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவனா?

இன்றும், வீரமங்கை வேலுநாச்சியார், மருது சகோதரர்கள் ஆகியோர் எல்லாம் பரங்கி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டார்களே, விடுதலை ஆர்வம் மிக்க அந்த மாவீரர்கள் ஆங்கிலத்தில் பி.ஏ. க்களா, எம்.ஏ-க்களா? எதுவுமில்லையே!

சரித்திரம் கூறும் இந்த உண்மைகளை எல்லாம் மறந்து 'பரங்கி மொழி கற்ற பின்னர்தான் பாரத மக்களுக்கு விடுதலை ஆர்வம் பிறந்தது' என்று பேசும் மேதைகளின் அறிவை என்னென்பது? இப்படிப் பேசுபவர்கள், தங்கள் அறிவையே அவமதித்துக் கொள்பவர்களாவதோடு, தங்கள் மூதாதையர்களையும் அவமதிப்பவர்களாகின்றனர்.

இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பம் வரை இந்நாட்டிலுள்ள சுகஜீவனக்காரர்கள் நாட்டின் அடிமைத்தனம் குறித்து கவலைகொள்ளவில்லை. அந்தக் காலகட்டம் வரை சுகஜீவனக் குடும்பங்களைச் சார்ந்தவர்களே பரங்கிமொழி பயின்று பட்டம் பெற்றுர்கள். அதனுல், அந்தக் 'குரோட்டன்ஸ்' செடிகள் பரங்கிமொழி மூலம் சுதந்திர உணர்வு பெற்றிருக்கலாம். மக்கள் நிலை அதுவல்ல.

1885-ஆம் ஆண்டில், பரங்கி மொழி பயின்ற பட்டதாரிகள் சிலர் கூடி காங்கிரஸ் மகா சபையைத் துவக்கினுர்களே, அவர்கள் கூட விடுதலை ஆர்வத்தால், அன்னியரை வெளியேற்ற வேண்டுமென்ற ஆத்திரத்தால் காங்கிரஸைத் துவக்கினுர்களில்லை. முதல் இருபது ஆண்டுகளில் பரங்கி மொழி பயின்ற பட்டதாரிகளின் அரச விசுவாசம், பதவிப் பித்து, உத்தியோக வெறி ஆகியவற்றையே எதிரொலி செய்தது காங்கிரஸ் மகாசபை! அந்த நலன்களை அடைவதற்காக அரச வாழ்த்தும் பாடப்பட்டது, மகா சபையிலே! பின்னர், நாளாக நாளாக, ஆங்கிலம் பயிலாத

மத்தியதர, சாதாரணப் பொதுமக்கள் காங்கிரசில் புகப் புக அவர்கள் காட்டிய அரசியல் ஆவேசத்தால் பரங்கி மொழி பயின்ற தலைவர்களும் போராட்டத் தீயில் குதிக்கும் தியாக உணர்வு பெற்றுர்கள். ஆம்; அந்த நிலையைத் தோற்றுவித்தது ஆங்கிலக் கல்வியல்ல; சந்தர்ப்ப சூழ்நிலை!

துரோகிகள் ஏராளம்!

பாரதத்தின் அரசியல் விடுதலைப் போர் நடந்த காலத்தில், பரங்கி மொழி பயின்று அறிவே பட்டம் பெற்றவர்கள் அத்தனை பேருமே அந்தப் போரில் பங்கு கொண்டார்களா? இல்லையே! ஆங்கில மொழியில் புலமை பெற்றவர்களிலே, விடுதலைப் போரில் பங்கு கொண்டவர்களைவிட, அதற்கு எதிராகத் துரோகம் செய்தவர்களின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கும். விளக்கமாகச் சொன்னுல், பரங்கி விசுவாசிகளைத்தான் முதலில் அறிமுகப்படுத்தியது ஆங்கிலக் கல்வி!

'துவிபாஷிகள்' என்ற பெயரில் நமக்கு அறிமுகமான முதன் முதலில் ஆங்கிலம் கற்ற நம் முன்னேரெல்லாம் பிரிட்டிஷ் விசுவாசிகள்தானே !

காந்தியடிகள், லோகமான்ய திலகர். மோதிலால். ஜவகர்லால், வ. உ. சிதம்பரனுர், வ. வெ. சு. ஐயர் போன்றவர்கள் விடுதலைப் போரில் தலைமை தாங்கினுர்கள் என்பதனுலேயே, அவர்களுடைய விடுதலை ஆர்வத்திற்கு அவர்கள் பெற்றிருந்த ஆங்கிலக் கல்விதான் காரணம் என்று கூறி விட முடியுமா? "கூறலாம்" என்ருல், அவர்களைப் போலவே ஆங்கில மொழியில் பயிற்சி இல்லாதவர்கள் எண்ணற்றேர் விடுதலைப் போரில் ஈடுபட்டனரே, அவர்களுடைய விடுதலை ஆர்வத்திற்குக் காரணம் யாது? அவர்களுடைய விடுதலை ஆர்வம் விலைமதிப்பற்றதோ!

மெக்காலே வகுத்துக்கொடுத்த ஆங்கில மொழிக் கல்வி இந்திய விடுதலைப் போருக்கு விரோதமாக, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு அடிமைச் சேவகம் புரியும் "அறிஞர்" களையும் உற்பத்தி செய்தது என்ற உண்மையை பரங்கி மொழி பக்தர்கள் மறந்துவிடக் கூடாதல்லவா? ஆங்கிலக் கல்விமுறை இந்திய மக்கள்மீது திணிக்கப்பட்டதே அதற்காகத்தானே!

சுருங்கச் சொன்னால், ஆங்கில மொழிக்கல்வி பயின்றவர்களில் சிலரே விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக இருந்தார்கள். பலர், அந்தப் போராட்டத்திற்குத் துரோகம் செய்தார்கள். இந்தச் சரித்திர உண்மையைப் பரங்கிமொழிப் பக்தர்கள் மறுக்க முடியுமா?

விடுதலைபெற்ற நாடுகளைப் பார்!

இன்னொரு சரித்திர உண்மையையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். அதாவது மக்கள் அடிமைப்பட்டதும் விடுதலைக்குப் போராடியதும் பாரத நாட்டிலே மட்டும் நிகழ்ந்த புதுமைகளல்ல. இந்தக் காட்சிகளை வேறு நாடுகள் பலவற்றின் வரலாற்றிலும் கண்டிருக்கிறோம். இன்னமும் கண்டு வருகிறோம். உலகில், ஆங்கிலப் பேரரசு ஒன்று மட்டுமே அல்லாமல், பிரெஞ்சு, டச்சு, போர்ச்சுகீஸ், பெல்ஜியம் போன்ற வேறு வல்லரசுகளும் இருந்து வருகின்றன.

ஆங்கிலப் பேரரசின் கீழ் அடிமைப்பட்ட நாடுகளில் விடுதலைக்குப் போராடிய தலைவர்கள் ஆங்கில மொழியில் கல்வி கற்றவர்களாக இருந்தார்களென்றால், பிரெஞ்சுப் பேரரசுக்கு அடிமைப்பட்ட நாடுகளில் விடுதலைப் போருக்குத் தலைமை தாங்கியவர்கள் பிரெஞ்சு மொழியில்

கல்வி கற்றவர்களாக இருந்தார்கள் என்பதை இங்கு நினைவூட்டுகிறோம்.

இந்த இரு மொழிக்குரியவை யல்லாத வேற்று மொழி வல்லரசுகளுக்கு எதிராக விடுதலைப் போர் நடத்திய தலைவர்களின் நிலையும் இதுதான். சான்றாக, பெல்ஜியத்திற்கு அடிமைப்பட்ட காங்கோ இன்று நம் கண்ணெதிரே விடுதலைக்குப் போராடி வருகிறது. அங்கே விடுதலைப் போருக்குத் தலைமை தாங்குவோர் ஆங்கிலமொழி பயின்று பட்டம் பெற்றவர்களல்லர்; பெல்ஜிய மொழியில் கல்வி கற்றவர்களே!

சுருங்கச் சொன்னால், ஒவ்வொரு நாட்டிலும் படித்த மக்களே விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி இருக்கிறார்கள்; பாமர மக்கள் அவர்களைப் பின்பற்றி இருக்கிறார்கள். இந்தப் பொது நியதிப்படியே பாரதத்திலும் படித்த மக்கள் விடுதலைப் போருக்குத் தலைமை தாங்கி மக்களை நடத்திச் சென்றார்கள். அவர்களுடைய படிப்பு ஆங்கில மொழியில் அமைந்ததற்குக் காரணம், பாரதம் ஆங்கிலேயருக்கு அடிமைப் பட்டிருந்ததுதான்.

இதற்கு மாறாக, வேறு எந்த மொழிக்குரிய வல்லரசுக்குப் பாரதம் அடிமைப்பட்டிருந்தாலும், இந்த நாட்டில் விடுதலைப் போர் நடந்தே இருக்கும். அப்போது, நமது தலைவர்கள் ஆங்கிலமல்லாத வேறொரு ஏகாதிபத்திய மொழியில் அறிவு பெற்றவர்களாக நமக்குத் தலைமை தாங்கி இருப்பார்கள்-அவ்வளவுதான்!

பாரதத்தின் உரிமைப் போரிலே படித்தவர்கள் தலைமை தாங்குவது, இந்த இருபதாம் நூற்றாண்டில் ஆங்கில மொழிப்படிப்பு மூலம் மட்டுமே நிகழ்ந்த புதுமை அல்ல. அதற்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலும் இன, மத வழிப்பட்ட உரிமைப் போர்கள் நடந்துள்ளன.

புராண காலத்தைப் பார்!

புராண காலத்தில் சமணம்-பௌத்தம்போன்ற புறச் சமயங்களைச் சார்ந்த துறவிகளும், பிட்சுக்களும் அணி அணியாகத் தமிழகத்தில் புகுந்து அகச் சமயங்களை அழிக்க முற்பட்டபோதும், தமிழிலே சமயக் கல்விகற்ற மேதைகள் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கிப் புறச் சமயங்களை எதிர்த்துப் போராடினர்-வெற்றியும் கண்டனர்.

"போராட்டம்" என்பதும் இருபதாம் நூற்றாண்டுப் புதுமை அன்று. நாகரிகம் தோன்றிய காலந்தொட்டே ஏதேனும் ஒரு காரணம் பற்றி சாதிகளிடையே, மதங்களிடையே, நாடுகளிடையே உரிமைப் போராட்டங்கள் நடந்து கொண்டுதானிருக்கின்றன. அந்தப் போராட்டங்களிலெல்லாம், எதிரும் புதிருமாக நின்ற முகாம்களில் தலைமை தாங்கியோர் அத்துணைபேரும் படித்தவர்கள்தாம். அந்த இயற்கை நியதிப்படிதான் ஆங்கிலப் பேரரசுக்கு எதிராக நடந்த இந்திய விடுதலைப் போரிலும் படித்தவர்கள் தலைமை தாங்கினர்கள்.

ஒருக்கால், ஆங்கிலக் கல்வி நம்மீது திணிக்கப்படாதிருப்பின், விடுதலைப் போர் பலாத்கார முறையில் ஆயுத பலங்கொண்டு நடந்திருக்கலாம். ஆங்கிலக் கல்வி ஆண்மையை அழித்துவிட்டதால், பரங்கிமொழி பயின்ற தலைவர்களுக்காகவேனும் அகிம்சை முறை தேவைப்பட்டு விட்டது-அவ்வளவுதான்! இந்த உண்மைகளை யெல்லாம் மறந்து ஆங்கிலக் கல்வியால்தான் பாரத மக்களாகிய நாம் சுதந்திர ஆர்வம் பெற்றோம் என்று கூறுவது பச்சைப் பொய். அப்படிக் கூறுபவர்கள் ஆங்கிலமொழியின் மூலம் தான் ஆங்கிலேயர்கள் நம்மை அடிமைப்படுத்தினர் என்ற உண்மையை மறைத்துப் பேசுகின்றனர்.

பாரத மக்களை அரசியல் ரீதியில் அடிமை கொண்ட ஆங்கிலேயர், அந்த மக்கள்மீது ஆங்கில மொழியைத் திணித்தில்லையானல், ஆங்கில சாம்ராஜ்யம் இந்த நாட்டில் ஒரு தலைமுறைகூட நிலைத்திருக்க முடியாமல் அழிந்து போயிருக்கும். அவர்கள், இந்தியாவில் ஆங்கில மொழிக் கல்வியைப் புகுத்தியது, இந்திய மக்களுக்குச் சுதந்திர ஆர்வம் ஊட்டுவதற்காகவா?-இல்லை. அப்படி என்னுவது மூடத்தனம்.

ஆங்கிலக் கல்வியின் கேடு

இந்திய மக்களின் நாடி, நரம்பு, ரத்தத்தில் உள்ள சுதந்திர உணர்வை முற்றிலும் அழிப்பதற்கே ஆங்கிலக் கல்வியைப் புகுத்தினர். அந்தக் கேட்டிலிருந்தும் பிழைத்து ஆங்கிலக் கல்வி பயின்றோரில் சிலர் விடுதலைப் போருக்குத் தலைமை தாங்கினர்களென்றல், அதனைத் தெய்வ அருளாகவே நான் கருதுகின்றேன். அப்படிக் கருதித்தான் மக்கள் அந்தப் பெரியார்களைப் பின்பற்றினர்கள்.

படித்த மேதைகளுக்கு இதுகூடத் தெரியவில்லையே என்று நினைக்கும்போது அவர்கள்மீது எனக்குப் பரிதாபம் தோன்றுகின்றது!

கடன்பெற்ற வாழ்வுதானே!

"விஞ்ஞான, தொழில் நுட்பக் கலைகளை ஆங்கில மொழியின் மூலம்தான் பயிலமுடியும். அவற்றைப் பயிற்றுவிக்கும் அளவிற்குத் தமிழ் மொழி வளர்ச்சி பெறவில்லை; பெறுவதும் எளிதன்று. ஆகவே, மாநில ஆட்சி தமிழில் நடைபெறுவதாயினும், கல்லூரிகளில் பயிற்சி மொழியாக ஆங்கிலமே என்றென்றும் நீடித்தும் நிலைத்தும் இருக்க வேண்டும்'' என்கின்றனர், பரங்கிமொழிப் பக்தர்கள்.

இவர்களுடைய இந்தக் கருத்தை, தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கு ஆதரவாக உள்ளோரிலும் பலர் ஆதரிக்கின்றனர்.

விஞ்ஞானக் கலையறிவோ, கண்டுபிடிப்போ ஆங்கில மொழியின் தனி உடைமை அல்ல. அம்மொழியிலுள்ள விஞ்ஞானக்கலை நூற்களனைத்துமே அதற்கே சொந்தமானவை என்று எண்ணுவதும் தவறு. விஞ்ஞானிகள் ஆங்கிலமொழி அல்லாத வேறு மொழிகளைப் பேசுவோரிடையிலும் தோன்றி இருக்கின்றனர். விஞ்ஞான நூற்கள் ஜெர்மன், பிரெஞ்சு, கிரேக்கம் போன்ற ஆங்கிலத் தொடர்பற்ற மொழிகளிலும் தோன்றியுள்ளன. அவற்றையெல்லாம் மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் சேர்த்துக்கொண்டார்கள் ஆங்கிலேயர்கள்.

ஆம்; ஆங்கிலத்தில் உள்ள விஞ்ஞானத் தொழில் நுட்பக் கலை நூல்கள் அனைத்துமே அம்மொழிக்குரிய முதல் நூற்களல்ல. ஜெர்மனி, பிரெஞ்சு, கிரேக்கம் ஆகியவற்றிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட நூற்களே அதிகம். அது போல, நாமும் ஆங்கிலத்திலுள்ள விஞ்ஞானக் கலை நூற்களைத் தமிழில் மொழி பெயர்த்துக் கொள்ளலாமே!

விஞ்ஞானிகளும் விலக்கல்ல

விஞ்ஞானி ஒவ்வொருவரும் தாம் கண்டு பிடித்த ஒன்றைப் பற்றிய நுணுக்கங்களை, அவற்றைக் கண்டு பிடிக்கத் தாம் மேற்கொண்ட முயற்சிகளை முதலில் தம் தம் தாய்மொழியிலேயே எழுதி நூலாக்குகின்றனர்.

விஞ்ஞானிகளில் எவரேனும் தமது கண்டு பிடிப்பைப் பற்றிய நுணுக்கங்களை முதன் முதலாக ஆங்கில மொழியில் எழுதியிருப்பின், அதற்குக் காரணம் அவரது தாய்மொழி ஆங்கிலமாக இருந்ததுதான். ஒருக்கால், ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்ட நாடுகளில் அத்தி பூத்தாற்போலத்

தோன்றிய ஒன்றிரு விஞ்ஞானிகள் மட்டுமே இந்த விதிக்கு விலக்காக இருக்கலாம். இன்னும் சொன்னால், விஞ்ஞான ரீதியான கண்டு பிடிப்பிற்கும் மொழிக்கும் சம்பந்தமேயில்லை. தன்னுடைய அறிவின் துணைகொண்டே விஞ்ஞானி ஒரு அற்புதத்தைக் கண்டு பிடிக்கிறார். பின்னர், அதனைப் பிறருக்கு அறிவிக்கும் கருவியாகவே மொழியைப் பயன்படுத்துகிறார். ஆகவே, ஒரு மொழியின் எழுத்துக்களிலோ, சொற்களிலோ விஞ்ஞானக் கண்டு பிடிப்புத் திறமை ஒட்டி, உறவாடிக் கொண்டிருக்கவில்லை. ஆங்கில மொழி ஒன்றுக்கு மட்டுமே விஞ்ஞானத் தொழில் நுட்பக் கலைகளைப் பயிற்றுவிக்கும் ஆற்றல் உண்டென்றால், உலக நாடுகள் அனைத்திலும் அம்மொழியே பயிற்சி மொழியாக ஏற்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், நடைமுறை அப்படியில்லையே!

சீனா, ருஷ்யா, பிரெஞ்சு, ஜெர்மன், ஜப்பான் போன்ற முன்னேற்றமடைந்துள்ள நாடுகளிலெல்லாம் அந்தந்த நாட்டின் சொந்த மொழிதான் பயிற்சி மொழியாக இருந்து வருகின்றது. இன்று நேற்றல்ல; விஞ்ஞானக் கலை தோன்றிய காலந்தொட்டே. ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் வாழும் அமெரிக்கக் குடியரசு, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கானடா, நியூஜிலாந்து ஆகிய நாடுகளில் மட்டுமே ஆங்கில மொழியைக் கருவியாகக் கொண்டு விஞ்ஞான பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

உலக நாடுகள் அனைத்திற்குமுரிய இந்த நியதியை ஒட்டித்தான், தமிழகக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்குமாறு கோருகின்றனர், தாய் மொழிப் பற்றுளர்கள். இதில் தவறென்ன?

காந்தியடிகள் கூறுகிறார்

"பயிற்சி மொழியை மாற்றிவிட்டால்-பிரதேச மொழியைப் பயிற்சி மொழியாக்கி விட்டால்-நம்மிடையே மேலும்

மேலும் ஜகதீஸ் சந்திர போஸ்களும், சர், சி. வி. ராமன்களும் தோன்ற மாட்டார்கள்"—என்று கூறி நம்மைப் பயமுறுத்துகின்றனர், பரங்கி மொழிப் பக்தர்கள். இவர்களுக்குக் காந்தியடிகளைக் கொண்டு பதிலளிப்போம்:

"பி. சி. ரேயும், சி. வி. ராமனும் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகளாகத் திகழ்ந்தார்கள் என்றால், அதற்கு அவர்கள் பெற்ற ஆங்கிலக் கல்விதான் காரணம் என்று சொல்லிவிட முடியாது. அவர்கள் தங்கள் கண்டு பிடிப்பை முதலில் தங்கள் தாய்மொழியில் எழுதியிருப்பினும் உலகப் புகழ் பெற்றிருப்பர் என்பதில் ஐயமில்லை. ஏன்? இந்தியாவில் விஞ்ஞானக் கலை தாய் மொழியில் போதிக்கப்பட்டிருப்பின் இன்னும் எத்துணையோ ஜே. சி. போஸ்களும், சி. வி. இராமன்களும் பி. ஸி. ரேக்களும் தோன்றியிருப்பார்கள்."

–இது காந்தியடிகளின் கருத்தாகும். காந்தி அடிகள் ஆங்கில மொழி பயிலாதவரல்ல. இலண்டன் நகரிலே தங்கிப் படித்துப் பரங்கி மொழியில் 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றவர். இந்த நாட்டு மக்களின் நலனில் அக்கரை காட்டுவதிலே அவரை மிஞ்சுவார் இன்னொருவர் இருக்க முடியாது. காந்தி அடிகளின் பயிற்சி மொழிக் கொள்கை, தேர்தல் வெற்றியைக் கருதியதுமல்ல. ஆகவே, பரங்கி மொழிப் பக்தர்கள், தேசப் பிதாவின் கருத்துக்கேனும் மதிப்பளிக்கலாமே!

தாய்மொழி தந்த வாழ்வுதானே!

ஆங்கில மொழி மூலமே விஞ்ஞானத் தொழில் நுட்பக் கலைகளைப் பயில்வதால் பாரதம் அடையக் கூடிய பலன்களை நினைப்பூட்ட "அமெரிக்காவைப் பார்! பிரிட்டனைப் பார்! அந்த நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பார்! பார்! பார்!"—என்றெல்லாம் அலங்கார பாணியிலே அடுக்கிப் பேசுகின்றனர். அமெரிக்காவும், பிரிட்

டனும் முன்னேறியுள்ள நாடுகள் என்பதை நான் மறுக்க வில்லை. ஆனால், அந்தப் பெருநாடுகள் தங்கள் சொந்த மொழியின் மூலம்தான் முன்னேறியிருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

தன் மொழியைப் புறக்கணித்து, அந்நிய மொழியைக் கல்லூரிகளில் பயிற்சி மொழியாக்கி முன்னேற்றமடைந்த ஒரு சுதந்திர நாடு இந்த உலகில் உண்டா? உண்டானால் எடுத்துச் சொல்லட்டுமே!

தொழில் துறையில் ஜப்பான் அடைந்துள்ள முன்னேற்றம் உலக நாடுகள் அனைத்துமே பொறாமைப்படத் தக்கதாகும். இரண்டாவது பெரும் போரில் தனக்கு ஏற்பட்ட மகத்தான அழிவுக்குப் பிறகும் தொழில் துறையில் உலக நாடுகளிடை தனக்குள்ள முதல் ஸ்தானத்தை ஜப்பான் இன்னமும் இழந்து விடவில்லை. இத்தகைய மகத்தான முன்னேற்றத்தை ஜப்பான் ஆங்கில மொழியின் மூலம் பெறவில்லை. தனது சொந்த மொழி யான ஜப்பான் மொழி மூலமே அடைந்தது. அப்படியே, ஜெர்மனியும் நவீன விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட தொழில் துறையில் மற்ற நாடுகளுக்கு வழிகாட்டும் வகையில் முன்னேற்றம் அடைந்திருப்பதை மறுக்க முடியுமா?

பாட்டிக் கதை

"ஆங்கில மல்லாத வேற்று மொழிகளில் விஞ்ஞானப் பாடங்கள் பயிற்றுவிக்கப் படலாம். அந்த மொழிகளைப் பேசுவோரிடையிலும் விஞ்ஞானிகள் தோன்றி யிருக்கலாம். அவர்களுடைய நாடுகளும் தொழில் துறைகளில் முன்னேறி இருக்கலாம். ஆனாலும் ஆங்கில மொழி மூலம் விஞ்ஞானம் கற்றவர்களே அதிசயிக்கத்

தக்க வகையில் முன்னேறி வருகின்றனர். இது ஒன்றே ஆங்கில மொழியின் சிறப்புக்கு அத்தாட்சி"

என்கின்றனர் ஆங்கிலப் பக்தர்கள். இது பழங்கதை விரைவில் பாட்டிக் கதையாகவும் மாறலாம்.

நவீன விஞ்ஞானக் கருவிகளைக் கண்டு பிடிப்பதில் ஆங்கில மொழி நாடுகளையும் பின்னடையச் செய்த பெருமை முன்னர் ஜெர்மனிக்கு உண்டு. இப்போது அந்த ஆற்றலும் அற்புதச் சக்தியும் ருஷ்யாவின் கைக்கு மாறி வருகின்றன. ஆம்; எந்தக் காலத்திலுமே நவீன யந்திரக் கருவிகளைக் கண்டு பிடிக்கும் ஆற்றல் ஆங்கில மொழியினரின் ஏக போகத்தில் இருந்ததில்லை.

ருஷ்யாவில் பயிற்சி மொழி அந்நாட்டு மொழியேயன்றி ஆங்கில மொழி அல்ல. ருஷ்ய மாநிலங்களில் அந்தந்த மாநிலத்து மொழியிலேயே உயர்தரக் கல்வி கற்பிக்கப் படுகின்றன. சோவியத் ருஷ்யா விஞ்ஞானத் துறையில் அடைந்துள்ள அதிசயிக்கத்தக்க முன்னேற்றத்தின் அந்தரங்கத்தை அறிய அமெரிக்க-பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் எல்லாம் ருஷ்ய மொழி படிக்கிறார்கள் என்ற செய்தியை அண்மையில் பத்திரிகைகளில் படித்தோம்!

பட்டதாரிகளின் பார்வை!

இதிலிருந்து ஆங்கில மல்லாத வேறு மொழிகளின் மூலமும் விஞ்ஞானக் கலை பயின்று ஆங்கில மொழி நாடுகளைவிட முன்னேற முடியும் என்ற உண்மை புலனாக வில்லையா? நம் நாட்டு அறிஞர்களில்-ஆங்கிலப் பட்டதாரி களில் சிலரோ அல்லது பலரோ, உலக மொழி பற்றிய விஷயத்தில் அந்தகாரப் பேரிருளில் ஆழ்ந்து கிடக்கின்றனர்.

இந்த நாட்டை 150-ஆண்டுகளுக்கு மேலாக ஆங்கில மொழிக்குரிய சாம்ராஜ்யத்தினரே அடிமைப்படுத்தி ஆண்ட

நாலும், அடுத்துள்ள வேறு பல நாடுகளிலும் அவர்களை ஆதிக்கம் செலுத்தியதாலும், நம் நாட்டு அறிஞர்களுடைய தொடர்பெல்லாம் ஆங்கிலேயரோடும், ஆங்கில சாம்ராஜ்யத்தோடுமே அதிகப்படியாக இருந்து வந்திருக்கிறது. அது காரணமாக, ஆங்கில சாம்ராஜ்யத்துக்கு வெளியேயுள்ள மிகப் பெரிய உலகத்தைப்பற்றி இந்திய மேதைகள் அதிகம் தெரிந்து கொள்ளவில்லை. அதனால்தான், உலகம் முழுவதிலும் ஆங்கில மொழி ஒன்றே செங்கோல் செலுத்தி வருவதாக இவர்கள் நம்பிக் கிடக்கின்றனர். இந்த மூட நம்பிக்கையிலிருந்து இவர்களை விடுவிக்க வேண்டியோ, றும் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை எதிர்த்து ஒரு இயக்கம் தேவைப்படுகிறது.

தகவல் புத்தகங்கள்

ஆங்கிலத் தமிழர்கள் தமிழைப் பயிற்சிமொழியாகக் கூடாதென்பதற்கு மற்றொரு காரணத்தையும் காட்டுகின்றனர்.

"ஆங்கில மொழியில், கல்வி பயிற்றுவிப்பதற்கான விஞ்ஞான-தொழில் நுட்பக் கலைப் பாட புத்தகங்களே யன்றி, அக்கலை பற்றிய தகவல் (ரெபரன்ஸ்) புத்தகங்களும் ஏராளமாகக் குவிந்து கிடக்கின்றன. அவை, விஞ்ஞானக் கலை பயிலும் மாணவர்களுக்கும், அவர்களுக்குப் பாடஞ் சொல்லித்தரும் பேராசிரியர்களுக்கும் பயன்படுகின்றன. அவற்றை யெல்லாம் தமிழில் மொழிபெயர்ப்பதென்பது எளிதானதோ, இப்போதைக்கு முடியக்கூடியதோ அல்ல. ஆனால், அத்தகைய தகவல் நூற்கள் மாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் இன்றியமையாது உடனடியாகத் தேவைப்படுகின்றன. ஆகவே, ஆங்கிலத்திலுள்ள தகவல் புத்தகங்களெல்லாம் தமிழில், மொழிபெயர்த்து முடிக்கும்

காலம்வரையேனும் ஆங்கிலமே பயிற்சி மொழியாக நீடிக்க வேண்டும்.''

என்கின்றனர். தகவல் (ரெபரன்ஸ்) புத்தகங்கள் ஆங்கிலத்தில் குவிந்துகிடக்கின்றன என்பதையோ, அந்தக் குவியல், விஞ்ஞானக் கலை பயில்வோருக்கும், பயிற்றுவிப்போருக்கும் இன்றியமையாது தேவைப்படுகின்றது என்பதையோ நான் மறுக்கவில்லை. அந்த ஆங்கில நூற்களை தமிழில் மொழிபெயர்த்து முடிப்பதிலுள்ள கஷ்டத்தையும், காலதாமதத்தையும் நான் குறைத்து மதிப்பிடவுமில்லை. ஆனால், இந்தச் சங்கடம் சமாளிக்க முடியாததல்ல. சமாளிக்கக் கூடியதே.

விஞ்ஞானக் கலைகளைத் தமிழில் பயிற்றுவிப்பதற்காக நமக்குத் தேவைப்படும் புத்தகங்கள் இருவகையானவை. ஒரு வகை, வகுப்புகளுக்குத் தேவைப்படும் பாடப் புத்தகங்கள். மற்றொருவகை, பேராசிரியர்கள்-மாணவர்கள் ஆகியோருடைய திறமையை வளர்ப்பதற்கான தகவல் புத்தகங்கள். இந்த இருவகைப் புத்தகங்களும் தமிழில் அவசியமாகத் தேவைப்படுகின்றன என்பதில் ஐயமில்லை. என்றாலும், பாடப் புத்தகங்கள் மட்டுமே அவசரமாகத் தேவைப்படுகின்றன. தகவல் புத்தகங்களை மெல்ல மெல்லத் தமிழில் தயாரித்துக்கொள்ளலாம். இரண்டையுமே அவசரத் தேவையாகக் கருதுவது, தமிழைப் பயிற்சி மொழியாக்க விடாமல் தடைபோடும் தந்திரமாகும்.

உடனடித் தேவை பாடப் புத்தகங்களே

வகுப்புக்குத் தேவையான பாடப் புத்தகங்களை மட்டும் உடனடியாகத் தமிழில் தயாரித்துக்கொள்ளலாம். அது, முயன்றால் முடியாத காரியமல்ல. இப்போதே பி. ஏ. வகுப்புக்கான பாட புத்தகங்கள் தமிழில் தயாரிக்கப்பட்டு விட்டன. மற்றுமுள்ள விஞ்ஞான-தொழில் நுட்பக் கலை

களுக்கான பாடப் புத்தகங்களையும், தமிழில் உடனடியாகக் கொண்டுவர முடியும். அவற்றைத் தயாரிப்பதற்கான அறிவும், ஆற்றலுமுடையோர் பலர் அதிர்ஷ்டவசமாக நம்மிடையே இருக்கின்றனர். சந்தர்ப்பம் தந்து, சாதனங்களையும் திரட்டிக் கொடுத்தால், அவர்களால் இதனைச் சாதிக்க முடியும்.

அடுத்து நமக்குத் தேவைப்படுவது தகவல் புத்தகங்கள். இவற்றை உடனடியாக ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்து ஆகவேண்டுமென்ற அவசியமில்லை. அந்தப் பணியை இப்போதே துவக்கி, நாளடைவில் செய்து முடிக்கலாம்; முடிக்கவும் வேண்டும், ஆனால், அதற்காகக் காத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. உடனடித் தேவைக்கு ஆங்கில மொழியிலுள்ள தகவல் புத்தகங்களை மொழி பெயர்க்காமலே பயன்படுத்திக் கொள்ளலாம். ஆரம்பப் பள்ளியில் நான்காம் வகுப்பு தொடங்கி, கல்லூரிப் படிப்பு முடியும் வரை ஆங்கிலத்தை ஒரு பாட மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த வகையில், கல்லூரிக்குச் செல்வதற்கு முன்பே ஆங்கில மொழியில் ஞானம் பெற வாய்ப்பிருக்கிறது. அந்த ஞானத்தைக் கொண்டு, தகவல் புத்தகங்களை ஆங்கிலத்திலேயே படித்துக்கொள்ளலாம். அதற்கேற்ப ஆங்கிலக் கல்வியின் தரத்தையும் உயர்த்தலாம். இதில் இழிவொன்றுமில்லை. இது, தமிழ் மொழியின் பலவீனமும் அல்ல. விஞ்ஞானக் கலைப் பயிற்சியானது ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மாறுகின்றபோது எந்த ஒரு மொழிக்கும் இந்தச் சிக்கல் ஏற்படுவது இயற்கை. இந்தச் சிக்கலை மேற்சொன்ன வகையில்தான் தவிர்த்துக்கொள்ள முடியும். வேறு வழியில்லை.

தாகூரின் கிண்டல்

தகவல் புத்தகங்களை ஆங்கிலத்தில் படித்துக்கொள்ள அனுமதிப்பதைக் கேவலமாகக் கருதுவதென்றால், அப்புறம்

ஆங்கில மொழியை ஒரு பாடமாகப் பள்ளிகளில் வைப்பதில் அர்த்தமே இல்லை. ஆங்கிலேயர் போனவழி நோக்கி ஆங்கில மொழியையும் மூட்டைக்கட்டி அனுப்பிவிட வேண்டியதுதான்!

'பாடப் புத்தகங்கள் மட்டுமே அல்லாமல், தகவல் புத்தகங்களும் மொழி பெயர்க்கப்பட்ட பிறகுதான் தமிழைப் பயிற்சி மொழியாக்க வேண்டும்' என்று கூறு வோர்க்கு கவி தாகூர் பதிலளிக்கிறார்:

> "உயர்தரக் கல்வி, பாடப் புத்தகத்துக்காகக் காத் திருந்தால், தழைக்குப் பின் நான் தோன்றுவேன் என்று மரம் காத்திருக்கும்; கரைக்குப்பின் நான் தோன்றுவேனென்று நதி காத்திருக்கும்."

இப்படிக் கூறியவர், ஆங்கில மொழியின் வளமறியாத வரல்ல. ஆங்கில உலகமே யன்றி, அகில உலகமும் புகழ்ந்துகொண்டிருக்கும் ஆங்கிலக் கவிபுமாவார்.

"விஞ்ஞானக் கலை நூற்களைத் தமிழில் மொழி பெயர்ப்பது என்றென்றைக்குமே சாத்திய மாகாது. அதனைச் சாத்தியமாக்கும் திறமை தமிழ் மொழிக்கு இல்லை" என்று கூறி, நம் அன்னை மொழியான கன்னித் தமிழை அவமதிக்கின்றனர், ஆங்கிலங் கற்றவர்களிலே சிலர். சுப்பிரமணிய பாரதியார், தாம் வாழ்ந்த காலத்தில் இப்படிச் சொன்ன ஒருவரைப் 'பேதை' என்று கூறிப் பழித்தார். 'ஆதிசிவன் பெற்றுவிட்டான்' எனத் துவங்கும் அவரது பாடலிலே இதனைக் காணலாம். பாரதி பழித்த பேதையின் வாரிசுகள் இன்னமும் நம்மிடையே வாழ் கின்றனர். இவர்களுக்குத் தமிழ் மொழியின் வளமோ, வரலாறோ தெரிந்திருக்க நியாயமில்லை. ஏனெனில், இந்த 'ஆங்கில வேந்தர்கள்' தமிழில் எழுதப் படிக்கக்கூடத் தெரி யாத பாமரர்களாவர். தமிழே பயிலாத இவர்கள்தான்

'தமிழில் முடியாது' என்று முடிவு கட்டிக்கொண்டு விட்டனர். ஏன் முடியாது?

வடக்கே பார்!

ஆக்ரா பல்கலைக் கழகத்தில் பி. ஏ.-பி. காம். வகுப்புகளில் இந்தி பயிற்சி மொழியாக்கப்பட்டிருக்கின்றது. அலிகார் பல்கலைக் கழகத்தில் யூனானி மருத்துவமும், அறுவைச் சிகிச்சையும் உருதுவில் பயிற்றுவிக்கப்படுகின்றன. அலகாபாத்-காசி பல்கலைக் கழகங்களில், பி. ஏ-பி. எஸ். ஸி., பி. காம்,-ஐ. ஏ. ஐ. எஸ். ஸி,-ஐ. காம் வகுப்புகளிலெல்லாம், இந்தியும் பயிற்சி மொழியாக்கப்பட்டுள்ளன. முன்னர், உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் எல்லா வகுப்புகளிலுமே உருது பயிற்சி மொழியாக்கப்பட்டது. இராஜபுதானா, சாகர் பல்கலைக் கழகங்களில் ஐ. ஏ., ஐ. காம்,-பி. ஏ. பி. காம்.-எம். ஏ., பி. இ. (ஆனர்ஸ்), பி. வி. எஸ். சி. ஆகிய வகுப்புகளிலெல்லாம் இந்தி பயிற்சி மொழியாக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள சில லட்சம் சிங்களவர்களன்றி, இந்தக் கடல் சூழ்ந்த உலகில் வேறு எவராலும் பேசப்படாத சிங்கள மொழிகூட பல்கலைக் கழகப் பயிற்சி மொழியாக்கப்பட்டு வருகிறது. அரசாங்க அலுவலகங்களில் மட்டுமன்றி, நீதிமன்றங்களிலும் சிங்களம் ஒன்றே நிர்வாக மொழி என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆம்; ஆங்கிலேயர் வெளியேறிய பின்னுள்ள பதின் மூன்று ஆண்டு காலத்தில் மற்ற மொழிகள் எல்லாம் விஞ்ஞான தேவியின் ஆலயத்தில் பிரவேசித்து விட்டன. ஆனால், நம் அன்னை மொழியான கன்னித் தமிழுக்கு மட்டும் ஆலயப் பிரவேசம் இல்லையாம்! அவள் அறிவிருந்தும், கற்காலத்துக்கும் முற்பட்ட நாகரிகம் இருந்தும் தீண்டப்படாதவளாம்!

பரங்கிமொழிப் பக்தர்களைக் கேட்கிறோம்: இந்தி மொழிக்கும் சிங்கள மொழிக்கும் உருதுமொழிக்கும் விஞ்ஞானக் கலைகளைப் பயிற்றுவிக்கும் ஆற்றல் உண்டென்றால், அவற்றினும் இலக்கண-இலக்கிய வளமுடைய தமிழுக்கு மட்டும் 'இல்லை'என்று கூறுவது அறிவுடைமையாகுமா? விஞ்ஞானப் பாடங்களைப் பயிற்றுவிக்கத் தமிழில் முடியாதென்றால், இந்திய மொழிகளில் வேறு எதனாலும் முடியாதென்று துணிந்து கூறலாம்.

மூட நம்பிக்கை

பிரதேச மொழிகளில் விஞ்ஞானக் கலைகளைப் பயிற்றுவிக்க முடியுமென்று நான் மட்டும் கூறவில்லை. இங்கிலாந்திலேயே தங்கி ஆங்கில மொழி பயின்று பாரிஸ்டர் பட்டம் பெற்ற காந்தியடிகள் கூறுகின்றார்:

> "குறித்த ஒரு மொழியில் சயன்ஸ் சம்பந்தமான கருத்துக்களையும், வேறு பல நுணுக்கமான விஷயங்களையும் தெளிவாக எடுத்துச் சொல்ல முடியாதென்றும், அந்த மொழியில் வளர்ச்சிக்கு இடமில்லை என்றும் சிலர் சொல்லி வருகிறார்கள். இதைவிடப் பெரிய மூடநம்பிக்கை வேறு கிடையாது."

இதனை, 'காந்தி மலர்' 1-ஆம் பகுதியில் 'மாணவருக்கு' என்ற தலைப்பின் கீழ் காணலாம். ஆம்; தமிழில் விஞ்ஞானம் பயிற்றுவிக்க முடியாது என்றோ, ஆங்கிலத்தில் தான் பயிற்றுவிக்க முடியும் என்றோ கூறுவது, 'மூடர்களின் முணுமுணுப்பு' என்கிறார் காந்தியடிகள். இனி, ராஜாஜியை அணுகுவோம்:

ராஜாஜி கருத்து

'போதனை முறை முழுவதும் ஆங்கிலமாகவே இருக்க வேண்டுமென்று சொல்வது தவறு.

"பரிபாஷைகளை-அதாவது, பொருள்களின் பெயர்களை ஆங்கிலத்தில் வைத்துக்கொண்டு தமிழிலேயே பாடஞ்சொல்லித் தர முடியும். லத்தீன் பெயர்களை வைத்துக்கொண்டு ஆங்கிலத்தில் பாடஞ் சொல்லித் தருவது போல் நாமும் சொல்லித் தரலாம்.

"சில சொற்கள் அன்னிய பாஷையாக இருக்க வேண்டியபடியினால் முழுதுமே ஆங்கில பாஷையாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. தெளிவாகப் புரிந்து கொள்வதற்குத் தாய்ப் பாஷை அவசிய மாகிறது. இடையில் வரும் ஆங்கிலச் சொற்களைப் பற்றிக் கவலை இல்லை.

"மோட்டாரில் என்ஜின் சரியாக வேலை செய்ய வில்லை. கார்ப்பரேட்டர் சரியாகவே இருக்கிறது"— இந்த உதாரணத்தை வைத்துக்கொண்டு மேலே சொல்லப்பட்டதை உதாரணமாகக் கொள்ளலாம்."

இது, 'கல்கி'—1956 செப்டம்பர் 23-ஆம் தேதி இதழில் வெளியான கட்டுரை ஒன்றில் தலைவர் ராஜாஜி தெரிவித்துள்ள கருத்தாகும்.

இன்று இந்தியாவின் துணைத் தலைவர் பதவியிலமர்ந் திருக்கும் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், ஆங்கில மொழி ஞானத்தில் அகில உலகப் பிரசித்தி பெற்றவர். முன்னர் காசி இந்து சர்வகலாசாலையில் துணை வேந்தர் பதவி வகித்தவர். தத்துவ நூல்கள் பலவற்றை ஆங்கில மொழியில் இயற்றியவர். அத்தகைய மேதையின் தலைமையில் பாரதம் விடுதலை பெற்றதும், பல்கலைக் கழகக் கல்வியைப் பரிசீலிக்க ஒரு தனிக் குழுவை நியமித்தது மத்திய அரசாங்கம். அந்தக் குழுவில் நம் நாட்டு மேதைகளும், அயல்நாட்டுக் கல்வித் துறை நிபுணர்களும் அங்கம் வகித்தனர். அந்தக் குழு "பல்கலைக் கழகக் கல்வியையும் தாய் மொழியிலேயே

அல்லது பிரதேச மொழியிலேயே தரவேண்டும்'' என்று முடிவு செய்துள்ளது. இதனைப் பரங்கிமொழிப் பக்தர்கள் மறந்திருக்க முடியாதல்லவா?

இன்னும், தமிழக அரசினர் அமைத்துள்ள தமிழ் வளர்ச்சி-ஆராய்ச்சிக் கழகத்தில் ஆங்கில மொழியில் பேரறிவு பெற்றவர்கள், அகில உலக நாடுகளிலெல்லாம் சுற்றுப்பயணம் செய்து கல்வித்துறையில் அநுபவம் பெற்றவர்கள், சட்டம்-விஞ்ஞானம்-கலையியல்-தொழிலியல் ஆகிய நவீன கலைகளைப் பயின்று பட்டம் பெற்றவர்கள், அக்கலைகளைப் பயிற்றுவிக்கும் பேராசிரியர்கள் ஆகியோரெல்லாம் அங்கம் வகிக்கின்றனர். அந்தக் கழகம்தான் பி. ஏ. வகுப்பில் தமிழைப் பயிற்சிமொழி யாக்கவேண்டுமென்ற முடிவை ஏகமனதாகச் செய்து அரசினரை ஊக்குவித்தது. ஆம், அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தர் பதவி வகிக்கும் திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளையின் ஆதரவோடு!

இதை எல்லாம் மறந்து "தமிழைப் பயிற்சி மொழி யாக்க வேண்டுமென்று கூறுவோரெல்லாம் ஆங்கில மொழியில், விஞ்ஞானக் கலையில் ஞானமற்றவர்கள்'' என்பது போலப் பரங்கிமொழித் தாசர்கள் பிரச்சாரம் செய்து வருவது வியப்பைத் தருகின்றது.

ஆணவப் போக்கு

இன்னும், கவியரசி சரோஜினிதேவி, விஞ்ஞானி டாக்டர் பி.சி. ரே., இந்திய அரசில் கல்வி அமைச்சர் பதவி வகித்த அபுல்கலாம் ஆசாத் போன்றவர்களும், பல்கலைக் கழக மான்யக் கமிஷன் தலைவர் திரு. சி. டி. தேஷ்முக், பல மொழிகளிலும் புலமையுடைய ஆச்சாரிய வினோபாஜி போன்ற மேதைகள் எல்லோரும் பிரதேச மொழிகளைப் பயிற்சி மொழியாக்குவதற்கு மன நிறைவோடு ஆதரவு

தந்துள்ளனர். இதை எல்லாம் மறந்து, மேதாவிலாசம் தங்கள் நெற்றியில் மட்டுமே ஒட்டப்பட்டிருப்பது போல பரங்கிமொழிப் பக்தர்கள் பேசித்திரிவது அவர்களுடைய ஆணவப் போக்கையே காட்டுன்றது.

ஏன்? இன்று தமிழுக்கு எதிராகப் போர்க்கோலம் கொண்டு, தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களை யெல்லாம் கூட்டணி சேர்க்கும் சென்னைப் பல்கலைக் கழகம்கூட தமிழைப் பயிற்சிமொழி யாக்குவதற்கு ஆதரவு காட்டி, 1926-லும் 1939-லும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிற தென்பதை முன்பே எடுத்துக் காட்டியுள்ளேன்.

அப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் ஏ. எல். முதலியாரல்ல!

ஆம்; இன்று தமிழில் விஞ்ஞானக் கலைகளைப் பயிற்றுவிக்க முடியாது, முடியவே முடியாது என்று கூச்சலிடும் சென்னைப் பல்கலைக் கழகமோ, அதன் பாதையிலே பவனி செல்லும் பரங்கிமொழி மேதைகளோ, பயிற்சி மொழிப் பிரச்சனையில் ஒரு நிலையான கொள்கை உடையவர்கள் அல்லர்.

அவர்களுடைய இன்றையப் போக்கு அவர்கள் கடந்த காலத்தில் கொண்டிருந்த கொள்கைக்கு முரண்பட்டதாகும்.

முன்ஷியின் இந்திவெறி

'பயிற்சி மொழி எதுவாக இருப்பினும், இந்தியா முழுவதற்கும் ஒரே மொழியாக இருக்க வேண்டும்'-என்பது ஒரு வாதம். இந்த இடத்தில், பரங்கி மொழிப் பக்தர்களும் இந்தி மொழி வெறியர்களும் ஒன்றுபடுகின்றனர், பிரதேச மொழிகளுக்கு எதிராக! இதோ சான்று :—

"ஆங்கிலத்தை வாழ்க்கையின் பலதுறைகளிலிருந்தும் அறவே ஒழித்துவிட வேண்டும் என்ற இயக்கங்கள் பலமாக நடக்கின்றன. ஆங்கிலம் எவ்வளவு சீக்கிரமாக நீக்கப்படுகிறதோ அவ்வளவு சீக்கிரமாக இந்தியினால் அதன் இடத்தைப் பூர்த்திசெய்ய முடியாது. நடுவில் இருக்கும் இடைவெளியில் பிரதேச மொழிப்பற்று நுழையப் பார்க்கிறது. ஆங்கிலத்தை நீக்கிவிட வேண்டுமென்ற அளவுக்கு மீறிய வைராக்கியத்தின் மூலம், இந்தி மொழிக்கு எதுவும் லாபம் ஏற்பட்டு விடவில்லை. அதற்கு மாறாக, நஷ்டம்தான் ஏற்பட்டிருக்கிறது. நமது தேசப் பற்றுக்குத் தற்பொழுது 'கிரஹண பிடை' பிடித்திருக்கிறது. தேசத்தைத் துண்டாடும் அளவுக்கு மாகாணப்பித்துத் தலைக்கேறுகிறது.

"ஆங்கிலத்தை நீக்கும் விஷயம் ஏதோ மாபெருந்தேசத் தொண்டு என்று சாதாரணமாகப் படலாம். ஆனால், இன்றையதினம் நமக்குச் சம்பவிக்க இருக்கும் மிகப் பெரிய அபாயம் பிரதேச மொழிப்பற்றுதான்"

இப்படிக் கூறியவர், திரு. கே. எம். முன்ஷியாவார். அவர் பெயரால் 7-3-54 "தினமணி கதிரில்" வெளியான கட்டுரையிலிருந்தே மேற்கண்ட பகுதியை எடுத்துக்காட்டியுள்ளோம். அந்தக் கட்டுரை, அவர் வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவாகும்.

தமிழா, ஏமாறாதே!

இப்போதைக்கு முன்ஷி ஆங்கில மொழியை ஆதரிப்பதில் அக்கரை காட்டுகிறார். அதன் உள்நோக்கம் இந்திக்கு எதிரானதல்ல. இந்தி மொழி தயாராகும்வரை, நாளை அது அடையவேண்டிய பயிற்சிமொழிப் பீடத்தைப் பிரதேச மொழி பிடித்துவிடாமல், ஆங்கில மொழியின் ஆதிக்கத்

தைத் தற்காலிகமாகக் காப்பாற்ற வேண்டு மென்பதுதான். இதனை வெளிப்படையாகவே கூறிவிட்டார் திரு. முன்ஷி. ஏன்? 'என்றென்றும் ஆங்கிலம்' என்று இன்று கூறுவோ ரெல்லாம், அந்த நோக்கம் நிறைவேறிவிட்டால், "எங்கெங் கும் இந்தி"-என்று கோஷிக்கவும் தயங்கமாட்டார்கள்.

அவர்கள் குறிக்கோள் ஒரு மொழி கொண்டு குமரி முதல் இமயம் வரை உத்தியோக வேட்டை நடத்த வேண்டும் என்பதுதான். அதற்கு அதிகமாக உயர்ந்த லட்சியம் எதுவும் அவர்களிடமில்லை.

பரங்கிமொழிப் பக்தர்களுக்கும், இந்தி மொழி வெறியர் களுக்கும் ஒரு விஷயத்தில் ஒற்றுமை உண்டு. அது, பிரதேச மொழியைப் பயிற்சிமொழியாக்க விடாமல் தடுப் பதுதான். பயிற்சிமொழி இந்தியா முழுவதற்கும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று கூறுவதில் பொருளிருப்பது போலத் தோன்றலாம். அது வெறும் மாயை!

"தமிழில் மருத்துவக் கலையோ, பொறியியற் கலையோ பயின்று தேர்வுபெறும் ஒரு தமிழர் வடக்கே சென்று தொழில் புரிய முடியுமா? அத்தகையவர்கள் மத்திய அர சாங்க நிர்வாகத் துறைகளில் திறமையுடன் பணிபுரிய இயலுமா?"—என்றெல்லாம் கேட்கப்படுகின்றன. இது, அர்த்தமற்ற கேள்வி.

இந்தி-ஆங்கில ஞானம்

தமிழில் மருத்துவக் கலையோ, பொறியியற் கலையோ கற்றுத் தேர்வுபெறும் ஒருவர் 15 ஆண்டு காலம் ஆங்கில மொழியையும் பயின்று, அதில் தேர்ச்சி பெற்றவராக இருப் பார். அத்துடன் உயர்நிலைப்பள்ளியில் நான்காம் படிவம் தொட்டே இந்தியையும் கட்டாயப் பாடமாக ஏற்று, சுமார் எட்டாண்டு காலம் அம்மொழியைப் பயின்று தேர்வு

பெற்று இருப்பார். இப்படி, ஆங்கில-இந்தி மொழிகளில் பெற்ற புலமையைக் கொண்டு எந்த ஒரு பட்டதாரித் தமிழரும் வட இந்தியாவில் மட்டுமல்லாமல், அதற்கப் பாலுமுள்ள ஆங்கிலமொழி உலகத்திலும் உத்தியோகம் பெற்றுத் திறமையாகப் பணிபுரிய முடியும்.

ருஷ்ய மொழியில் தொழில் நுட்பக் கலை பயின்ற ருஷ்ய நிபுணர்கள் இந்தியாவிற்கு வந்து சூர்கேலா தொழிற் சாலையை நிர்மாணிப்பதில் நமக்கு உதவி புரியவில்லையா? ருஷ்யமொழி பயிலாத அமைச்சர் பக்தவத்சலம் ஆங்கில மொழி வழங்காத சோவியத் ருஷ்யாவுக்குச் சென்று அங்குள்ள விவசாய முன்னேற்றத்தை ஆராய்ந்து அறிந்து வரவில்லையா?

சீன மொழியில் ஞானமில்லாத இந்தியர் சீனாவுக்குத் தூதுவராக அனுப்பப்படவில்லையா?

இந்தோனேசியர் தாய்மொழியில் ஞானமில்லாத டாக்டர் சுப்பராயன் அவர் தம் நாட்டில் இந்தியத் தூதுவராக இருந்து சிப்பந்திகளின் துணையுடன் செயல்புரியவில்லையா?

இதெல்லாம் சாத்தியமாகிற தென்றால், இந்தி—ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் புலமைபெற்ற ஒரு தமிழர்—தமிழிலே விஞ்ஞானத் தொழில் நுட்பக் கலை பயின்றவர்-வடஇந்தியாவில் தொழில் பார்ப்பது மட்டும் எப்படிச் சாத்தியமில்லாமற் போகும்?

ஒரே மொழி வாதம்

இந்தியாவில் பல மொழிகள் வழங்குவதால் விஞ்ஞானத் தொழில் நுட்பக்கலை பயில, பாரதம் முழுவதற்கும் ஒரே மொழி பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறுவோர், சோவியத் ருஷ்யாவைப் பார்க்கட்டும். அந்த

நாட்டில் எழுத்து வடிவத்தோடு கூடிய பதினெட்டு மொழிகள் பயிற்சி மொழிகளாக இருந்து வருகின்றன. ஆம்; ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநில மொழியே பயிற்சி மொழியாக்கப் பட்டிருக்கிறது. அதுபோல இந்தியாவிலும் செய்வதால் கேடொன்றுமில்லை. சோவியத் ருஷ்யாவில் முடிந்தது இந்தியாவில் ஏன் முடியாது?

"தமிழில் முடியுமா ?"-என்று கேட்போர், விஞ்ஞானக் கலைச்சொற்கள் தமிழில் இல்லை என்று காரணங்காட்டி, 'முடியாது' என்று முடிவுகட்டி விடுகின்றனர். இவர்கள் தமிழின்பால் பற்றுக்கொண்டு, அது தம் தாய்மொழி என்பதையும் மனதில் பதியவைத்து ஆராய்வார்களானால், தங்களுடைய முடிவு அறியாமையின்பாற்பட்டது என்பதனை வெகு எளிதாக அறிந்துகொள்வார்கள்.

"தமிழில் முடியாது"—என்று சொல்லும் இவர்கள் "முடியவும் கூடாது" என்ற எண்ணம் உடையவர்களே! ஒரே வாசகத்தில் சொன்னால், தமிழ் மொழியின் வளர்ச்சியில் இவர்களுக்கு அக்கறையில்லை.

தற்போதைய நிலையில், தமிழில் விஞ்ஞானக் கலைச்சொற்கள் போதுமான அளவில் இல்லை என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால், அதற்குக் காரணம் தமிழின் திறமையின்மையா ?-இல்லை.

அன்றே செய்திருந்தால்...?

விஞ்ஞானக் கலைகள் பற்றிய பாடங்களைப் பள்ளிகளில் போதிக்கத் தொடங்கியபோதே, ஆங்கிலத்துக்குப் பதிலாகத் தமிழைப் பயிற்சி மொழியாக்கி இருந்தால், இதற்குள் விஞ்ஞானச் சொற்கள் தமிழிலும் கொள்ளை கொள்ளையாகக் குவிந்திருக்கும். அப்படி ஒரு வாய்ப்புத் தராததால், தருவதில்லை என்ற முடிவுடன், பரங்கி-

மொழியை வழங்குவதால், தமிழில் கலைச் சொற்கள் தேவைப்படுமளவிற்குக் குவியவில்லை. ஆனால், இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப்போய் விடவில்லை. தமிழைப் பயிற்சி மொழி ஆக்கிவிட்டால், நாம் எதிர்பார்ப்பதைவிடக் குறைந்தகால அளவிலேயே விஞ்ஞானச் சொற்கள் தமிழில் பெருகிவிடுவது திண்ணம்.

''கலைச் சொற்கள்'' என்று சொல்லும்போது, ''அசலா, நகலா ?'' என்ற கேள்வி பிறக்கிறது. அதற்கு 'இரண்டும்' என்று ஒரே சொல்லில் பதிலளிக்கலாம். ஆங்கில நூற்களிலுள்ள கலைச் சொற்கள் அனைத்துமே அம்மொழிக்கேயுரிய அசல் சொற்களல்ல. அங்கும், அசலுமுண்டு; நகலுமுண்டு. அந்த மரபுப்படி தமிழிலும் ஆங்கில நூற்களிலுள்ள கலைச்சொற்களை எடுத்துத் தமிழ் இலக்கணவழித் திருத்திப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

உயர்தரக் கல்வியில், 'ஆங்கிலம் வேண்டுமா, ஆங்கிலச் சொற்கள் வேண்டுமா ?' என்ற கேள்விக்குப் பதிலளித்துத் தீரவேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். 'இரண்டும் வேண்டாம்' என்று பதிலளிக்கத்தான் விரும்புகின்றோம். ஆனால், நிலைமை அதற்குச் சாதகமாக இல்லை. எனவே, 'ஆங்கிலம் வேண்டாம்; அவசியமானவிடத்து, ஆங்கிலச் சொற்கள் வேண்டும்' எனப் பதிலளிக்கிறோம்.

நாவலர்-பாவலர் கருத்து

'பிறமொழிச் சொற்களே கூடாது' என்ற வைதிகம் விஞ்ஞானத் துறையில் வெற்றிபெற முடியாது. நல்ல வேளையாக, தனித் தமிழ்க் கட்சியார்கூட, ஆங்கிலச் சொற்களுக்கு எதிராக இல்லை. ஆனால், தமிழின் தனித் தன்மை கெடாமல் பிறமொழிச் சொற்களை ஏற்க வேண்டும்.

"இன்றியமையாமை கருதியல்லாது, இந்திமொழியினின்றே, ஆங்கில மொழியினின்றே, சொற்களைக் கடன் வாங்காமை நன்று. தமிழ்ச் சொற்களையே தேர்ந்தெடுத்தல் மேன்மை தரும்."

என்கிறார், 'இராமகிருஷ்ண விஜயம்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் சுவாமி பரமாத்மானந்தர். இவர், கலைச் சொல்லாக்கப் பணியில் பல்லாண்டு காலம் ஈடுபட்டவர் ஆவார்.

தனித் தமிழ்க் கொள்கையுடைய நாவலர் சோமசுந்தர பாரதியாரும், பிற மொழிச் சொற்களைத் தமிழில் சேர்த்துக் கொள்வதை சில நிபந்தனைகளோடு வரவேற்கிறார் :

"முன் அறியாத பொருள்களும் கருத்தும் எழுங்கால், பழைய நம் மொழிகளில் அறிவதற்குரிய புதிய சொற்களைப் படைத்தல் வேண்டும்.

அஃதியாதெனில், வடசொல், திசைச்சொல் வாய்ப்புள கொள்ளலாம். அயல் நாட்டுப் பிறமொழிச் சொற்களும் வேண்டுமிடங்களில் வாங்கி வழங்கலாம்.

பிறமொழிச் சொற்களை எடுத்தாளுகையில், தமிழ் எழுத்தியல்பு, மொழி மரபு எதுவும் பிறழவிடாமல் மாற்றி வழங்கலாம்.

எவ்வகையானும் தமிழ்மொழி இயலின் தகவிகவாமல், புதிய சொற்களைப் புகுத்துதல் வேண்டும்."

அரசவைக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்களும் பிற மொழிச் சொற்களை வரவேற்கிறார் :

"விஞ்ஞானத்துக்கு வேண்டிய கலைச்சொற்கள் பிரதேச மொழியில் இல்லையே என்பதற்காகக் காத்திருக்காமல், தகுந்த கலைச்சொற்கள் பிரதேச

மொழியில் உருவாகிற வரைக்கும் ஆங்கிலச் சொற்களையே உபயோகிக்கலாம்.''

ஆங்கில மொழியின் மூலம் நமக்கு அறிமுகமாகும் கலைச்சொற்களில் மிகப் பெரும்பாலானவை கிரேக்க, ஜெர்மன், பிரெஞ்சு, லத்தீன் ஆகிய மொழிகளிலிருந்து பிறந்தவையே! அம் மொழிகளிடமிருந்து கலைச் சொற்களைக் கடன் பெற்றில்லையானல் ஆங்கில மொழிக்கு இன்றிருக்கும் புதுவாழ்வு ஆரம்பத்திலேயே புதைந்துபோயிருக்கும். பொதுவாக, ஆங்கில மொழியிற் கலந்துள்ள கலைச்சொற்களில் பெரும்பாலானவற்றை உலகனைத்திற்குமுரிய பொதுச்சொற்களாகவே கருத வேண்டும். அப்படித் தான் கருதுகின்றது விஞ்ஞான உலகம். தமிழகம் மட்டும் இதற்கு விலக்கல்ல. ஆனல், கலைச்சொற்கள் எல்லாமே இரவற் சொற்களாக இருந்துவிடக்கூடாது. அதனல் தமிழின் வளர்ச்சி தடைப்படும். ஆகவே, தமிழுக்கே உரிய சொந்தச் சொற்களையும் தோற்றுவிக்க வேண்டும். தூய தமிழ்ச் சொல் தோன்ற முடியாதவிடத்து திசைச் சொற்களைப் பயன்படுத்தலாம். அதற்கு மேலும் அவசியப்பட்டால் ஆங்கிலத்தின் மூலம் அறிமுகமான கலைச் சொற்களை தமிழ் இலக்கண வழித் திருத்திப் பயன்படுத்தலாம். அதில் தவறில்லை.

"தமிழில் முடியும்'' என்று முடிவு கட்டிக்கொண்டு தாய்மொழிப் பற்ருேடு செயலாற்றத் தொடங்கினல், விஞ்ஞானக் கலைகளைப் பயிற்றுவிக்கும் திறமை, ஆங்கிலத்திலும் தமிழுக்கே அதிகம் இருக்கிறது என்று ஆங்கிலேயர்களே சொல்லும்படியான நிலையில் தமிழ் மொழியை வளர்த்து விடலாம். இதில் நம்பிக்கையில்லாத 'டாக்டர்கள்' கொஞ்ச காலம் இல்லத்தில் தங்கி ஓய்வு பெறட்டும்.

தமிழில் முடியுமா?

ஒரு தலைமுறைக்கு முன்பு, 'அரசியல் நுணுக்கங்களைத் தமிழில் சொல்ல முடியாது' என்று பேசி வந்தனர், அக்காலத்து அரசியல் தலைவர்கள். ஆம்; ஆங்கிலம் படித்தவர்கள்! அதனால், ஆங்கிலச் சொற்களையும் நீளமான ஆங்கில வாசகங்களையும் இடை இடையே புகுத்தி மணிப் பிரவாளத்தில் பேசினர்; எழுதினர். இன்று, அந்த இழி நிலையிலிருந்து தமிழ்மொழி விடுதலை பெற்றுவிட்டது. ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தாமலே அரசியல் கருத்துக்களைத் தமிழிலேயே வெளியிட முடியும் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது!

மணிப்பிரவாளம் வந்ததேன்?

புராணகால ஆரம்பத்திலும், துவைத, அத்வைத, விசிஷ்டாத்வைதத் தத்துவக் கருத்துக்களை வடமொழியில் தான் சொல்ல முடியும், அவற்றைச் சொல்லக்கூடிய தத்துவக் கலைச்சொற்கள் தமிழிலே இல்லை என்ற எண்ணம் சமயாசாரியர்களிடையேயும் நிலவி வந்தது. ஸ்ரீபெரும்புதூரில் பிறந்த இராமானுஜாச்சாரியார், தாம் தமிழராயிருந்தும் தமிழில் ஒரு நூல்கூட எழுதியதாகத் தெரியவில்லை. அப்படி எழுதாமைக்குக் காரணம், தமிழ் மொழியின்பால் பற்றின்மை அன்று; தாம் போதிக்க விரும்பிய தத்துவ

நுட்பங்களை விளக்கும் கலைச் சொற்கள் தமிழில் இல்லை என்ற எண்ணமேயாம். இந்த எண்ணத்திலிருந்து பிறந்ததுதான் மணிப்பிரவாள மொழி!

காலம் போகப் போகத் தத்துவக் கலைச் சொற்கள் தமிழில் ஏராளமாகத் தோற்றுவிக்கப் பட்டுவிட்டன. தர்மம்—அர்த்தம்—காமம்-மோட்சம் என்ற திசைச் சொற்கள் நான்குக்கும், அறம்-பொருள்-இன்பம்-வீடு என்ற நான்கு தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப்பட்டன. ஆம்; தமிழில் தோன்றிய தத்துவ நூற்களில், கலைச் சொற்கள், அரலும் உண்டு; நகலும் உண்டு. இதையெல்லாம் அறியாதவர்களே, அறிந்துகொள்ள முயலாதவர்களே, 'தமிழில் முடியாது' என்று முடிவு கட்டிக் கொண்டுவிட்டனர்.

உயர் ஆரியத்திற்கு நிகர்

தமிழ்மொழியின் வரலாற்றை ஆழ்ந்து ஆராய்ந்தால், ஓர் உண்மை நன்கு புலனாகும். அதாவது, 18-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இந்த மல்லன்மா ஞாலம் என்னென்ன புதுமைகளைக் கண்டதோ, அவையெல்லாம் தமிழிலும் இருக்கக் காணலாம். மெய்ஞ்ஞானத் துறையில் வடமொழியுடன் போட்டியிட்டு, அதற்கு இணையாக நிற்கின்ற ஆற்றல் இந்திய மொழிகளிலேயே தமிழ்மொழி ஒன்றிற்குத்தான் இருந்தது; அதனாற்றான், "உயர் ஆரியத்திற்கு நிகர்" என்றார், வடமொழியோடு தமிழைச் சம நிலையில் வைத்துப் பாடிய பாரதியார். மெய்ஞ்ஞானத் துறையில் காட்டிய அந்த ஆற்றலை விஞ்ஞானத் துறையிலும் காட்டும் திறம் தமிழுக்கு உண்டு. ஆங்கிலம் கற்ற 'மேதைகள்' இந்த உண்மையை அறிய வேண்டும்!

இதுவரை, ஆங்கிலம் உலகப் பொதுமொழி என்ற கூற்று சிறிதளவே உண்மை கலந்த பெரும் பொய் என்

பதும், உலகில் ஒவ்வொரு நாட்டிலும் அதனதன் சொந்த மொழியே பயிற்சி மொழியாக இருந்து வருகின்றது என்பதும், அதுபோலத் தமிழகத்திலும் தமிழைப் பயிற்சி மொழியாக்க முடியுமென்பதும், அவசரமாகத் தேவைப் படும் பாடப் புத்தகங்களை மட்டும் தமிழில் தயாரித்துக் கொண்டு, அதற்குமேல் தேவைப்படும் தகவல்(ரெபரன்ஸ்) புத்தகங்களுக்கு ஆங்கில மொழியில் உள்ளவற்றையே பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதும், கலைச் சொற்கள் விஷயத்திலும் தற்காலிகமாக ஆங்கிலச் சொற்களையே தமிழ் இலக்கணவழித் திருத்திப் பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை என்பதும் நன்கு விளக்கப் பட்டன.

பரங்கி மொழிப் பக்தர்களால் மறுக்க முடியாத இந்த உண்மைகள், கலைக் கல்லூரிகளில் மட்டுமின்றித் தொழி லியல் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்சி மொழியாக்குவது சாத்திய மென்பதையும் தெளிவுபடுத்துகின்றன.

உறுதியற்றவர்கள்

"நீங்கள் கூறுவதெல்லாம் உண்மை எனக் கொண்டு தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்பதாயினும், அதனைப் படிப் படியாகவே செய்ய வேண்டும்; அவசரப்பட்டுப் போதிய தயாரிப்பின்றி ஆங்கிலத்தை அகற்றிவிடக் கூடாது. அது அபாயம்" என்று கூறி, ஆரம்பத்தில் அறிவு வாதம் பேசியவர்கள் இப்போது பிதற்றுவாதம் பேசுவோராக மாறுகின்றனர்.

ஆம்; 'ஆங்கிலந்தான் உலக மொழி-விஞ்ஞான மொழி; தமிழ் மொழிக்கு அந்தத் தகுதியில்லை' என்ற அவர்கள் கொள்கையில் அவர்களுக்கே உறுதி கிடையாது. அடித்துப் பேசினல், ஆங்கிலத்தையும் காட்டிக் கொடுத்து விடு வார்கள்!

தமிழைப் பயிற்சிமொழியாக்கும் பிரச்னே பரங்கி மொழி பக்தர்களின் தயவுக்கு உட்பட்டதல்ல. அது தமிழ் மொழியின் பிறப்புரிமை. தமிழ்மக்களின் வாழ்க்கை லட்சியம். ஆகவே, தமிழைப் பயிற்சிமொழியாக்கும் விஷயத்தில் படிப்படியாக முன்னேறுவோம் என்ற கூற்றில் சிறிதளவும் நியாயமில்லை. ஆங்கிலேயர்கூட 'சுதந்திரம் கொடுப்பதென்ற முடிவுக்கு நாங்கள் வந்துவிட்டோம். ஆனால், முழுச் சுதந்திரத்திற்கு நீங்கள் தகுதியாகும் வரை சுதந்திரத்தைப் பல கூறிட்டுக் கொஞ்சங் கொஞ்சமாக வழங்குகிறோம்' என்று கூறினார்கள். பரங்கியர் கூறிய அதனையே பரங்கி மொழிப் பக்தர்களும் கூறுகிறார்கள்.

அன்றும் பயமுறுத்தினார்கள்

விடுதலைப் போராட்ட காலத்தில்கூட, 'வெள்ளையன் ஒரே நாளில் வெளியேறிவிட்டால், இந்தியா அராஜகத்தில் மூழ்கி அழிந்துவிடும்' என்று பயமுறுத்தினார்கள் ராஜ விசுவாசிகள். ஏன்? "ஆங்கிலேயனை வெளியேற்றுவது சுலபம். ஆங்கிலேயர் இல்லாத இந்தியாவை ஆளுவது கஷ்டம். அதற்கான தகுதி நமக்கில்லை" என்று கூடக் கூறினார்கள் பரங்கி ஆட்சியின் பக்தர்கள். ஆங்கிலேயர் வெளியேறிய பிறகு, அப்படி எல்லாம் ஒன்றும் நடந்துவிடவில்லை என்பதை அனுபவத்தில் கண்டுவிட்டோம்.

இந்திய ராஜ்யங்களை மொழிவழியே திருத்தி அமைக்க வேண்டுமென்று கோரியபோதும், "இராஜ்யங்களை மொழி வாரி திருத்தி அமைத்தால் ஒரு ராஜ்யத்திற்கும் இன்னொரு ராஜ்யத்திற்கும் மோதல் ஏற்படும். இனத்திற்கு இனம் பகை வளரும். ஐந்தாண்டுத் திட்டங்கள் குலைந்து அழிந்து விடும்" என்றெல்லாம் பயமுறுத்தினார்கள், 'படித்த மேதைகள்'. பிரதமர் நேரு, ஜனதிபதி ராசன்பாபு போன்ற பெருந் தலைவர்கள்கூட இப்படித்தான் நம்மை அச்சுறுத்தினார்கள்.

அபசகுனங்கள் !

இராஜ்யங்கள் மொழிவழித் திருத்தி அமைக்கப்பட்ட பிறகு படித்த மேதைகள் பயமுறுத்தியபடி எதுவும் நடக்கக் காணோம். மொழிவாரி அமைந்த மாநிலம் ஒவ்வொன்றும் அதனதன் விருப்பப்படி முன்னேறிவருகின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு, இப்போது மூன்றாவது திட்டமும் முளைத்துக் கொண்டிருக்கிறது. இப்போதும், "ஆங்கிலம் பயிற்சி மொழியாக இல்லாவிட்டால், அறிவு மங்கிவிடும், விஞ்ஞானக்கலை அழிந்துவிடும், படிப்பு பாழாகிவிடும்," என்றெல்லாம் பரங்கி மொழிப் பக்தர்கள் பயமுறுத்துகின்றனர். இந்த அபசகுனங்களைப் புறக்கணித்து, தமிழைப் பயிற்சி மொழியாக்கி விட்டால், எல்லாம் சரியாகத்தான் நடக்கும்.

எனது கொள்கை, எனது தலைமையிலுள்ள தமிழரசுக் கழகத்தின் லட்சியம், " உடனடியாக தமிழகத்திலுள்ள எல்லாக் கல்லூரிகளிலுமே — எல்லா வகுப்புகளிலுமே தமிழைப் பயிற்சி மொழியாக்க வேண்டும்" என்பதுதான். அது சாத்தியம் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு.

ஆனால், இப்போது நாட்டின் முன்புள்ள முக்கிய பிரச்னை, பயிற்சி மொழி விஷயத்தில் எனது கருத்து என்ன? அல்லது தமிழரசுக் கழகத்தின் குறிக்கோள் எது? -என்பதல்ல. "மாநில அரசின் திட்டம் என்ன?" என்பதே யாகும். மாநில அரசினரின் திட்டம் - குறிப்பாக, கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் குறிக்கோள். "பயிற்சி மொழி விஷயத்தில், படிப்படியாக முன்னேற வேண்டும். அவசரப்பட்டு ஆங்கிலத்தை ஒரேயடியாகப் பயிற்சிமொழிப் பீடத்திலிருந்து அகற்றிவிடக் கூடாது" என்பதுதான்.

இது, தமிழரசுக் கழகத்திற்குத் திருப்தியளிப்பதல்ல என்றாலும், தவிர்க்க முடியாத வகையில் கல்வி அமைச்சரின் திட்டத்தைக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. தமிழைப் பயிற்சி மொழியாக்குவதைக் கொள்கை ரீதியாகப் பரங்கி மொழிப் பக்தர்கள் ஏற்றுக் கொள்வார்களானால், அதனைப் படிப்படியாகத்தான் அமுல் நடத்த வேண்டும் என்பதில் தங்களுக்கும் கல்வி அமைச்சருக்கும் இடையே கருத்து வேற்றுமை இல்லை என்பதை உணர்ந்து கொள்வார்கள்.

படிப்படியாக......

தமிழகத்திலுள்ள கலைக் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 60க்கு மேலிருக்கும். அந்த அறுபது கல்லூரிகளிலுமே அரசாங்கம் தமிழைப் பயிற்சி மொழியாக்கியதா ?—இல்லை. அறுபது கல்லூரிகளை, 'அரசினர் துறைக் கல்லூரிகள்' என்றும், 'தனியார் துறைக் கல்லூரிகள்' என்றும் பிரிவினை செய்து, அரசினர் துறைக் கல்லூரிகளில் மட்டுமே தமிழைப் பயிற்சி மொழியாக்கப் பொறுப் பேற்றுள்ளார் கல்வி அமைச்சர். தனியார் துறைக் கல்லூரிகளில், அவற்றின் நிர்வாகிகள் விரும்பினால் தமிழைப் பயிற்சி மொழியாக்கலாம்; விரும்பாவிடில், ஆங்கிலத்தையே நீடித்து வைத்திருக்கலாம் என்றும் கல்வி அமைச்சர் கூறி விட்டார். இதன் மூலம் கல்லூரிகளின் சுதந்திரம் கௌரவிக்கப்பட்டிருக்கிறது.

அரசினரின் நேர் நிர்வாகத்திலுள்ள கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை எட்டு. அவை,

மாநிலக் கல்லூரி
கலைக் கல்லூரி
மேரி அரசியார் கல்லூரி
சேலம் கல்லூரி

கோவை அரசினர் கல்லூரி

உதகை அரசினர் கல்லூரி

குடந்தை அரசினர் கல்லூரி

புதுக்கோட்டை அரசர் கல்லூரி

—இந்த எட்டுக் கல்லூரிகளிலுமே 1960-ஆம் ஆண்டிலே தமிழைப் பயிற்சி மொழியாக்கியிருக்க முடியும். ஆனால், அப்படிச் செய்யுமுன் அரசாங்கம் சில தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கிறது. அரசினர் கல்லூரிகள் பலவற்றில், தமிழறியாதார்-தமிழரல்லாதார் பிரின்சிபால்களாக இருக்கின்றனர். சான்றாக, மாநிலக் கல்லூரியின் முதல்வர் தமிழறியாத மலையாளியாவார். அவர் போன்றவர்களுக்குப் பதவி மாற்றம் கொடுத்து அவர்களின் நிர்வாகத்திலுள்ள கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்சி மொழியாக்கிவிட முடியும். ஆனால், அதைச் செய்யவும் அரசினருக்கு அவகாசம் தேவைப்படுகின்றதாம்!

பொறுக்கவில்லையோ?

இவ்வாறு உள்ள சில தடைகள் காரணமாக அரசினரின் நேர் நிர்வாகத்திலுள்ள எட்டுக் கல்லூரிகளில்கூட ஒரே மூச்சில் தமிழைப் பயிற்சிமொழியாக்க முடியவில்லை. ஆதலால், கோவைக் கல்லூரி ஒன்றில் மட்டுமே தமிழைப் பயிற்சி மொழியாக்கியுள்ளது அரசாங்கம். அங்கும் பி. ஏ. வகுப்பில் மட்டும்தான்! சுருங்கச் சொன்னால், நம் தாய் மொழியான தமிழுக்கு ஏற்பட்டுள்ள புதுவாழ்வு, கோவை அரசினர் கல்லூரி ஒன்றில்-பி. ஏ. வகுப்பில் தமிழைப் பயிற்சி மொழியாக வைத்ததுதான். அங்கும் பாடமொழி என்ற அளவில் ஆங்கிலத்திற்கும் ஆசனம் தரப்பட்டிருக்கிறது. அதன் தரத்தை அதிகரிக்கவும் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இப்படி, அற்ப 'வாழ்வு'

தமிழுக்குக் கிடைத்துவிட்டதா. டப் பரங்கிமொழிப் பக்தர்களுக்குப் பொறுக்கவில்லை.

கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் மற்றொரு சாகசம் புரிந்துள்ளார், பரங்கிமொழிப் பக்தர்களைச் சாந்தப்படுத்த! 1959-ம் ஆண்டுவரை ஆரம்பப் பள்ளிகளில் ஆங்கில மொழி போதனை இல்லை. உயர்நிலைப் பள்ளிகளில் முதல் படிவத்திலிருந்து பரங்கி மொழிப் பயிற்சி தொடங்கப்பட்டது. ஆனல், 1960 முதல் மாநிலத்திலுள்ள எல்லா ஆரம்பப் பள்ளிகளிலுமே ஐந்தாவது வகுப்பில் ஆங்கிலப் பயிற்சி தொடங்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சர் ஆணையிட்டுள்ளார். கல்வி அமைச்சரின் 'சாகசம்' அதோடு நிற்குமென்று எதிர் பார்த்தேன். ஆனல், அவர் பரங்கி மொழி வழங்கும் நாடுகளுக்குச் சென்று திரும்பிய பிறகு, ஆரம்பப் பள்ளிகளில் நான்காம் வகுப்பிலிருந்தே பரங்கி மொழிப் பயிற்சியைத் துவக்கிவிடவும் திட்டமிட்டுள்ளார். கல்வி இலாகா அதிகாரி திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் "ஆரம்பப் பள்ளியில் முதல் வகுப்பு தொடங்கியே ஆங்கிலப் பயிற்சி தருவதும் அவசியம்" என்று ஒரு கூட்டத்தில் பேசியுள்ளார்.

'பாவ'ப் பிராயச்சித்தமா?

ஆம்; தாய் மொழிக்கு வாழ்வளிப்பதாக வாயளவில் சொல்லிக்கொண்டு, பரங்கி மொழியின் ஆதிக்கக் களம் விரிவாக்கப்படுகிறது. ஒரே ஒரு கல்லூரியில்-பி. ஏ. வகுப்பு ஒன்றில் மட்டுமே தமிழைப் பயிற்சி மொழியாக்கிவிட்டு, அந்தப் "பாவம்" தொலைவதற்காகப் பதினாயிரக் கணக்கான ஆரம்பப் பள்ளிகளில் பரங்கி மொழி திணிக்கப்பட்டு விட்டது !

கல்வி அமைச்சர் இவ்வளவு தூரம் பரங்கி மொழி பக்தர்களுக்கு வளைந்து கொடுத்தும், பரங்கிக்காரியின் வாழ்

மையைப் பெரிது படுத்தியும் "படித்த மேதைகள்" திருப்தி அடைவதாக இல்லை.

"பயிற்சி மொழிப் பிரச்னை, பல்கலைக் கழகத்தின் சுதந்திரத்திற்கு உட்பட்ட விஷயம். அதில் அரசினர் தலையிடுவது கல்வித்துறையில் பல்கலைக் கழகங்களுக்குள்ள சுதந்திரத்தைப் பறிப்பதாகும்" என்று சொல்லப்படுகிறது. பல்கலைக் கழகங்களின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வாதத்திற்காக ஒப்புக்கொள்வோம். அந்தச் சுதந்திரம் சாதாரண மக்களுடைய முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாகப் பயன் படுத்தப்பெற்றால், அதைத் தகர்த்தாக வேண்டுமல்லவா? சென்னைப் பல்கலைக் கழகம் தனக்குள்ள சுதந்திரத்தை மக்கள் முன்னேற்றத்திற்குப் பயன் படுத்துகின்றதா? இல்லையே!

வடக்கு வழிகாட்டுகிறது!

வட இந்தியாவிலுள்ள பல்கலைக் கழகங்கள் எல்லாம் அதனதன் நிர்வாகத்துக்குட்பட்ட பிரதேசத்தின் மொழிக்கு வாழ்வளிப்பதில் அக்கரை காட்டி வருகின்றன. இதோ பட்டியல்:

பல்கலைக்கழகம்	பாடமொழி	வகுப்பு
ஆக்ரா பல்கலைக் கழகம்	ஆங்கிலம், இந்தி	பி. ஏ., பி. காம்.
அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகம்	உருது	யூனானி மருத்துவம், அறுவை சிகிச்சை.
அலகாபாத் பல்கலைக் கழகம்	ஆங்கிலம், இந்தி	பி.ஏ., பி.எஸ்.சி., பி. காம்.
காசி இந்துப் பல்கலைக் கழகம்	ஆங்கிலம், இந்தி	ஐ.ஏ., ஐ எஸ்.சி., ஐ. காம்., பி. காம்.

பீகார் பல்கலைக் கழகம்	இந்தி ஆங்கிலம்	கீழ்ப்பட்டப் படிப்பு ஏனையவைகள்
லக்னோ பல்கலைக் கழகம்	இந்தி	பி.ஏ., பி.எஸ்.சி., பி. காம்.
நாகபுரி பல்கலைக் கழகம்	இந்தி அல்லது மராத்தி ஆங்கிலம்	உயர் பட்டப் படிப்பு ஏனையவைகள்
உஸ்மானியா பல்கலைக் கழகம்	ஆங்கிலம், இந்துஸ்தானி	எல்லா வகுப்புகளுக்கும்
இராஜபுதான பல்கலைக் கழகம்	ஆங்கிலம், இந்தி	ஐ.ஏ., ஐ. காம்., பி.ஏ., பி. காம்.
சாகர் பல்கலைக் கழகம்	ஆங்கிலம் இந்தி	பி. வி. எஸ். ஸி., எம்.ஏ.பி.இ.(ஆனர்ஸ்)
எஸ்.என்.டி.டி. பெண்கள் பல்கலைக் கழகம்	சமீப காலத்திய இந்திய மொழி	எல்லாவற்றிற்கும்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்	ஆங்கிலம்	எல்லாவற்றிற்கும்
சென்னைப் பல்கலைக் கழகம்	ஆங்கிலம்	எல்லாவற்றிற்கும்

இந்தப் பட்டியலைப் பார்த்தால், வடஇந்தியாவிலுள்ள ஒவ்வொரு பல்கலைக் கழகமும் பிரதேச மொழியைப் பயிற்சி மொழியாக்குவதில் திட்டமிட்டு முன்னேறி வருவது தெரியவரும்.

துரோகம்! துரோகம்! துரோகம்!

'இந்தியா ஒரே நாடு' என்பதை, அந்த நாட்டைத் துண்டாடவே கூடாது என்ற உணர்ச்சியைச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரும் ஏற்றுக் கொள்கின்றார்; எதிர்க்கவில்லை! அப்படி இருந்தும், வடக்கிலுள்ள பல்கலைக் கழகங்களில் பரங்கி மொழியின் வாழ்வு தேய் பிறையாகிக்.

கொண்டிருக்கும் போது, சென்னைப் பல்கலைக் கழகத்தில் மட்டும் பரங்கி மொழி பௌர்ணமிச் சந்திரன்போல இருந்து வரக் காரணம் என்ன? இந்த அவல நிலை-அவமான நிலை-தாய் மொழித் துரோகப் போக்கு நீடிப்பதற்குத்தான் பல்கலைக் கழகச் சுதந்தரம் பாதுகாக்கப்பட வேண்டுமோ?

சென்னைப் பல்கலைக் கழக செனட்சபை, "விருப்பமுடைய கல்லூரிகள் தமிழைப் பயிற்சி மொழியாக்கலாம்" என்று 1926ல் தீர்மானித்தது. 1939லும் அதை உறுதிப்படுத்தி மற்றொரு தீர்மானம் செனட் சபையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அதை அமுல் நடத்துவதற்கான வாய்ப்புகளை, வசதிகளைக் கல்லூரிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கச் சென்னைப் பல்கலைக் கழகம் எந்தவிதமான ஏற்பாடும் செய்யவில்லை.

குறிப்பாக, கலையியல் - தொழிலியல் பாடங்களைத் தமிழில் பயிற்றுவிப்பதற்கான திறமையுடைய பேராசிரியர்களைத் தயாரிக்கவோ, பாடப்புத்தகங்களை வெளியிடவோ சென்னைப் பல்கலைக் கழகம் முன்வரவில்லை. தானே நிறைவேற்றிய ஒரு தீர்மானம் நடைமுறைக்கு வராதபடி பார்த்துக்கொள்ளும் சதியிலும் அது உள்ளூர ஈடுபட்டது. இதுதான் பல்கலைக் கழகச் சுதந்திரமா?

1938 ம் ஆண்டிலேயே...

1938-ல் அப்போதைய சென்னை ராஜ்யத்திலிருந்த உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் போதனு மொழியாக இருந்த ஆங்கிலத்தை அகற்றி, எல்லாப் பாடங்களும் தாய் மொழியிலேயே போதிக்கப்பட வேண்டும் என்ற திட்டம் அமுல் நடத்தப்பட்டது. அப்போது கல்வி இலாகா அதிகாரியாக இருந்த ஆங்கிலேயர், "உயர்தரக் கல்வி தாய்மொழியில் அளிப்பதற்கான முதற்படி இது..

அடுத்தபடியில் கல்லூரிகளிலும் பாடங்கள் தாய்மொழியிலே போதிக்க ஏற்பாடாகும்'' என்று அதிகாரபூர்வமாக அறிக்கை விடுத்தார். அதற்குப் பிறகேனும் சென்னைப் பல்கலைக் கழகம் தனது கடமையை உணர்ந்து அரசினர் ஏற்படுத்திய மாறுதலுக்கேற்ப தமிழைக் கல்லூரிகளிலும் பயிற்சி மொழியாக்குவதற்கு முன்வந்திருக்க வேண்டும். அப்படியும் செய்யவில்லை. இதுதான் பல்கலைக் கழக சுதந்திரத்தைப் பயன்படுத்தும் லட்சணமா ?

பாரதம் சுதந்திரம் பெற்ற பிறகு-1948-ல், பல்கலைக் கழகக் கல்வி முறையில் சீர்திருத்தம் காண்பதற்குத் திட்டம் தயாரிக்க டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் தலைமையில் மத்திய அரசாங்கம் நியமித்த கமிஷனில் தற்போது சென்னை பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக உள்ள டாக்டர் லட்சுமணசுவாமி முதலியாரும் அங்கம் வகித்தார். அந்தக் கமிஷன் 1949-ல் தனது அறிக்கையை வெளியிட்டது. அதில் கல்லூரிப் பாடங்கள் பிரதேச மொழியில் போதிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டது. எதிர்ப்புக்கிடையே அல்ல, ஏகமனதாக! தான் அங்கம் வகித்த ஒரு குழுவின் ஏகமனதான அபிப்பிராயத்திற்கு இணங்கவேனும் தமிழகத்தில் தமிழைப் பயிற்சி மொழியாக்கும் பணியில் சென்னைப் பல்கலைக் கழகத்தை ஈடுபடுத்தியிருக்க வேண்டும் அதன் துணைவேந்தரான டாக்டர் ஏ. எல். முதலியார். ஆனால், அந்தத் தர்மத்தையும் அவர் கடைப்பிடிக்கவில்லை! கடைப்பிடிக்காததோடு, 'என்றென்றும் ஆங்கிலமே பயிற்சி மொழியாக இருந்துவர வேண்டும்' என்றும் பிரச்சாரம் செய்துவந்தார். இதற்குத்தான், 'சென்னைப் பல்கலைக் கழகச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்' என்கிறார் போலும்!

'பல்கலைக் கழகச் சுதந்தரம்' என்பதற்கு சென்னைப் பல்கலைக் கழகம் கொண்டுள்ள பொருள், அகராதிக்கு மாறுபட்டது போலும்!

துணைவேந்தர்களின் போக்கில்...

சென்னைப் பல்கலைக் கழகத்தின் பரங்கி மொழிப் பக்தியை நன்கு புரிந்துகொண்ட கல்வி அமைச்சர் தமிழின் பால் தமக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தினால் துணை வேந்தர் பெருமானின் சித்தமும் திருந்தக் கூடுமென்று நம்பினார். அதன்படி மூன்று ஆண்டுகட்கு முன் சென்னை செனேட் மண்டபத்தில் கல்வித்துறை பிரமுகர்களின் மாநாடு ஒன்றைக் கூட்டினார். அதில், சென்னை—அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களும் கலந்து கொண்டனர். தமிழைப் பயிற்சி மொழி யாக்குவது பற்றிச் சுமார் 8 மணி நேரம் விவாதம் நடைபெற்றது. இறுதியில், தமிழைப் பயிற்சி மொழியாக்க வேண்டியதன் அவசியம் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டது. ஆம்; இரு துணைவேந்தர்களின் ஆதரவோடு!

அந்த மாநாட்டின் இறுதியில், தமிழுக்கு வாழ்வளிக்க இசைந்ததற்காகத் துணைவேந்தர் பெருமான்களுக்குத் தமது மனமார்ந்த பாராட்டையும் வழங்கினார் கல்வி அமைச்சர். அந்த மாநாட்டில் பங்குகொண்டவர்களுள் நானும் ஒருவன். அந்த மாநாட்டிற்குப் பிறகு, விஞ்ஞானப் பாடப் புத்தகங்களைத் தமிழில் தயாரிக்கும் பணிக்கென டாக்டர் ஏ. எல். முதலியார் தலைமையில் கலைச் சொல்லாக்கக் குழு ஒன்றையும் நியமித்தார் கல்வி அமைச்சர். பயிற்சி மொழி பற்றிய விவாதப் போர் அதோடு முடிந்ததாக எல்லோரும் எண்ணினர்.

ஆனால், நடந்ததென்ன?

மீண்டும் வேதாளம் ...

"வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது" என்ற பழமொழிபோல, சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பயிற்சி மொழிப் பீடத்திலிருந்து ஆங்கில மொழியை அணுவளவும் அகற்றக்கூடாது என்று சென்னை மேல் சபையில் பேசினார். அந்தப் பேச்சைக் கேட்டுத் துணைவேந்தரின் போக்கில் அதிருப்தி கொண்ட கல்வி அமைச்சர், நமது போக்கில் செயல்படத் துணிந்தார். அப்போதும் ஜனநாயக முறைப்படி செய்யவேண்டும் என்ற பண்புடன் "தமிழ் வளர்ச்சி, ஆராய்ச்சிக் குழு" ஒன்று அமைத்தார். அதில், பல கட்சிகளின் தலைவர்கள் அண்ணமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், அரசாங்க இலாக்காக்கள் சிலவற்றின் தலைவர்கள், கல்வித்துறை நிபுணர்கள் ஆகியோர் இடம் பெற்றனர். தமிழரசுக் கழகத் தலைவன் என்ற முறையில் யானும் சேர்த்துக் கொள்ளப்பட்டேன்.

இந்தக் குழுவின் முதல் கூட்டத்தில் "1960-ம் ஆண்டில் கோவை அரசினர் கல்லூரியில் பி. ஏ. பாடத்திற்கு மட்டும் தமிழைப் பயிற்சி மொழியாக்க வேண்டும்" என்று தீர்மானிக்கப்பட்டது.

1963-ல் மாநிலத்திலுள்ள எல்லா கலைக் கல்லூரி களிலுமே தமிழைப் பயிற்சி மொழியாக்க இக்கூட்டம் ஏகமனதாக ஒப்புக்கொண்டது.

இந்த முடிவுக்குச் சென்னை, அண்ணமலைப் பல்கலைக் கழகங்களுடைய துணைவேந்தர்களின் எழுத்து மூல மான அங்கீகாரத்தையும் பெற்றார், நமது திறமை மிக்க கல்வி அமைச்சர்! சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் மொழி எதிர்ப்பு அதோடு முடிந்ததாக நம்பினேம்.

நாட்டை நம்பியது! ஆனால், வேதாளம் திரும்பவும் முருங்கை மரம் ஏறிக்கொண்டது.

தொடர் நாடகம்!

'தமிழைப் பயிற்சி மொழியாக்க வேண்டும்' என்பதை னைக் கொள்கையளவில் ஏற்பதும், நடைமுறையில் அதனைச் செயல் படுத்த மறுப்பதுமாகச் சென்னைப் பல்கலைக் கழகம் நடத்திவரும் 'தாய்மொழி எதிர்ப்பு' நாடகத்தின் பல காட்சிகளை ஏற்கனவே கண்டோம். 1926-முதல் 1960-வரையுள்ள 35 ஆண்டுகளாக இந்தத் தொடர் நாடகத்தை மிகத் திறம்பட நடத்தி வருகின்றது சென்னைப் பல்கலைக் கழகம். இந்த அவல நாடகத்தில், 'தமிழ்ப் பல்கலைக் கழகம்' என்று சொல்லப்படுகின்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் குறைவறப் பங்குகொண்டு வருகின்றது.

இதே காலத்தில் வடக்கேயுள்ள பல்கலைக் கழகங்கள் பிரதேச மொழியைப் பயிற்சி மொழியாக்க முனைந்து அத்துறையில் வெகு தூரம் முன்னேறி விட்டதையும் பட்டியல் தொகுத்துக் காட்டினேன். வட இந்தியப் பல்கலைக் கழகங்கள் 1941-ம் ஆண்டு முதற்கொண்டே-பரங்கியர் பாரதத்தை ஆண்ட காலத்திலேயே-பரங்கி மொழிக்குப் பதில் பிரதேச மொழியைப் பயிற்சி மொழியாக்கத் துணிந்தன என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்திய மொழிகளிலேயே மிகப் புராதனமான-வளமான, மொழி, தமிழ் மொழிதான். அப்படியிருந்தும் மராத்தி குஜராத்தி, இந்தி, உருது ஆகிய மொழிகளெல்லாம் பயிற்சி மொழியாக்கப் படுகின்றன. பண்டைப் பசுந்தமிழ் இதுவரை பயிற்சி மொழியாக்கப் படவில்லை. பரங்கி மொழிக்கு முழு அளவில் அடிமைப்பட்டுக் கிடக்கிறது.

புரியாத புதிர் !

மொழித் துறையில் தமிழகத்தின் போக்கு உலகினா புரிந்துகொள்ள முடியாத ஒரு புதிர் ! இங்கு தாய் மொழியைப் புறக்கணித்துப் பரங்கி மொழியில் மட்டுமே புலமை பெறுவதற்குப் பெயர், **பரந்த புத்தி** ! பரங்கி மொழிப் பயில்வதற்குத் தடையில்லாத வகையில் தாய் மொழி மூலம் கல்வி கற்கவேண்டும் என்று கூறுவதுகூட, **குறுகிய புத்தி— மொழி வெறி** ! இவை மட்டுமா ? பிரதேச மொழிக்கு எதிராக ஆங்கிலத்தின் ஆதிக்கத்தை வளர்க்கும் பல்கலைக் கழகங்களும் தமிழகத்தில்தான் இருக்கின்றன ! தாய் மொழியில் சிறிதேனும் ஞானமில்லாத ஒரு பாமரர் பல்கலை கழகத்தின் துணைவேந்தராக இருப்பதும் இந்தத் தமிழ் நாட்டில்தான் ! இது, உலகங் காணாத புதுமை! பு...ர்...ர...ட்.....சி.

பரங்கி மொழி பயின்று அதிலே பட்டம் பெற்றவர்கள் உயர் சாதியினராக மதிக்கப்படுவதும் இந்த மாநிலத்தில்தான்! கலவியறிவுடைய இருவர் சந்திக்குங்கால், தாய் மொழியை மறந்து பரங்கி மொழியில் உரையாடும் மாபாதகமும் இந்தத் மாநிலத்தில்தான் நடைபெறக் காண்கிறோம்.

நான்காம் படிவத்தோடு பள்ளிப் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்த பிள்ளைகூட, தான் ஆங்கிலப் புலமை பெற்று விட்டாற் போல நடிக்கும் நாடக மேடையாக விளங்குவதும் தமிழ் நாடுதான்! இந்தக் குறைபாடுகளுக்குப் பல்கலைக் கழகங்களையோ, துணைவேந்தர்களையோ மட்டும் பொறுப்பாக்கி விடுவதற்கில்லை. பரங்கி மொழி மோகம், தமிழ் இனத்தவர் அனைவரையுமே பிடித்துள்ள பொது 'வியாதி'யாகி விட்டது. தமிழகத்து அரசியல் கட்சிகளும் இந்த வியாதிக்கு விலக்கல்ல.

தி. மு. க.வின் பரங்கிமொழி மோகம்!

தி. மு. கழகம், தமிழரிடையே மட்டும் நடமாடும் ஒரு மாநிலக்கட்சி. ஆகவே, மற்ற அகில இந்தியக் கட்சிகளின் தமிழ்நாட்டுக் கிளைகளைவிட, தி. மு. கழகம்தான் தமிழைப் பயிற்சி மொழியாக்குவதில் அதிக ஆர்வம் காட்ட வேண்டியது நியாயம். ஆனால், நிலைமை இதற்கு நேர்மாறானது. தி. மு. கழகம், பயிற்சி மொழிச் சிக்கலில் தமிழுக்கு ஆதரவளிக்கவில்லை. பரங்கி மொழியின் ஆதிக்கத்திற்கே பல்லாண்டு பாடுகின்றது. இதனை தி. மு. கழகத்தைச் சார்ந்த சாதாரணத் தொண்டர்கள் நம்ப மாட்டார்கள். அவர்கள், தங்கள் தலைவர்களைத் தமிழ் மொழியின் காவலர்களாக எண்ணியிருக்கிறார்கள்.

ஆம்; 'இந்தி ஒழிக' என்று குரல் கொடுக்கும் ஒரு சாதாரண தி. மு. க. தொண்டர், தன் தாய் மொழியான தமிழ் மொழிக்கு ஆதரவளிக்கும் கோஷமாகவே அதனை நம்புகின்றார். ஆனால், தி. மு. க. தலைவர்கள் நிலை அதுவன்று. தமிழுக்கும் எதிராக ஆங்கிலத்திற்கு இன்றுள்ள ஆதிக்கத்தைக் காப்பதற்காகவே அவர்கள் இந்தி எதிர்ப்பு நடத்துகின்றனர். தமிழ் மொழியை வளர்க்க அல்ல.

தமிழின் ஆற்றலிலும் ஐயம்!

'மன்றம்' என்ற மாத வெளியீடு, நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவருவதாகும். அதன், 15-5-56 இதழில் எழுதப்பட்டுள்ள தலையங்கப் பகுதி வருமாறு:

> "ஆரம்பக் கல்விக் கட்டத்தில் தாய்மொழியை அல்லது தாய்மொழியோடு வட்டார மொழியைக் கட்டாயக் கல்வியாக்க வேண்டும்; செகண்டரி கல்விக் கட்டத்திலும் பல்கலைக் கழகக் கட்டத்திலும் வட்டார மொழியோடு ஆங்கில மொழியையும் கட்டாயமாகக் கற்பிக்கவேண்டும்; செகண்டரிக் கட்டத்தில் பாடங்களை எல்லாம் வட்டார மொழியிலேயே கற்பிக்க வேண்டும்"

என்கிறார், தி. மு. க.வின் செயலாளர் இரா.நெடுஞ்செழியன். இந்த அளவில் அவரது கொள்கை தமிழுக்கு எதிரானதல்ல. ஆனால், மேலே படியுங்கள்:

> "பல்கலைக் கழகக் கட்டத்தில் (வட்டார மொழி பக்குவம் அடையும் காலம்வரையில்) ஆங்கிலமே பயிற்சி மொழியாக இருக்க வேண்டும்."

என்கிறார். ஆம்; தமிழ் மொழியின் திறமையில்-அம்மொழியில் எம். ஏ. பட்டம் பெற்ற நாவலருக்கே ஐயப்பாடு! அதனால், 'பயிற்சி மொழியாகும் தகுதி தமிழுக்கு ஏற்படும் வரை ஆங்கிலமே பாட மொழியாக இருக்க வேண்டும்' என்கிறார். 'இடைக் காலத்தில் ஆங்கிலமே' என்பதால், ஆங்கிலத்தோடு சேர்ந்து வாழ்வு பெறக்கூட தமிழ் மொழிக்கு உரிமையில்லை என்பது உறுதியாகிறது. பயிற்சி மொழியாகச் செய்தால்தானே தமிழின் திறமை வெளிப்படும்! பிள்ளையை இடுப்பிலிருந்து இறக்காத வரை, அது நடைபயில்வது எங்ஙனம்!

சில கட்டங்களில்...

நாவலர் நெடுஞ்செழியன் பரங்கி மொழியின் ஆதிக்கத்திற்கு ஆதரவளிக்கக் காரணம், அவருடைய கழகத்தின் கொள்கையும் அதுவாக இருப்பதுதான். இதோ சான்று:

> "கல்வி, பல கட்டங்களிலும் தாய் மொழியிலேயே அளிக்கப்படல் வேண்டும்.
>
> "விஞ்ஞான, தொழில் நுணுக்க, தத்துவ, வரலாற்றுப் பொருளாதார அறிவு பெறவும் ஆங்கிலம் இன்றியமையாததொன்று"

இது, தி. மு. கழகம் 1957ல் வெளியிட்ட தேர்தல் பிரகடனத்தில் காணப்படும் வாசகங்களாகும்.

ஆம்; "**கல்வி, எல்லா கட்டங்களிலும்** தாய்மொழியிலேயே போதிக்கப்பட வேண்டும்" என்று தி. மு. க. தேர்தல் பிரகடனம் கூறவில்லை. "**பல கட்டங்களில்**" என்றே குறிப்பிடுகின்றது. இதனால், சில கட்டங்களில் ஆங்கிலமே போதனை மொழியாக இருக்க வேண்டும் என்பது தி. மு. க. வின் கொள்கையாகிறதல்லவா? தெளிவாகச் சொன்னால், ஆரம்பக் கல்வி—செகண்டரிக் கல்வி ஆகிய இரண்டு கட்டங்களிலும் பாடங்கள் தமிழில் போதிக்கப்பட வேண்டும். அதற்குமேல் உயர்தரக் கலைக் கல்வியும், தொழிற் கல்வியும் ஆங்கிலத்தில் போதிக்கப்பட வேண்டும் என்பதாகும். அதாவது, இப்போதுள்ளதுபோல ஆங்கிலத்தின் ஆதிக்கம்—தமிழின் அடிமைத்தனம் இனியும் நீடிக்க வேண்டும் என்கிறது தி. மு. க. தேர்தல் பிரகடனம்.

திரு. இரா. நெடுஞ்செழியன், 'பயிற்சிமொழி யாவதற்கான தகுதி தமிழுக்கு ஏற்படும்வரை மட்டும் ஆங்கிலமே போதனை மொழியாக இருக்கலாம்' என்கிறார். அவரது

கட்சியின் அதிகார பூர்வமான தேர்தல் பிரகடனம், "என்றென்றும் ஆங்கிலம்" என்று சொல்லாமல் சொல்லுகிறது.

தொண்டர்களே, எச்சரிக்கை!

'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற கோஷித்தவர்களின் வாரிசுகள் நிலையே இதுவானல், அப்புறம் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பெருமானைக் குறைசொல்லி என்ன பயன்? தி. மு. கழகம், இனியேனும் பயிற்சிமொழிச் சிக்கலில் தனது கருத்தைத் திருத்திக்கொள்ள வேண்டும். அது திருந்துவதற்கான நிர்ப்பந்தத்தை அக் கழகத்திலுள்ள இளைஞர்கள், தமிழ் பயிலாத புலவர்கள் ஏற்படுத்த வேண்டும். தலைவர்களின் பரங்கி மொழிப் பக்திக்குத் தொண்டர்கள் துதி பாடுவது, தங்கள் வருங்காலத்தைத் தாங்களே கெடுத்துக் கொள்ளும் தற்கொலை முயற்சியாகும்.

இராஜாஜி எழுதிய கடிதம்

சுதந்திரக் கட்சிக்குப் பயிற்சி மொழிப் பிரச்னையில் திட்டவட்டமான கொள்கை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனல், அதன் ஸ்தாபகரான ராஜாஜியின் கொள்கையை நாம் அறிவோம். நாமறிந்தவரை, தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாக்குவதற்கு ராஜாஜி எதிராக இல்லை.

8-9-58ல் தமிழக ஆட்சி மொழி—பயிற்சிமொழி பற்றி, 'செங்கோல்' ஆசிரியர் என்ற முறையில் எனக்கு ராஜாஜி எழுதிய கடிதம் கீழ்வருமாறு:

'செங்கோல்' ஆசிரியர் அவர்களுக்கு. மிக வணக்கத்துடன் எழுதியதாவது:

7-9-58 தலையங்கத்தைப் படித்தேன். தமிழகத்தில் தமிழும், இந்தியா முழுவதற்கும் ஆங்கிலமும் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும்" என்பதே என்னுடைய அபிப்

பிராயம். இது "ராஜாஜியின் எண்ணமல்ல" என்று தாங்கள் எழுதியிருப்பது தவறு.

அந்தந்தப் பிரதேச மொழிகளில் கல்வியும் சின்னப் படிப்பும் பெரியப் படிப்பும் நடைபெற வேண்டும் என்பதே என்னுடைய கொள்கை. நான் இந்தியைப் பற்றிச் செய்து வரும் எதிர்ப்பும் ஆங்கிலம் மத்திய ஆட்சியின் மொழியாகவும் ராஜ தந்திர மொழியாகவும் இப்போதைப் போலவே நடைபெற்று வரவேண்டும் என்றும் செய்து வரும் இயக்கத்துக்கு நான் மேலே கூறியிருப்பது முரண் இல்லை.

ஒவ்வொரு பிரதேசத்திலும் படிப்பும் அரசியலும் பிரதேச பாஷைகளில் நடைபெற வேண்டிய நிலைமையை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். அதன் விளைவு என்னவென் பதையும் ஆராய வேண்டுமல்லவா? அதன் விளைவு பிரதே சங்களுக்குள் மொழி இணைப்பு இல்லாமல் போகும் என் பதை யாரும் ஒப்புக்கொள்ள வேண்டும். அந்தக் குறைக்கு மருந்து ஆங்கிலம் என்பதையும் இந்தி அல்லவென்பதை யும் வற்புறுத்தி வருகின்றேன். படிப்பிலும் மத்திய ஆட்சி யிலும், ராஜதந்திர போக்கு வரத்துக்களிலும் ஆங்கிலம் இருந்தே வரவேண்டும் என்பதுதான் என் கொள்கை.

படித்தவர்கள்தான் நாடாள வேண்டும் என்ற என் கூற்றைத் தமிழாக்கி யிருக்கிறீர்கள். நாடாள்வது வேறு; நிர்வாகம் வேறு. மந்திரி சபைகளும் சட்டசபைகளும் நாடாள்கின்றன. நிர்வாகத்தை நிரந்தர உத்தியோகஸ் தர்கள் நடத்தி வருகிறார்கள். உத்தியோகஸ்தர்களைப் பற்றித்தான் நான் பேசியது. அவர்களுடைய படிப்பில் ஆங்கிலம் இருந்துதான் தீரவேண்டும். இல்லாவிடில் மற்ற ராஜ்யங்களோடும் மத்திய அரசாங்கத்தோடும் தொடர்பு வைத்துக் கொள்வதில் சிக்கல்கள் ஏற்படும்.

தமிழ் மொழியின் அந்தஸ்துக்கு ஆங்கிலம் எந்த விதமான அபாயமும் உண்டாக்காது. ஹிந்தி மொழிதான் அபாயம்.

சென்னை,
8-9-58

—இராஜகோபாலாச்சாரி

இராஜாஜி சொல்வது சரி; ஆனல்...

இது, 'தினமணி' 1-9-58 இதழில் வெளியான ராஜாஜி சொற்பொழிவு ஒன்றின்மீது 'செங்கோலி'ல் யான் எழுதிய விமர்சனத்திற்குப் பதிலளித்து அவர் எனக்கு எழுதிய கடிதமாகும். மேற்கண்ட கடிதத்திலும் 'படித்தவர்கள்' என்பதற்கு 'ஆங்கிலம் பயின்றவர்கள்' என்று பொருள் கூறுகிறார். இந்தியாவில் தவிர வேறு எந்த நாட்டிலும் இம்மாதிரி கருதும் அறிஞர்களை நாம் காண முடியாது. ராஜாஜியின் 'என்றென்றும் ஆங்கிலம்' என்ற கோஷமானது, தமிழுக்கு எதிராகவும் பயன்படுத்தப் படுகிறது என்பதை நான் இங்கு சொல்லாமல் இருப்பதற்கில்லை.

கோவை 'கலைக்கதிர்' பத்திரிகையின் பயிற்சிமொழி மலருக்கு பெரியார் ஈ. வெ. ரா. எழுதிய கட்டுரையில்,

> 'நுங்கம்பாக்கத்தில் திருவாளர் ஏ. சுப்பையா பிள்ளை அவர்கள் பங்களாவில் இந்தி எதிர்ப்புக் கூட்டம்என்பதாக ஒரு கூட்டம் கூட்டப்பட்ட காலத்தில்...அந்தக் கூட்டத்தில் பேசிய திருவாளர் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தமிழ் நாட்டுக்கு ஆங்கிலமே ஆட்சிமொழியாக இருக்கவேண்டும்என்றும் ஆங்கிலமே போதனு மொழியாக இருக்கவேண்டுமென்றும் பேசினர்'

என்று குறிப்பிட்டுள்ளார். அதே 'மலரில்', கோவை

தொழிலதிஞர் திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் எழுதியுள்ள கட்டுரையில்,

> 'டாக்டர் ஏ. எல். முதலியார், டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர், டாக்டர் சி. ராஜகோபாலாச்சாரி முதலியவர்கள் ஆங்கிலத்தின் அவசியத்தை உணர்ந்து, அதைப் போதனு மொழியிலிருந்து நீக்குவதை விரும்ப வில்லை என்பது வரவேற்கத் தக்கது.'

என்று கூறியுள்ளார். அண்மையில் சென்னைக் கூட்ட மொன்றில் பேசிய வங்காள மேல்சபைத் தலைவரும் ராஜாஜியின் கொள்கையை இதுபோலவே விமர்சனம் செய்துள்ளார்.

பொதுவாக, பரங்கிமொழிப் பக்தர்கள் அத்தனை பேரும், ராஜாஜி தமிழுக்கு எதிராகவும் ஆங்கிலத்தை ஆதரிக்கின்றார் என்றே நம்பி ஊக்கம் பெற்றுள்ளனர். அந்தத் தவறான கருத்தை மக்களிடையிலும் பரப்பி வருகின்றனர். இதனை, ராஜாஜி அவ்வப்போது மறுத்தா ரில்லை. என்றாலும், பயிற்சி மொழிச் சிக்கலில் ராஜாஜீ தமிழுக்கு ஆதரவாக இருக்கிறார் என்பதில் எனக்கு ஐய மில்லை.

பச்சிளங் குழவிக்கும் பரங்கி மொழியா?

தமிழைப் பயிற்சிமொழியாக—ஆட்சி மொழியாக—நீதிமன்றங்களின் நிர்வாக மொழியாகச் செய்து விட்டால் மட்டுமே ஆங்கில மொழியின் ஆதிக்கத்திலிருந்து தமிழகம் விடுதலை பெற்றுவிட முடியாது. கல்வித் துறையின் ஒவ்வொரு கட்டத்திலும் தமிழுக்கு முதலிடம் தந்த பிறகு ஆங்கிலத்திற்குரிய நிலையான இடம் எது என்பதை நிர்ணயித்தாக வேண்டும். ஆம்; ஆரம்பப்பள்ளி தொடங்கி கல்லூரிப் படிப்பு முடியும்வரை ஆங்கிலம் கட்டாய பாடமாக வைக்கப்பட்டுள்ள இன்றைய நிலை இனியும் நீடிக்க முடியாது—நீடிக்கவும் கூடாது.

தவிர்க்க முடியாத தீமை!

தமிழகத்தில் "எங்கும்—எதிலும் தமிழ்" என்ற நிலை ஏற்படுவதற்கு முன்புள்ள ஒரு இடைக் காலத்தில் உயர் நிலைப் பள்ளிகளில் முதற்படிவம் தொடங்கி, கல்லூரிப் படிப்பின் இறுதிவரை ஆங்கிலம் ஒரு பாடமொழியாக நீடிப்பது நியாயமாக இருக்கலாம். அப்போதும் அதனைத் தவிர்க்க முடியாத ஒரு தீமையாகவே கருத வேண்டும்.

"எங்கெங்கும் தமிழ்" என்ற நிலை ஏற்பட்ட பிறகு கல்லூரிக் கட்டத்தில் மட்டுமே ஆங்கிலம் ஒரு பாடமொழி யாக வைக்கப்பட வேண்டும். ஆம்; இந்திய மொழியல்லாத சீன, ருஷ்ய, பிரெஞ்சு மொழிகளுக்கு இந்தியாவில் எந்த அந்தஸ்து வழங்கப்படுகிறதோ, அதே அந்தஸ்துதான் ஆங்கில மொழிக்கும் வழங்கப்பட வேண்டும். ஏனெனில், அவையனைத்துமே சாதாரண பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையோடு சம்பந்தப்படாத அந்நிய மொழிகளாகும். அந்நிய மொழிகளில் வேறு எந்த மொழியையும்விட ஆங்கில மொழியிலேயே அதிகப்படியான பயிற்சி பெற ஒருவர் விரும்பினால், அதற்கான வசதிகளை அரசாங்கம் செய்து தருவதில் தவறில்லை. ஆனால், அது தனிநபரின் விருப்பத்தை ஒட்டியதாக இருக்க வேண்டும். சமுதாயம் முழுவதற்குமான பொது நியதியாக-கட்டாய விதியாக இருக்கக் கூடாது. இந்தியாவின் மிகப் புராதன மொழி யாகவும் இந்திய மக்களின் சமய வழிப்பட்ட கலாச்சாரத் தோடு இரண்டறப் பிணைந்துவிட்டதாகவும் உள்ள சமஸ் கிருத மொழியும் இதே நிலையில்தான் வைக்கப்பட்டுள்ளது.

கல்லூரி கட்டத்தில்தான் !

இங்கு மட்டுமல்ல; உலகில் உள்ள ஒவ்வொரு நாட் டிலும் அந்நிய மொழிகள் கல்லூரி கட்டத்தில்தான் பயிற்றுவிக்கப்படுகின்றன. தென்னிந்திய மொழிகளில் ஒன்றை வட இந்திய மக்களுக்குப் பயிற்றுவிக்கத் திட்ட மிட்ட மத்திய அரசு கூட, வாரணாசி (காசி)ப் பல்கலைக் கழகத்திலும், டில்லிப் பல்கலைக் கழகத்திலும்தான் பாட மாக வைத்திருக்கிறது. அங்கும்கூட விருப்பப் பாடமாகத் தான்.

காந்தி அடிகள்கூட "கல்லூரி கட்டத்திற்குக் கீழே ஆங்கில மொழியைப் பயிற்றுவிப்பதற்கு ஒருபோதும் நான்

அனுமதிக்க மாட்டேன்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளார். இதனை "மாணவருக்கு" என்ற தலைப்பில் வெளியாகியுள்ள நூலில் காணலாம்.

பெண்களுக்கும் கட்டாயமா ?

தமிழக ஆட்சி, ஆரம்பப் பள்ளியில் மூன்றும் வகுப்பு தொடங்கி கல்லூரிப் படிப்பு முடியும் வரை ஆங்கிலத்தைக் கட்டாயமாகப் பயிற்றுவிக்க எண்ணியிருக்கிறது. இது ஒரு இடைக்கால ஏற்பாடாகவும் இல்லை. கன்னித் தமிழ் உள்ள வரை, தமிழ் இனம் உள்ளவரை, தமிழ் நிலம் உள்ள வரை 3-ம் வகுப்பிலிருந்து கல்லூரிப் படிப்பு முடியும் வரை பரங்கி மொழியும் கட்டாயப் பாடமொழியாம்!

புறங்கையால் மூக்கைத் துடைத்து ஈன்ற அன்னையின் முழங்கிலேறிக் குதிக்கும் பச்சிளங் குழந்தைக்கும் பரங்கி மொழிப் போதனையாம்! இது, உலகில் எந்த ஒரு நாட்டிலும் இல்லாத கொடுமை! தமிழ்க் குழந்தைகளுக்குச் செய்யும் கொடும் பாவம்! மனைத் தக்க மாண்புடையவளாகி, தமிழ் மரபுக்குரிய பண்புகளையெல்லாம் காக்கப் பொறுப்பேற்க விருக்கும் மாணவியருக்குப் பரங்கி மொழி கட்டாயப் பாடமாம்! என்ன கொடுமை!

ஆரம்ப ஆசிரியர் அல்லல் !

இந்த மாநிலத்திலுள்ள 26,500 ஆரம்பப் பள்ளிகளிலும் பரங்கி மொழியைத் திணிப்பதற்கேற்ப ஆரம்ப ஆசிரியர்களில் சுமார் 60.000 பேருக்கு ஆங்கில மொழி போதிப்பதற்கான மறுபயிற்சி அளிக்கப்படுகிறது! இந்தப் "புனித"க் காரியத்திற்கு பிரிட்டிஷ் கவுன்சிலின் உதவியையும் பெற்றுவருகிறது நம் அரசாங்கம். அண்மையில் தமிழகத்திலுள்ள ஒரு மாவட்டத்தைச் சார்ந்த ஆரம்ப

ஆசிரியர் சங்க நிர்வாகிகள் இருவர் என்னைச் சந்தித்தனர் அவர்கள்.

"ஆரம்பப் பள்ளிகளில் பிள்ளைகளுக்கு ஆங்கிலப் பாடம் போதிக்கும்போது, அவர்களோடு ஆங்கிலத்திலேயே பேச வேண்டும். தமிழில் பேசக்கூடாது-என்று எங்களுக்கு ஆணை பிறந்திருக்கிறது. இதற்குத் தகுதியில்லாத ஆரம்ப ஆசிரியர்கள் கதி என்னாகுமோ என்று நாங்கள் அஞ்சுகின்றோம்"

—என்று கூறினர். இது சரியான தகவல் என்றால் இந்த மாநிலத்தில் உள்ள அத்தனை ஆரம்பப் பள்ளிகளும் 'கான்வென்டுப்' பள்ளிகளாக மாற்றப்படுகின்றன என்றே சொல்ல வேண்டும். இதனால், ஆங்கில மொழியின் ஆதிக்கம் அம்மொழியின்பால் வளர்ந்துள்ள மோகம் அடுத்துவரும் தலைமுறைகளுக்கும் நீடிக்க அரசாங்கமே ஏற்பாடு செய்வதாகின்றது.

பாரதியார் பதறியழுதார்!

மெக்காலே கல்வித் திட்டத்திலுள்ள பிரதான குறை ஆரம்பப் பள்ளிகளிலேயே ஆங்கிலத்தைப் புகுத்தியதுதான். அதனாலேயே தேசபக்தியுடைய இந்தியத் தலைவர்களால் மெக்காலே திட்டம் விஷத்தைப் போல வெறுக்கப் பட்டது.

"ஏதோ நாகரீக சமூகத்திலே பழகுவதற்கு ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும் என்ற உணர்ச்சியை சிறுமியர்—சிறுவருக்கு நாம் ஊட்டுவது கூடாது. அப்படிச் செய்வது இந்த நாட்டு ஆண் குலத்துக்கும், அதனினும் முக்கியமாகப் பெண் குலத்துக்கும் தீங்கிழைப்பதாகும்."

—("மாணவருக்கு"-பக். 40)

என்று கூறியுள்ளார், காந்தியடிகள். கவியரசர் பாரதியார், பிள்ளைப் பருவத்தில் தன் தந்தை தனக்குப் பரங்கி மொழிப் பயில்வித்ததைப் பற்றிக் கூறுங்கால்,

குதிலாத உளத்தினன் எந்தைதான்
சூழ்ந்தெனக்கு நலஞ்செயல் நாடியே
ஏதிலார் தரும் கல்விப் படுகுழி
ஏறி உய்தற் கரிய கொடும்பிலம்
தீதியன்ற மயக்கமும் ஐயமும்
செய்கை யாவினும் ஏய சிரத்தையும்
வாதும் பொய்ம்மையும் என்ற விலங்கினம்
வாழும் வெங் குகைக்கு என்னை வழங்கினன்

என்று தம் சுய சரிதையில் பாடியுள்ளார்.

"ஏதிலார்" என்பது, அந்நியரான ஆங்கிலேயரைக் குறிப்பதாகும். தன் தந்தை, தன்னை முயற்சி செய்தும் மேலேற முடியாத ஒரு குகையில்-படுகுழியில் தள்ளிவிட்டதாகக் கூறுகின்றார், பாரதியார். ஆனால், காந்தியப் பாதையில் நடைபோட்டுச் செல்லும் காங்கிரஸ் ஆட்சி, பாரதியாரின் பாடல்களிலே பற்றுடைய கல்வி அமைச்சர் மழலைமொழி பேசும் பாலகர்களுக்கும் பரங்கி மொழியைப் பாடமாக்கியுள்ளார்!

கல்வி அமைச்சர் நிலை

நமது கல்வி அமைச்சர்பால் எனக்கு மட்டற்ற மதிப்பு உண்டு. தமிழை ஆட்சி மொழியாகவும் பயிற்சி மொழியாகவும் அவர் செய்த பிறகு அன்னாரைத் தமிழை வாழ்விக்க வந்த தவப் புதல்வராகவும் யான் கருதுவதுண்டு. ஆனால், 'கலம் பாலில் துளிவிஷம்' என்றதுபோல, தமிழின் வளர்ச்சிக்கு அவர் இதுவரை செய்துள்ள தொண்டெல்லாம் பாழாகிவிடக்கூடிய வகையில் ஆரம்பப் பள்ளியில்

ஆங்கிலத்தைத் திணிக்கத் திட்டமிட்டு விட்டார் என்பதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை.

இந்த நாட்டில் பரங்கிமொழி ஆட்சி நடைபெற்ற போதே மெக்காலே கல்வித் திட்டப்படி ஆரம்பப் பள்ளியில் மூன்றும் வகுப்பு தொடங்கி பரங்கிமொழி பயிற்றுவிக்கப் பட்டு வந்தது. அந்த முறை அநியாயமானதென்று கருதப் பட்டதால், 1937-ல் காங்கிரஸ் கட்சி அதிகாரத்திற்கு வந்த பிறகு ஆரம்பப் பள்ளியிலிருந்து பரங்கி மொழி வெளியேற்றப்பட்டது.

மெக்காலே திட்டம்

ஆனால், அதே காங்கிரஸ் ஆட்சிதான் ஆரம்பப்பள்ளி யில் திரும்பவும் ஆங்கில மொழியைத் திணித்திருக்கிறது. இதிலிருந்து கல்வித் துறையில் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு தெளிவான—தீர்க்க தரிசனமான கொள்கை இதுவரை உருவாக வில்லை என்பது புலனாகிறது.

மெக்காலேயின் கல்வித் திட்டம் கீழ்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

● அரசாங்க நிர்வாகத்திற்குத் தேவைப்படும் சிப்பந்திகளைத் தயாரிப்பது.

● உயர்நிலைப் பள்ளியில் முதல் படிவம் தொடங்கி ஆறும் படிவம் வரை பூகோளம், வரலாறு, கணக்கு, விஞ்ஞானம் ஆகிய பாடங்களெல்லாம் பரங்கி மொழியைக் கருவியாகக் கொண்டு போதிப் பதற்காக மாணவர்கட்கு ஆரம்பப் பள்ளியிலேயே அம்மொழியில் போதிய பயிற்சியளிக்க வேண்டு மென்பது.

● இதற்கெல்லாம் மேலாக, பாரத மக்களின் சுதந்திர உணர்ச்சியை—சொந்தக் கலாச்சாரத்தைக் கொல்லும் நஞ்சாகவும் பரங்கி மொழியைப் பயன் படுத்த வேண்டும் என்பது.

தேசியக் கல்வி தேவை

ஆங்கிலேயர் வெளியேறிய பிறகு மெக்காலேயின் கல்வித் திட்டம் நமக்குத் தேவையற்றதாகி விட்டது. அதுமட்டுமல்லாமல், மெக்காலேயின் திட்டத்திற்கு நேர் எதிரான ஒரு கல்வித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரவும் நாடாள்வோர் கடமைப்பட்டு விட்டனர். தமிழக ஆட்சி தமிழிலேயே நடைபெற வேண்டும் என்ற கொள்கை சட்ட வடிவம் பெற்றுவிட்டது. அதனால், அரசாங்கச் சிப்பந்திகளை உற்பத்தி செய்ய ஆங்கிலத்திற்கு மாறாகத் தமிழ் தேவையாகி விட்டது. உயர்நிலைப் பள்ளிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்கி விட்டதால் ஆரம்பப் பள்ளிகளிலேயே ஆங்கிலத்தைப் போதிக்க வேண்டிய அவசியமில்லாமற் போய்விட்டது. அத்துடன், பல்கலைக் கழகக் கட்டத்திலும் தமிழைப் பயிற்சி மொழியாக்கத் திட்டமிட்டு விட்டதால், உயர்நிலைப் பள்ளியில் ஆங்கிலம் பயின்றாலே போதும், ஆரம்பப் பள்ளியில் பயிலத் தேவை இல்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டது. மற்றும், மாணவர்களிடையே சுதந்திரத்தின்பால் பற்றுதலையும், அடிமைத் தனத்தின்பால் வெறுப்பையும் வளர்ப்பதற்குப் பயன் படுகிற ஒரு புதிய-தேசியக்கல்வித் திட்டத்தை நடைமுறைக் குக் கொண்டு வரவேண்டிய கடமை ஆட்சியினர் மீது சுமந்திருக்கிறது.

நிலைமை மாறிவிட்டது

இந்த உண்மைகளையெல்லாம் மறந்ததனாலோ, அல்லது வேறு ஏதோ ஒரு காரணத்துக்காகவோ, மெக்காலேயின்

செத்துப்போன கல்வித் திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப் புறப்பட்டிருக்கிறது, நமது மாநில அரசாங்கம். ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் பாலகர்கள், மூன்றாம் வகுப்பில் தமிழ்—ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளைப் பயில்வ தென்பது எளிதன்று. மெக்காலே கல்வித் திட்டம் நடைமுறைக்கு வந்த காலத்தில் வாழ்க்கை வசதிகளையுடைய குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளே அரசாங்கப் பாடத் திட்டப்படி இயங்கும் பள்ளிகளில் கல்வி பயின்றனர். அதனால், அந்தப் பிள்ளைகள் எட்டாம் வயதிலேயே இலக்கண வேறுபாடுடைய இரண்டு மொழிகளைக் கற்பது ஓரளவு சாத்தியமாக இருந்திருக்கலாம்.

இன்று பகல் சோற்றுக்குத் திண்டாடும் பரம தரித்திரர்களின் பிள்ளைகளெல்லாம் கட்டாயக் கல்விச் சட்டப்படி பள்ளிக்குக் கொண்டுவரப் பெறுகின்றனர். அதனாற்றான் இலவச மதிய உணவு தரவேண்டிய அவசியம் மாநில ஆட்சிக்கு ஏற்பட்டது. கட்டாய—இலவசப் படிப்பு, இலவச உணவு, இலவச உடை ஆகிய வசதிகளுக்காகவும் பள்ளிகளுக்கு வரும் ஏழைப் பிள்ளைகள் மீது இரண்டு மொழிகளைச் சுமத்துவது கொடுமையினும் கொடுமையாகும். இதனால், சாதாரணத் தொழிலாளர் குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் ஆரம்பக் கல்வியைக்கூட பூர்த்தியாகப் பெற முடியாமல், படிப்பை முடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

இது ஒருபுறமிருக்க, பால்மணம் மாறாப் பருவத்திலேயே பரங்கி மொழியைப் பயிற்றுவிப்பதால், தாய்மொழிப் பற்று வளருவது தடைப்படக்கூடும். எது தாய் மொழி?—என்று புரிந்துகொள்ள முடியாமல், குழந்தைகள் இரண்டையும் சமமாகக் கருத நேரும். கடந்த தலைமுறையினர் இந்த விபத்துக்கு இரையாகி இருப்பதைக் கண்

கூடாகப் பார்க்கிறோம். ஆரம்பப் பள்ளியிலேயே பரங்கி மொழி பயின்றால், "ஆங்கிலம் அந்நிய மொழி என்பது தவறு. அதனை இந்தியத் தேசிய மொழிகளில் ஒன்றாக ஏற்க வேண்டும்" என்று கிளர்ச்சி செய்யும் அளவிற்குக் கடந்த தலைமுறையைச் சார்ந்த பலர் முன்வந்திருக்கும் பரிதாபத்தையும் பார்க்கிறோம். இந்த இழிநிலைக்கு வருங் காலத் தலைமுறையையும் பலியாக்க வேண்டுமா? அதிலும், ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் பெண் குழந்தைகளின் இதயங்களிலும் பரங்கி மொழி மோகத்தைப் புகுத்த வேண்டுமா? என்ன கேடு! நினைத்தாலே நெஞ்சு கொதிக் கிறது!

எட்டாம் வருடத்திலேயே இளங்குழந்தைகள்—ஆண், பெண் அனைத்தும்—பரங்கி மொழியைக் கட்டாயமாகப் பயின்றாக வேண்டுமாம்! இது என்ன பாரத நாடா? அல்லது பரங்கியர் நாடா?

உலக நியதிப்படி, கல்லூரிக் கட்டத்தில் பரங்கி மொழி யைப் பயின்றாலே போதும். இடைக்கால நிலை இதற்கு மாறாக இருக்கலாம். ஆனால், இறுதியான நிலை இதுவாகத் தானிருக்க வேண்டும். ஆங்கிலம் தேவைப்படுவது ஏன்? தமிழிலுள்ள இலக்கியச் செல்வங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும், அயல் நாடுகளுக்குச் செல்லவும், ஆராய்ச்சி நடத்தவும், உலக அறிவியல் நூல்களைப் படித்து அவற்றில் நமக்குத் தேவையானவற்றை தாய்மொழியில் மொழி பெயர்க்கவுமாகும். அந்தப் பணிகளுக்கான ஆற்றல், கல்லூரிக் கட்டத்தில் பரங்கிமொழி பயின்றாலே கிடைத்து விடும்.

தமிழில் 'தேம்பாவணி' எழுதிய பெஸ்கி துரையும், மணிவாசகரின் திருவாசகத் தேன் குடித்து மயங்கிய போப் துரையும், தமிழைப் படித்து 'ஒப்பிலக்கணம்' என்ற உயரிய

நூலை யாத்துத் தந்த கால்டுவெல் துரையும் ஆரம்பப் பள்ளியிலேயே தமிழ்ப் பயின்றவர்களல்லர். கல்வியின் மேல் தளத்தில்தங்களுக்கு அன்னியமொழியான தமிழைப்பயின்று ஆராய்ச்சி அறிவையும் அவர்களால் பெற முடியுமானல், தமிழ் மக்களும் கல்லூரிக் கட்டத்தில் பரங்கி மொழி பயின்று அதன் மூலம் உலகையறிய முடியாதா? அதற்கேற்ற வகையில் ஆங்கிலத்தை எளிதாகக் கற்கும் பாடப் புத்தகங்களைத் தயாரிக்கலாமே!

> "ஆங்கில மொழிப் பயிற்சியை இந்நாட்டில் கட்டாயப் பாடமாக்க முடியாது. அதுமட்டுமல்ல; கட்டாயப் பாடமாக்கவும் கூடாது; தற்கால ஆங்கில மொழியில் சாதாரண அறிவுதான் நமக்குத் தேவை. எழுதவும் பேசவும் தெரிய வேண்டும்; இலக்கணம், மொழி மரபு, உச்சரிப்பு ஆகிய விதிகள் நன்ருகத் தெரிந்திருக்க வேண்டும். அவ்வளவு போதும்"

என்று அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளராக இருந்த—இன்று திட்டக் கமிஷன் உறுப்பினராக இருக்கின்ற ஸ்ரீமந் நாராயண் அகர்வால் 'போதனு மொழி' என்ற தமது நூலில் கூறுகின்ருர்.

ஆங்கிலேயரைப் போலவே...

ஆங்கிலக் கல்வியின் தரத்தை உயர்த்தப் போவதாகச் சொல்லிக்கொண்டு ஆரம்பப் பள்ளிகளில் அம்மொழியைத் திணிக்கின்றது ஆட்சி. 'தரமான ஆங்கிலம்' என்பதன் பொருள், **ஆங்கிலேயரைப் போலவே தமிழ் மக்களும் ஆங்கிலம் பயில வேண்டும்**—என்பதா? 'ஆம்' என்ருல், அது அவசியம் தானு? 'அவசியம்' என்ருலும், உயர்தரக் கல்வி வரை செல்லும் பாக்கியசாலிகள் சிலர் ஆங்கிலத்தில் திறமான புலமை பெற வேண்டும் என்பதற்காக, ஆரம்பப் பள்ளி

களில் நுழையும் அத்தனைக் குழந்தைகள் மீதும் ஆங்கி லத்தைத் திணிக்க வேண்டுமா?

தங்கள் பிள்ளைகளுக்கு உயர்தரமான ஆங்கிலம் பயிற்றுவிக்க விரும்பும் கறுப்புத் துரைமார்கள், தங்கள் தேவைக்கென தனியாக ஆங்கில பாணியில் ஆரம்பப் பள்ளிகளை அமைத்துக் கொள்ளலாமே! அதற்கு மேலும், ஆங்கிலத்தைக் கருவி மொழியாகக் கொண்டு பாடங்களைப் போதிக்கும் உயர்நிலைப் பள்ளிகளையோ, கல்லூரிகளையோ கூடத் தங்கள் சொந்த முயற்சியால் துவக்கி நடத்திக் கொள்ளலாமே!

அன்று தமிழிருந்த நிலையில்...

வெள்ளைப் பரங்கியர் பாரதத்தை யாண்ட காலத்தில், சமஸ்கிருதம்—தமிழ் போன்ற இந்திய மொழிகளில் சமூக, சமய இலக்கியங்களில் அதிகப்படியான புலமை பெற விரும்புவோர் நிலை அதுவாகத்தானே இருந்தது. திருவை யாறு, கரந்தை, பேரூர், மயிலம், தருமபுரம் ஆகிய ஊர் களில் இன்றுள்ள தமிழ்க் கல்லூரிகள் சைவ மடங்களின் முயற்சியால் துவக்கப்பட்டவைதானே !

இதுபோல, தரமான ஆங்கிலக் கல்வி கற்பதைத் தனிப் பட்டோர் உரிமையாக விட்டுவிட வேண்டும். சமூக விதி யாக்கிவிடக் கூடாது. ஒருபுறத்தில் ஆங்கிலத்தின் தேவை யைக் குறைக்க முயல்வதும், மற்றொரு புறத்தில் அம் மொழியில் பெறும் கல்வியின் தரத்தை உயர்த்தப் பெருஞ் செலவில் திட்டமிடுவதும் முரண்பட்ட செயலாகும்.

தமிழை ஆட்சி மொழியாகவும், பயிற்சி மொழி யாகவும், நீதி மன்றங்களில் நிர்வாக மொழியாகவும் செய் வதற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகள் நிறைவெய்தி விட்டால், ஆங்கிலத்தின் தேவை தமிழகத்தில் பெருமள

வுக்குக் குறைந்துவிடும். இன்னும், இந்த மாநிலத்து ஆட்சியினரும் ஏற்றுக்கொண்டுள்ள கொள்கைப்படி சிறிது காலங் கழித்தேனும் மத்தியில் இந்தி ஒன்றே ஆட்சிமொழி யாகிவிட்டால், இந்த நாட்டில் வேறு அன்னிய மொழிகளுக் கில்லாத விசேஷ சலுகையை ஆங்கிலத்திற்குத் தர வேண்டிய அவசியமும் இருக்காது.

ஆகவே, எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் ஆரம்பப் பள்ளியிலேயே பச்சிளம் பாலகர்கள் அத்தனை பேருக்கும் பரங்கி மொழியைக் கட்டாயமாகப் பயிற்று விக்க முயல்வது கொடுமையாகும்.

இடைக்கால நிலை

தமிழகத்துப் பள்ளிகளுக்கான பாடத் திட்டத்தில், தமிழ் மொழி நிலையான ஒரு இடத்தைப் பெறுகின்றது. ஆரம்பப் பள்ளி தொடங்கி உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடியும்வரை. தவிர்க்க முடியாத காரணத்தால், ஒரு இடைக்காலத்திற்கு-உயர்நிலைப் பள்ளியில் பரங்கி மொழிக்கும் இடமளிக்கிறோம். அதற்குமேல் இந்தியா முழுவதற்குமான பொதுமொழி ஒன்றிற்கும் பாடத் திட்டத்தில் இடந்தர வேண்டியிருப்பதைத் தவிர்ப்பதற் கில்லை. அந்தப் பொதுமொழி ஆங்கிலந்தான் என்று கொண்டால், பாடத் திட்டத்தில் தமிழுக்கும் ஆங்கிலத் துக்கும் இடமளிப்பதோடு பிரச்சனை தீர்ந்துவிடும். அப்புறம் மூன்றாவது ஒரு மொழியைப் பாடத் திட்டத்தில் திணிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. ஆனால், ஆங்கிலம், இந்த நாட்டின் பொதுமொழியாக இருப்பதற்கான ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை. அது பாரத மக்கள் செய்த பாக்கியம் என்றும் சொல்லலாம். முதலில், 'பொது மொழி' என்பதன் பொருளை அறிந்துகொள்ள முயல்வோம்.

பொது மொழி எது?

இந்தியாவில், அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப் பெற்ற பதினான்கு மொழிகளில், உருது-சமஸ்கிருதம் நீங்கலாக, 'அரசு மொழி' என்ற சிறப்புக்குரியவை பன்னிரண்டு மொழிகளாகும். அவற்றில், ஒவ்வொரு மொழிக்குரிய மக்களும், தத்தம் மொழியைத் 'தாய்மொழி'யாகக் கருதி, அதன்பால் பக்தி அல்லது பற்றுச் செலுத்தி வருகின்றனர். அந்தப் பக்திக்கு அல்லது பற்றுக்குக் கேடு சூழாத வகையில் பொது மொழியைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது.

ஒருசில குடும்பங்களுக்கே...

ஆங்கிலம், கற்பதற்குக் கஷ்டமான மொழியாக இருப்பதால், கல்லூரி மட்டத்தில் உயர்தரக் கல்வி கற்றவர்கள் மட்டுமே அம்மொழியில் எழுதவும் பேசவும்—'திறமை' பெற முடிகின்றது. அதுவும் ஓரளவுக்குத்தான். இது காரணமாக, ஆங்கிலத்தில் உயர்தரக் கல்வி பெறுவதற்கான வசதியும் வாய்ப்பும் மக்கள் எல்லோருக்கும் சமமாக இல்லை. ஒரு சில குடும்பங்களுக்கே இருக்கின்றன. இனியும், எவ்வளவுதான் வசதிகளும் வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுத்தாலும், உயர்தரக் கல்வி கற்றவர்கள் சிலராகத்தான் இருக்க முடியும். இப்போது ஆங்கிலம் கற்றவர்

தொகை நூற்றுக்கு 1 சதவிகிதம் என்றால், எதிர்காலத்தில் 10 சதவிகிதமாக உயரலாம் என்றே வைத்துக்கொள்வோம். அதற்குமேல் நூற்றுக்கு நூறு பேரும் உயர்தரக் கல்வி கற்பதென்பது என்றைக்குமே சாத்தியமாகாது.

கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளாக இந்தியாவில் ஆங்கிலமே பொது மொழியாக இருந்து வருவதால், இனியும் அதுவே நீடிக்க வேண்டும் என்றும் ஆங்கிலம் படித்த 'மேதைகள்' சிலர் சொல்லக் கேட்கிறோம். இந்திய மக்களில் நூற்றுக்கு ஒன்றரை சத விகிதத்தினரே பயின்றுள்ள, இனியும் பத்து சதவிகிதத்தினருக்கு மேல் பேசவும் எழுதவும் ஆற்றல் பெற முடியாத ஆங்கில மொழியை இந்தியாவின் பொது மொழி என்று சொல்வது ஏமாற்றுப் பேச்சு! ஆம்; மக்கள் எல்லோரும் பயில்வதற்கு ஏற்றதல்லாத பரங்கி மொழி, இந்திய மக்களிடையே உறவு மொழியாக இருக்க முடியும் என்பதும் மூடநம்பிக்கை! உறவுக்கு இந்திமொழி, மத்திய அரசில் உத்தியோகம் பெற ஆங்கில மொழி என இரண்டு மொழிகளை ஏற்பதும் சாத்தியமில்லை.

புதிய சாதி வேற்றுமை

ஆங்கிலேயர் காலத்திலும், ஆங்கில மொழியானது சமுதாயத்தில் மேல் தளத்திலுள்ள மக்களின் நலனைக் கருதியே பள்ளிகளில் திணிக்கப்பட்டது. ஆங்கிலேயர் வகுத்த கல்வித் திட்டமானது, சாதாரணப் பாமர மக்களிடமிருந்து படித்த மக்களைப் பிரித்துவிட்டது. ஆம்; அந்த இரு சாராரையும் ஏற்றத் தாழ்வுள்ள-இழிவு சிறப்புக்குரிய இருவேறு சாதிகளாக்கிவிட்டது. அதன் விளைவாக, உத்தியோகங்களும் உயர் பதவிகளும் உயர்ந்து விளங்கும் ஒரு சில குடும்பங்களுக்கே உரிமையாகிவிட்டன.

"அரசாங்க நிர்வாகம் ஆங்கிலத்திலேயே நடைபெற வேண்டுமென்று கூறுபவர்கள், முன்னேறிவிட்ட சாதிகளைச் சார்ந்தவர்களே. ஆங்கிலம் தெரியாதவர்கள், கல்வி கற்க வசதியில்லாத பின்தங்கிவிட்ட சாதிகளைச் சார்ந்தவர்களே. அவர்கள் ஆங்கிலம் கற்பதற்காக உபகாரச் சம்பளம் என்னும் 'லஞ்சம்' வழங்கப்படுகின்றது. ஆங்கிலம் கற்றவர்களின் நிரந்தர அடிமைகளாக மக்கள் வாழவேண்டும் என்பதுதான் இந்த ஏற்பாட்டின் நோக்கம். பின்தங்கிவிட்ட சாதியினர் கல்வி கற்பதற்கு ஊக்கமளிக்கப்படுகின்றனர். அவர்களும் சுகஜீவிகளான, முன்னேறிவிட்ட சாதிகளோடு சேர்ந்துவிடவேண்டுமாம். இது, அபாயகரமான போக்காகும்."

இது, காந்தியடிகளின் சீடர்களில் தலைசிறந்தவரான காகா கலேல்கர் என்பவர், 6-5-55-ல்—அப்போது ஆந்திரத் தலைநகராக இருந்த-கர்நூல் நகரில் பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் தெரிவித்த கருத்தாகும்.

பொது மொழி இந்தியே!

இந்தியாவில் நாம் ஏற்கக் கூடிய பொது மொழி, இந்திய மொழிகளில் ஒன்றுக, இந்தியர் அனைவருமே கற்பதற்கு வாய்ப்புடைய எளிய மொழியாக இருத்தல் வேண்டும். அப்போதுதான், அந்தப் பொதுமொழி மூலம் முன்னேறுவதற்கு மக்கள் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் கிடைக்கும். அத்தகைய பொதுமொழி இந்தி மொழிதான் என்பது அரசியல் சட்டப்படி உறுதிப்பட்டுவிட்டது. இதுவரை "இந்தி ஒழிக" என்று குரல் கொடுத்தவர்கள் கூட, "ஒரு இடைக்காலத்திற்கு மத்திய அரசில் ஆங்கிலமும் துணை மொழியாக இருக்க வேண்டும்" என்ற நிபந்தனையோடு, இந்திதான் இந்தியாவின் பொதுமொழி என்பதை

வெளிப்படையாக ஏற்றுக்கொண்டு விட்டனர். "என்றென்றும் ஆங்கிலம்" என்று குரல் கொடுக்கும் அறிஞர் ராஜாஜிகூட, மத்திய ஆட்சியின் நிர்வாகத்திற்காக அல்லாமல், இந்திய மக்களிடையே உறவையும், தேசிய ஒற்றுமையையும் வளர்ப்பதற்கான பொதுமொழியாக இந்தியை ஏற்றுக்கொண்டுள்ளார். இவர்களுக்கு அப்பாலும் "இந்தி எதிர்ப்பாளர்" இருப்பார்களானால், அவர்கள்கூட, தமிழ் மக்கள் தங்கள் விருப்பத்தின் பேரில் இந்தி பயில்வதை எதிர்க்கமாட்டார்கள். ஆகவே, தமிழகத்துப் பள்ளிகளுக்கான பாடத் திட்டத்தில் இந்தி மொழிக்கும் இடம் அளித்தாக வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.

ஆட்சிமொழியாவ தெப்படி?

ஒரு விஷயத்தை இங்கு தெளிவுபடுத்துவது, அவசியம். அதாவது, இந்தியைப் பொது மொழியாக ஏற்பது வேறு; இந்திய நடுவிடத்தின் ஆட்சிமொழியாக ஏற்பது வேறு. இரண்டையும் ஒன்றுக்கிக் குழப்புவது, அறிவுடைமையல்ல.

'இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி' என்ற கொள்கை அரசியல் சட்டப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டு விட்டதாலேயே, ஆட்சி மொழிக்குரிய தகுதி இந்திக்கு வந்துவிடவில்லை. இன்றைய நிலையில், இந்தியும் மாநில மொழிகளில் ஒன்றுதான். இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களெல்லாம் அம்மொழியைப் பயின்ற பின்னரே, அது பொது மொழிக்கான அந்தஸ்தைப் பெறுகின்றது. அதன் பிறகே, மத்தியில் ஆட்சி மொழியாகவும், மாநிலங்களிடையே தொடர்பு மொழியாகவும் இந்தி வர இயலும். அப்போதும், மொழித் துறையில் தமிழுக்குள்ள தனித்தன்மைக்

கேற்ப இந்தியோடு அதற்கு கலாசாரத் துறையில் சம அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும்.

இந்தியாவின் தேசிய ஐக்கியம் வலுப் பெறுவது, இந்தியை ஆட்சிமொழியாக்குவதில் இல்லை. குமரி முதல் இமயம் வரையுள்ள மக்கள் எல்லோரும் இந்தியைப் பயின்று தேர்ச்சி பெறுவதில்தான் இருக்கிறது.

பொது மொழியாக இந்தியை ஏற்குமிடத்தும், ஆரம்பப் பள்ளிகளுக்கான பாடத் திட்டத்தில் இந்திக்கு இடமளிப்பதற்கில்லை. ஆரம்பப் பள்ளியில் ஆங்கிலத்தைத் திணிப்பதற்கு எதிராகச் சொல்லப்பட்ட காரணங்கள் அனைத்தும் இந்தி மொழிக்கும் பொருந்தும். ஆகவே, ஆரம்பப் பள்ளியில் தமிழ் ஒன்று மட்டுமே கட்டாயப் பாடமொழி.

பள்ளிகளில் இந்தி

உயர்நிலைப் பள்ளியில் இந்திக்கு இடமளிப்பது அவசியம். அங்கும், நான்காம் படிவத்திலிருந்து இந்தி பயில்வதே பயனுடையதாக இருக்கும். முதல் படிவத்தில் ஆங்கில போதனை துவங்குவதால், அதே படிவத்தில் இந்திக்கும் இடமளிப்பது மாணவர்களைத் துன்புறுத்துவதாகும். இப்போது, நான்காம் படிவத்தில்தான் இந்தி போதனை ஆரம்பமாகின்றது. ஆனால், முதல் படிவத்திலிருந்து மூன்றாம் படிவம் வரை இந்தி பயிற்றுவிக்கப்படுவதையே அரசாங்கம் இன்னமும் விரும்புவதாகத் தெரிகின்றது. அதற்கு வசதி செய்வதற்காகத்தான், ஆரம்பப் பள்ளியிலேயே ஆங்கில போதனையை ஆரம்பிக்கிறார்களோ என்றும் ஐயுறவேண்டியிருக்கிறது.

இது எப்படியாயினும், நான்காம் படிவம் தொடங்கி ஆறாம் படிவம் வரை இந்தி போதிக்கப்படும் தற்போதைய

நடைமுறையை நாம் ஆதரிக்கலாம். மாறாக, முதல் படிவத்திலேயே இந்திப் பயிற்சி துவங்க வேண்டுமானால், முன்னரே யான் கூறியதுபோல, உயர்நிலைப் பள்ளியிலிருந்து ஆங்கிலம் வெளியேற்றப்படும்போதுதான் அது சாத்தியமாகும்.

"சுதந்தர"க் கூச்சல்

பயிற்சிமொழி "தமிழா, ஆங்கிலமா?" என்ற சிக்கலில் உரிமைப் பிரச்சினை ஒன்றும் எழுப்பப்படுகின்றது. "பயிற்சி மொழி எது?" என்பதில், இறுதியாக முடிவு எடுக்கும் உரிமை அல்லது பொறுப்பு, பல்கலைக் கழகத்தினுடையதா? அரசாங்கத்தினுடையதா? என்பதே அந்தப் பிரச்சினை - "பல்கலைக் கழகத்தினுடையதுதான்" என்கின்றனர் பரங்கி மொழிப் பக்தர்கள். அரசாங்கத் தரப்பிலோ, இதுபற்றித் தெளிவான கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. காரணம், காற்சட்டைக்குள் எலி புகுந்தாற்போல, அமைச்சரவை, அசெம்பிளி, அரசாங்க அலுவலகம், ஆளுங்கட்சி ஆகியவற்றி லெல்லாம் பரங்கிமொழிப் பக்தர்கள் புகுந்து கொண்டிருப் பதுதான்.

துணிவில்லை

நல்ல வேளையாக, தமிழுக்கு எதிராக வெளிப்படை யாகப் பரங்கி மொழிக்குப் பல்லாண்டு பாட அவர்களுக்குத் துணிவில்லை. அதனாற்றான் கொள்கையளவிலேனும் "பயிற்சி மொழி தமிழாகத்தான் இருக்க வேண்டும்" என்று அரசாங்கச் சார்பில் அறிவிக்க முடிந்தது கல்வி அமைச்சரால்! அத்துடன், அரசாங்க நிர்வாகத்திலுள்ள கல்லூரிகளில் ஒன்றிலேனும் தமிழைப் பயிற்சி மொழியாக்கவும் முடிந்தது..

அதற்குமேல் முன்னேறக் கல்வி அமைச்சருக்குச் சந்தர்ப்பம் சதி செய்கிறது போலும்! அறுைர்முன் "பயிற்சிமொழி எதுவென்பதில் இறுதி முடிவெடுக்கும் உரிமை அரசாங்கத்தினுடையதே" என்று அவர் அடித்துப் பேச இயலாதவராக இருக்கிறார். ஏன்? "பல்கலைக் கழக சுதந்தரத்தில் தலையிடுவது எனது கருத்தல்ல" என்றுகூடக் கூறி, பரங்கிமொழிப் பக்தர்களின் நல்லெண்ணத்தைப் பெற முயல்கிறார். மற்றும், தமிழைப் பயிற்சிமொழியாக்க மறுக்கும் கல்லூரிகளை, அதற்குத் திரைமறைவிலிருந்து துணை புரியும் பல்கலைக் கழகத்தைச் சட்டத்தின் வாயிலாக நிர்ப்பந்திக்கவும் தயங்குகின்றார்.

அமைச்சரின் ஊடற் போர்!

"1963-க்குப் பிறகும் பரங்கி மொழியைப் பயிற்சி மொழியாகக் கொள்ளும் கல்லூரிகளுக்கு அரசாங்கம் மான்யம் வழங்காது" என்று அறிவித்துவிட்டதனுலேயே, தனியார் துறைக் கல்லூரிகளைப் பணிய வைத்துவிட முடியும் என்று நம்புகின்றார் கல்வி அமைச்சர். ஆம்; தன்னேடு ஒத்துழைக்க மறுக்கும் பரங்கிமொழிப் பக்தர்களோடு "ஊடற்போர்" நடத்துகிறார் அமைச்சர்.

"சுதந்தரம்" என்பது, மக்களுடைய சொத்து. அதனை அவர்கள், "அரசாங்கம்" என்ற இயந்திரத்தின் மூலம் "சுக-வாழ்வாக" மாற்றிக்கொள்ள முயலுகிறார்கள். ஆம்; அரசாங்கத்திடமுள்ள அதிகாரங்களெல்லாம் நேராக மக்களிடமிருந்து வந்தவையே யன்றி, வானத்திலிருந்து விழுந்தவையல்ல. ஜனநாயக நாடான இந்தியாவில் மக்களுடைய பிரதிநிதித்துவ அமைப்புக்கள் பாராளு மன்றமும் சட்டசபைகளுமேயன்றி, சர்வகலா சாலைகளல்ல. இந்த நிலையில், சென்னைப் பல்கலைக் கழகத்திற்குள்ள "சுதந்தரம்", மக்களுடைய பிரதிநிதித்துவ-

அமைப்பான சட்டசபையின் மேலதிகாரத்திற்கு உட்பட்ட தாகத்தான் இருக்க முடியும்.

துணைவேந்தர் ; மணிமுடியல்ல !

ஏன் ? சட்டசபையால் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின் மூலம்தான் சென்னைப் பல்கலைக் கழகம் இயங்கி வருகின்றது. அமைச்சரவையின் சிபாரிசோடு கவர்னர் பெருமானால் நியமிக்கப்படும் துணைவேந்தர் மூலம்தான் பல்கலைக் கழகம் நிர்வகிக்கப்படுகின்றது. செனட் சபை உறுப்பினர்கள், துணைவேந்தர் பதவிக்கு மூவர்கொண்ட பட்டியல் ஒன்றைக் கவர்னருக்கு அனுப்புவதும், அவர்களிலே ஒருவரைக் கவர்னர் நியமிப்பதுமே, பல்கலைக் கழகத்தின் மீது கவர்னரோடு கூடிய மாநில ஆட்சிக்கு மேலதிகாரம் உண்டு என்பதைப் புலப்படுத்தும். "வைஸ் சான்சிலர்" என்பவர், பல்கலைக் கழகத்தின் மணிமுடியல்ல. அவருக்கு மேல் "புரோ சான்சிலர்" ஆகக் கல்வி அமைச்சரும், அவருக்கும் மேலாக "சான்சிலர்" ஆகக் கவர்னர் பெருமானும் இருக்கின்றனர் என்பதையும் மறந்து விடுவதற்கில்லை.

இவையெல்லாம், கட்டுப்பாடற்ற சுதந்தரம் பல்கலைக் கழகங்களுக்கு இல்லை என்பதனைப் புலப்படுத்துகின்றன அல்லவா ? கல்வித்துறையில் பல்கலைக் கழகத்திற்குச் "சுதந்தரம்" உண்டு என்றால், அது நிர்வாக சுதந்தரமாகத் தான் இருக்க முடியும். **கொள்கையை நிர்ணயிக்கும் சுதந்தரம் அல்லது அதிகாரம் அரசாங்கம் ஒன்றுக்குத்தான் உண்டு.** பல்கலைக் கழகத்திற்கு அது இல்லை—இருக்கவும் கூடாது.

சான்றுகக் கல்லூரிகளுக்கான பாடங்கள் தயாரித்தல், தேர்வு நடத்தல் இன்ன பிறவெல்லாம் முற்றிலும் நிர்வாகம் சம்பந்தப்பட்ட விஷயங்களாகும். அந்த விஷயங்

களைப் பொறுத்தவரையில் பல்கலைக் கழகத்திற்குள்ள "சம்பிரதாயச் சுதந்தரம்" கௌரவிக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்துவேற்றுமை யிருப்பதற்கில்லை.

மக்களுக்கே உரிமை

ஆனல், 'பயிற்சிமொழி தமிழா, ஆங்கிலமா?' என்பது முற்றிலும் கொள்கை சம்பந்தப்பட்ட விஷயமாவதோடு குடிமக்களுக்குள்ள சுயநிர்ணய உரிமையுமாகும். சில பல கொள்கைகளின் பேரில்தான் குறிப்பிட்ட ஒரு கட்சியிடம் அரசாங்க இயந்திரத்தை ஒப்படைக்கின்றனர் மக்கள். அதன் படி, "தமிழகத்தில் எல்லாத் துறைகளிலும் தமிழ் மொழி ஒன்றே பயன் படுத்தப்படும்" என்று காங்கிரஸ் கட்சி வாக்காளர்களுக்குத் தந்த உறுதிமொழியின் காரணமாக வும் அதனிடம் அரசாங்கத்தை ஒப்படைத்துள்ளனர்.

மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்பட்டுள்ள இந்தக் கொள்கை உடன்படிக்கைக்கு எதிராகச் செயல்பட பல்கலைக் கழகத்திற்கு உரிமையில்லை. மற்றும், மிக நீண்ட காலம் அன்னிய வல்லரசொன்றுக்கு அடிமைப்பட்ட பிறகு, இப்போதுதான் அரசியல் விடுதலை பெற்றிருக்கின் றது பாரதம். அதனல், ஆங்கில ஆட்சிக் காலத்தில், மக்கள் நலன்களுக்கு-ஜனநாயக நெறிகளுக்கு - பாரதக் கலாசாரத்திற்கு எதிராக அமுலிலிருந்து வந்த சட்ட திட்டங்களிலெல்லாம், புரட்சிகரமான மாறுதல்கள் காண வேண்டிய அவசர - அவசியக் கடமை அரசாங்கத்திற்கு உண்டு. அந்தக் கடமையின் ஒரு பகுதிதான் தமிழைப் பயிற்சி மொழியாக்க அரசினர் மேற்கொண்டுள்ள நட வடிக்கை. இதனை எதிர்க்கப் பல்கலைக் கழகத்திற்கு உரிமை இல்லை.

மாறுதல் காலம், மறவாதீர்!

'பல்கலைக் கழகத்திற்குக் கட்டுப்பாடற்ற சுதந்தரம் வேண்டும்' என்றோ; அல்லது 'கல்வித் துறையில் அரசாங்கம் தலையிடக் கூடாது' என்றோ கூறுவது, நீண்டகாலமாக சுதந்தர வாழ்வு நடத்திவரும் ஒரு நாட்டுக்குப் பொருந்துவதாக இருக்கலாம். ஆனால், ஒன்றரை நூற்றாண்டுக் காலம், பேசும் மொழியாலும், பிறந்த நாட்டாலும், பெற்ற நிறத்தாலும் அன்னியராகி விட்ட ஒரு இனத்தவருக்கு அடிமைப்பட்டிருந்து இப்போதுதான் விடுதலை பெற்றிருக்கும் பாரதத்திற்குப் பொருந்தாது.

ஆகவே, தமிழைப் பயிற்சி மொழியாக்குவதற்குள்ள தடைகளை யெல்லாம் தகர்த்தெறிய மாநில அரசினர் புதிய சட்டமொன்றைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதே தமிழரசுக் கழகத்தின் உறுதியான கொள்கை.

முடிவுரை

பொதுவாக, ஆட்சிமொழி—பயிற்சி மொழிச் சிக்கல், பாரதம் முழுவதற்குமான தேசியப் பிரச்சனையாகக் கருதப் பட வேண்டும். இந்தப் பிரச்சனையோடு அரசியல்-பொருளா தார-சமூக அம்சங்களும் கலந்திருத்தலை மறந்துவிடக் கூடாது. சுருங்கச் சொன்னால், பயிற்சி மொழிப் பிரச்சனை, சமுதாயப் புரட்சியாகக் கருதப்பட வேண்டும்.

இன்றையப் பாரத சமுதாயத்தில் ஒவ்வொரு துறையி லும் பரங்கி மொழிப் பக்தர்களே அமர்ந்துகொண்டு, மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்றனர். ஆகவே, தமிழைப் பயிற்சி மொழியாக்குவதற்கு ஆதரவாக, பொதுமக்கள் கிளர்ச்சி யொன்று உருவாக வேண்டும். இது, பரங்கி மொழி பயின்றவர்களிடையே மட்டும் நடைபெறும் கருத் துப் போராகவோ, அரசினருக்கும் பல்கலைக் கழகத்தினருக் கும் இடையே நடைபெறும் உரிமைப் போராட்டமாகவோ மட்டும் இருந்துவிடக்கூடாது.

நூற்றுக்கு ஒரு சதவிகிதத்தினராக உள்ள ஆங்கிலம் பயின்றவர்களின் ஆதிக்கத்திலிருந்து மற்றுள்ள தொண்ணூற்று ஒன்பது சதவிகிதத்தினரான பொது மக்கள் விடுதலை பெறவேண்டுமானால் ஆங்கில மொழியின் ஆதிக்கம் ஆணிவேரோடு அழிக்கப்பட வேண்டும்.

முடிந்துகொண்டிருக்கும் பழைய தலைமுறையைச் சார்ந்தவர்களே, தமிழுக்கு எதிராக ஆங்கிலத்தை ஆதரிக்கின்றனர். அந்த வகையில், ஆங்கிலத்தையே வாழ்க்கை மொழியாகக் கொண்டுவிட்ட பழந் தலைமுறையினருக்கும், தமிழையே வாழ்க்கை மொழியாகக் கொண்டுள்ள புதிய தலைமுறையினருக்கும் நடக்கும் போராட்டமே, பயிற்சி மொழிச் சிக்கல்.

இந்த உண்மைகளை யெல்லாம் கருத்தில் கொண்டு, ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை அழிக்கத் தமிழரசுக் கழகம் நடத்திவரும் போராட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு தமிழ் மக்களை வேண்டுகிறேன்.

வாழ்க, தமிழ் மொழி!
அழிக, ஆங்கில ஆதிக்கம்!

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

Jacket Printed at
Commercial Printing & Publishing House, Madras-1.